பக்கங்கள்: 13

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2054 சித்திரை 30 ஞாயிற்றுக்கிழமை 14.05.2023 கதிர் 185

### ஜனாதிபதியை அவசரமாக தொடர்பு கொண்டார் சம்பந்தன்

# திருமலையில் புத்தர் சிலையினை நிறுவும் முயற்சி தடுத்து நிறுத்தம்

### அஸ்கிரிய பீடத்துக்கும் அறிவித்தார் மாவட்டச் செயலாளர்

திருகோணமலை நகரத்தில் நெல்சன் தியேட்டருக்கு முன்பாக உள்ள காணியில் தாய்லாந்தில் இருந்து வரும் பிக்குகளால் புத்தர் சிலை வைப்பதற்கு எடுக்கப்பட்ட முயற்சிகளை உடன் தடுத்து நிறுத்த தமிழ் அரசுக்கட்சியின் மூத்த தலைவரும் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான இரா. சம்பந்தன் நடவடிக்கை எடுத்திருக்கிறார். அவர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை அவசரமாக தொலைபேசியில் தொடர்பு கொண்டு இது தொடர்பில் பேசியுள்ளார். இதையடுத்து இனங்களுக்கு இடையில் முரண்பாட்டை விதைக்கும் எந்த நடவடிக்கைக்கும் இடமளிக்கவேண்டாம் என்று ஜனாதிபதியின் செயலாளரால் உரிய அதிகாரிகளுக்கு உத்தரவிடப்பட்டது.



## இனி இது ரகசியம் அல்ல!

திருகோணமலை மாவட்டத்தின் நகரத்தில் உள்ள நெல்சன் தியேட்டருக்கு முன்னால் உள்ள காணியில், தாய்லாந்தில் இருந்து வருகை தரும் 40 தேரர்கள் அடங்கிய குழுவினர் புத்தர் சிலையொன்றை நிறுவி அங்கு வழிபாடுகளில் ஈடுபட்டதன் பின்னர் அங்கிருந்து அஸ்கிரிய பீடம் நோக்கி பாதயாத்திரையைத் தொடங்கவிருந்தனர்.

அதற்கு இடம் குறித்துக் கொடுத்தது வேறு யாருமல்லர் தொல்பொருள் திணைக்களத்தினர்தான். தாய்லாந்தில் இருந்து பிக்கு ஒருவர் வந்திறங்கிய இடம் என்று மகாவம்சத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாக அந்த இடத்தை அடையாளப்படுத்தியிருந்தார்கள். இதையடுத்து தாய்லாந்தில் இருந்து இன்று திருமலைக்கு வருகை தரவிருந்த 40 பிக்குகள் அந்த இடத்தில் 4

### கிளிநொச்சியில் நேற்று ‘முள்ளிவாய்க்கால் கஞ்சி’



யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் கிளிநொச்சி அறிவியல் நகர் வளாக ஏ - 9 வீதி சந்தியில் மாணவர்களால் ’முள்ளிவாய்க்கால் கஞ்சி’ நேற்று மதியம் வழங்கப்பட்டது.

இறுதிப் போரில் உயிர்நீத்த

### தையிட்டி விகாரைக்கு ஆதரவாகப் பேரணி



தையிட்டி விகாரைக்கு ஆதரவு தெரிவித்து யாழ்ப்பாண சிவில் சமூக அமைப்பு என்கிற அருண் சித்தார்த்தனின் அமைப்பால் நேற்றுப் பேரணி நடத்தப்பட்டது.

## சட்டச் செலவுடன் வழக்குத் தள்ளுபடி

பிரிட்டன் பெண் கெய்லி பிரேசர், இலங்கை அதிகாரிகளின் முடிவை எதிர்த்து தாக்கல் செய்த அடிப்படை உரிமை மனுவை, உயர்நீதிமன்றம் 5 இலட்சம் ரூபா சட்டச் செலவுடன் தள்ளுபடி செய்துள்ளது.

இலங்கையில் இருந்து தம்மை நாடு கடத்துவதற்கு, அதிகாரிகள் எடுத்துள்ள முடிவை சவாலுக்கு

## சிங்களப் பேரினவாதத்துக்கு எதிராக வீறுகொண்டு எழுவார்கள் தமிழர்கள்

### திருமலைழியில் புத்தர் சிலையை எதிர்த்துப் போராட்டம்



## ஆளுநர் பதவி வழங்கினால் சவாலை எதிர்கொள்வேன்

### சாந்தின் கோண்ஹாகே தெரிவிப்பு

ஆளுநர் பதிவியை வழங்கினால் பெண் என்ற அடிப்படையில் சவால்களுக்கு முகங்கொடுத்து செயற்படுவதற்கு தயாராகவுள்ளார் என்று ஐக்கிய லக்வனிதா முன்னணியின் தலைவி சாந்தினி கோண்ஹாகே தெரிவித்துள்ளார்.

கொழும்பில்

## தீ வைப்பதும், சுற்றிவளைத்து போராடுவதும் தீர்வைத் தராது

### 225 பேரையும் தியவன்னாவில் தள்ளியிருந்தால் சுற்றாடல் பதிப்பே ஏற்பட்டிருக்கும் என்கிறார் ஜனாதிபதி ரணில்

* இளைஞர் கோரிய மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளோம்
* கடமையைச் செய்தால்; 25 வருடங்களில் பெருமிதம்
* விரைவில் கருஜய சூரியவின் மக்கள் சபைச் சட்டம்

பிரச்சினைகளுக்கான தீர்வைக் காண்பதற்கு வீடுகளுக்கு தீ வைப்பதும், வீதியில் இறங்கி போராடுவதும் நாடாளுமன்றத்தை சுற்றிவளைப்பதும் பொருத்தமான செயற்பாடல்ல. அதேநேரம், 225பாராளுமன்ற

## கிழக்குப் பல்கலைக்கழகத்தில் இனப்படுகொலை வார நிகழ்வு



முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை வாரத்தின் முதலாம் நாள் நினைவேந்தல் நிகழ்வு கிழக்குப் பல்கலைக்கழக கலை, கலாசார பீட மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் வெள்ளிக்கிழமை மாலை பல்கலைக்கழக வளாகத்தில் அமைந்துள்ள பொங்குதமிழ் தூபியில் நடைபெற்றது.

இதன்போது, இறுதிப் போரில் உயிர்நீத்த தமிழ் உறவுகளுக்கு

## நடுத்தர, சிறிய வியாபாரங்களை பட்டதாரிகள் தொடங்கவேண்டும்

### பேராசிரியர் மைத்திரி ரணில் வலியுறுத்து

பட்டதாரிகள் நடுத்தர மற்றும் சிறிய வியாபாரங்களைத் தொடங்குவது பற்றி ஆழமாகச் சிந்திக்க வேண்டுமென ஜனாதிபதியின் பாரியார் பேராசிரியர் மைத்திரி ரணில் விக்கிரமசிங்க கோரியுள்ளார்.

தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் பட்டமளிப்பு விழாவில் நேற்றையதினம் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இந்தக் கோரிக்கையை முன்வைத்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

தற்போது பட்டங்களைப் பெற்றுக்கொண்டவர்களுக்கு எனது வாழ்த்துக்கள் இந்தப் பட்டங்களைப் பெற்றுக் கொண்டவர்கள் தமது தகுதிகளை மட்டும் உயர்த்துவதற்காக அவற்றைப் பயன்படுத்தாது எதிர்கால சந்ததிக்காகப் பயன்படுத்த வேண்டும்.

குறிப்பாக, தனியார் துறையினரை

## நாட்டின் பொதுக் கடமைக்காக ஒன்றுபடும் நேரம் வந்திவிட்டது

### எதிர்க் கட்சித் தலைவர் சஜித் இப்படித் தெரிவிப்பு



நாம் எவ்வாறான முரண்பாடுகளுடன் இருந்தாலும் நாட்டின் பொதுக் கடமைக்கா ஒன்றுபடும் நேரம் வந்து விட்டதென்று எதிர்க்கட்சித்தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

பத்தரமுல்லவோடர்ஸ் ஹெட்ஜில் சனிக்கிழமை நடைபெற்ற நாடாளுமன்ற துறைசார் மேற்பார்வை குழுவின் இளம் உறுப்பினர்களைத் தெளிவுபடுத்துவதற்கான வேலைத்திட்டத்தின் தொடக்க நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே

## கைரேகைப் பதவு நாளை முதல் அரச ஊழியர்களுக்கு கட்டாயம்

அனைத்து அரசு பணியாளர்களும் நாளை திங்கட்கிழமை முதல் கைரேகை இயந்திரத்தை பயன்படுத்தி தங்கள் வருகை மற்றும் புறப்பாடுகளை பதிவு செய்ய வேண்டியது கட்டாயம் என்று பொது நிர்வாகம் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் ரஞ்சித் அசோகா அறிவித்துள்ளார்.

அதுகுறித்து வெளியிடப்பட்டுள்ள சுற்றறிக்கையில், 01.10.2021 திகதியிட்ட 02/2021 (எம்) பத்தி 07 இன் விதிகள்

## லட்சக்கணக்கான மாணவர்கள் கல்வியைக் கைவிடுகிறார்கள்

### பிரதமர் கவலை தெரிவிப்பு



எதிர்கால சவால்களை கருத்திற்கொண்டு இலட்சக்கணக்கானவர்கள் சாதாரண மற்றும் உயர் தரக் கல்வியைக் கைவிட்டுச் செல்கிறார்கள் என்று பிரதமர் தினேஷ் குணவர்தன தெரிவித்தார்.

பத்தரமுல்ல வோடர்ஸ் ஹெட்ஜில் நேற்று நடைபெற்ற நாடாளுமன்ற துறைசார் மேற்பார்வை குழுவின் இளம் உறுப்பினர்களை தெளிவுபடுத்துவதற்கான வேலைத்திட்டத்தின் தொடக்க நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாம் அனைவரும் சிறப்பானதொரு பாதைக்குள் பிரவேசித்துள்ளோம். ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மேற்படி திட்டத்தை செய்வதாக உறுதியளித்திருந்தார். தற்போது அதனை நடைமுறைப் படுத்த முடிந்துள்ளது.

17 துறைசார் மேற்பார்வைக் குழுகளில் பங்கேற்பதற்காக 500 இற்கும் மேற்பட்ட இளம் உறுப்பினர்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளீர்கள். இளையோருக்கு வழங்கியுள்ள இந்த வாய்ப்பினால் புதிய ஜனநாயகக் கட்டமைப் பொன்றிற்குள் நாம் புகுந்துள்ளோம். அந்த வகையில் ஜனநாயகத்தின் புதிய அத்தியாயம் ஒன்றைத் திறகும் பொறுப்பு

## மக்களின் எதிர்ப்புகளைக் கட்டுப்படுத்த அரசியல் நோக்கோடு செயற்படலாகாது

### உயர் நீதிமன்ற நீதியரசர் தெரிவிப்பு

எதிர்ப்பு நடவடிக்கை என்பது அடிப்படை உரிமைகளின் அடிப்படையில் முன்னெடுக்கப்படுகின்ற மக்களின் அபிலாஷைகளாகும். இதனைக் கட்டப்படுத்தவதற்கு அரசி யல் நோக்கத்துடன் செயற்படக்கூடாது என்று உயர் நீதிமன்ற நீதியரசர் யசந்த கோதாகொட தெரிவித்தார்.

இலங்கைமனிதஉரிமைகள் ஆணைக்குழுவினால் சிவில்போராட்டங்களின்போது பாதுகாப்புத் தரப்பினர் பின் பற்ற வேண்டிய விடயங்கள் சம்பந்தமான வழிகாட்டல்கோவை வெளியிடும் நிகழ்வு கொழும்பில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். ஜனநாய நாட்டில் எதிர்ப்பு நடவடிக்கை என்பது மிகவும் சதாரணமானதும் வழமையானதுமான செயற்பாடாகும். ஆட்சியாளர்களுக்கும் மக்களுக்கும் இடையில் மாறுபட்ட கருத்துக்கள் காணப்படலாம். தனித் தனிக் குழுக்களுக்கு இடையில் வெவ்வேறு நிலைப்பாடுகள் இருக்கலாம். ஆட்சியாளர் களின் சில செயற்பாடுகளுக்கும் கொள்கைகளுக்கும் எதிராக தமது பிரதிபலிப்புக்களைச் செய்ய வேண்டிய தேவை மக்களுக்கு காணப்படலாம்.

என்னைப்பொறுத்தவரையில், எதிர்ப்புநடவடிக்கை என்பது அடிப்படை உரிமைகளான பேச்சுச் சுதந்திரம், கருத்து வெளிப்படுத்தும் உரிமை, அமைதியாக ஒன்று கூடும் சுதந்திரம் என்பனவற்றின் ஊடாக மக்கள் தமது அபிலாகைளை அடைவதற்கு எடுக்கப்படும் முயற்சிகளாகும்.

பொலிஸ் மற்றும் படையினரை நிரவகிக்கும் சட்டக்கோட்பாடுகளைச் சுற்றி முக்கிய தரநிலையொன்று உள்ளது. அதாவது எதிர்வினை சட்டபூர்வமானதாகவும் நம்பிக்கையுடனும் இருக்க வேண்டும்.

நியாயமான

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அடி உயர புத்தர் சிலையை வைத்து வணங்குவார்கள் என்று திட்டம் வகுக்கப்பட்டது.

இதற்கான ஏற்பாடுகளும் முன்னெடுக்கப்படுகின்றன என்பதை அறிந்துகொண்ட மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான இரா.சம்பந்தன் முதலில் திருகோணமலை மாவட்டச் செயலாளருக்கு எழுத்து மூலமாக இதனை நிறுத்தக்கோரினார். மாவட்டச் செயலர் பெரும்பான்மை யினத்தவர் என்பதால் அந்தக் கடிதத்தின் மீது அவர் எந்த நடவடிக்கையும் எடுக்க வில்லை. ஏற்பாடுகள் நிறுத் தப்படாமல் தொடர்ந்தன.

இதனையடுத்துஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் வெள்ளிக்கிழமை நடைபெற இருந்த சந்திப்பில் அரசியல் தீர்வு தொடர்பான பேச்சு தொடங்குவதற்கு முன்னதாக இந்த விடயத்தினை ஜனாதி பதியின் கவனத்திற்குக் கொண்டு செல்வதெனத் திட் டமிட்டிருந்தார் சம்பந்தன். எதிர்பாராதவிதமாக அந்தப் பேச்சு திங்கட்கிழமைக்கு ஒத்தி வைக்கப்பட்டது.

ஜனாதிபதியுடனான சந்திப்பு ஒத்திவைக்கப்பட்ட நிலையில், சம்பந்தன் ஜனா திபதியை சனிக்கிழமை தொலைபேசியில் தொடர்பு கொண்டார். திருகோண மலையில் முன்னெடுக்கப் படவுள்ள சிலை நிர்மாண நடவடிக்கைகள் பற்றிய விட யங்களை முழுமையாக எடுத்துரைத்து அதுதொடர்பில் உடன் நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறுகோரினார்.

உடனடியாகநடவடிக்கை எடுப்பதாக வாக்குறுதியளித்த ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்க, தனது செயலாளர் சமன் ஏக்கநாயக்க சம்பந் தரைத் தொடர்புகொண்டு மேலதிக விடயங்களைப் பெற்று நடவடிக்கைகளை முன்னெடுப்பார் என்றும் கூறினார்.

சொற்ப நேரத்தில் ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, சம்பந்தனைத் தொடர்புகொண்டு, இந்த விட யம்தொடர்பானமுழுத்தகவல் களையும் பெற் றுக்கொண் டார். சிறிது நேரத்திலேயே, திருகோணமலை மாவட்ட செயலாளருக்கு, இனமுறு கல்களை ஏற்படுத்துகின்ற எந்தவொருசெயற்பாட்டிற்கும் எந்தவொரு நபருக்கும் இடமளிக்கவேண்டாம்என்று ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்க பணிப்புரை விடுத்தி ருக்கிறார் என்பகிற உத்தரவு பறந்தது.

இதனையடுத்து, திரு கோணமலை மாவட்டச் செயலாளர் உடனடியா கவே, அஸ்கிரிய பீடாதிப திக்கும், நிகழ்வின் ஏனைய ஏற்பாட்டாளர்ளுக்கும், தொல் பொருள் திணைக்கள பணிப் பாளர், உள்ளிட்ட அதிகாரி களுக்கும் அது தொடர்பான தவல்களை அனுப்பி வைத் தார்.

இதனையடுத்து, நேற்று மாலைவரையில் குறித்த காணியில் எவ்விதமான சிலை வைப்பதற்கான நடவடிக்கைகளும் முன்னெ டுக்கப்படவில்லை என்று அங்கிருந்துகிடைக்கும்செய்தி கள் தெரிவித்துள்ளன.

இருப்பினும் சரத் வீரசேகர மற்றும் தேரர்கள் இனி இதற்கெதிராக எப்படி எதிர்ப்பை வெளிப்படுத்து வார்கள்என்பதைப்பொறுத்தி ருந்து பார்க்கவேண்டும். மற் றொரு நாட்டுப் பிக்குகள் முன்பாகத் தாம் அவமா னப்படுத்தப்பட்டதாக நினைக்கப்போகும் பிக்குகள் ஒரு தடவை சன்னதமாடு வார்கள் என்பதை எதிர்பார்க் கலாம். ரணில் அதனை எப்படிச் சமாளிக்கிறார், அவ ரது உத்தரவுப்படி இன ஐக்கியத்துக்குக் குந்தகம் ஏற்படாமல் அதனை எப்படிக் கையாள்கிறார் என்றுபார்க்கப் பொறுத்திருப்போம்.

**- இடி மின்னல் -**

## திருமலையில் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ஜனாதிபதியின் செயலா ளர் சமன் ஏக்கநாயக்க, திருகோணமலை மாவட்டச் செயலாளரைத் தொடர்பு கொண்டு இனங்களுக்கு இடையில் முறுகல்களை ஏற் படுத்தும் செயற்பாடுகளுக்கு இடமளிக்க வேண்டாம் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க விடுத்திருந்த உத்தரவைத்தெரிவித்ததோடு, அது குறித்த நடவடிக்கைளை யும் முன்னெடுக்குமாறு பணித்துள்ளார்.

குறித்த உத்தரவுக்கு அமைவாக, திருகோண மலை மாவட்டச் செயலாளர் அஸ்கிரிய பீடாதிபதி மற்றும் குறித்த நிகழ்வினை ஏற்பாடு செய்த ஏனைய தரப்பினர் உள்ளிட்டவர்களுக்குத்தகவல் அனுப்பியுள்ளார். இந்த நகர்வுகளைத் தொடர்ந்து சிலையை வைப்பதற்கான பூர்வாங்க செயற்பாடுகள் எவையும் நேற்றுமாலை வரைமுன்னெடுக்கப்படவில்லை.

## கிளிநொச்சியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
உறவுகளை நினைவேந் தி யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் தொழில்நுட்பப் பீட மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் பொதுமக்களின் பங்களிப்பு டன்'முள்ளிவாய்க்கால் கஞ்சி' வழங்கப்பட்டது. (02)

## சிங்களப் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
சிங்களபௌத்தபேரினவாதம் தமிழ்மக்கள்மீது ஆக்கிரமிப் புக்களைத் திணித்துக் கொண் டிருந்தநிலைக்குச்சமனும்எதி ருமானமறுதாக்கம்இருக்கும் என்றும்.. அதற்கு இணையா கத் தமிழ் மக்களும் எழுச்சி பெறுவார்கள் என்றும் தமிழ்த் தேசியமக்கள் முன்னணியின் சட்ட ஆலோசகரும் சிரேஷ்ட சட்டத்தரணியுமான க.சுகாஷ் தெரிவித்தார்.

திருகோணமலை நக ரில் சட்டவிரோதமாகப் புத் தர் சிலை வைப்பதற்கு எதி ராக இன்று காலை முதல் முன்னெடுக்கப்பட்டு வரும் போராட்டத்தில்பங்கேற்றுள்ள சுகாஷ், ஊடகங்களுக்குக் கருத்துத்தெரிவிக்கும்போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக் கையில்,

சிங்கள பௌத்த பேரின வாத அரசு அண்மைக்கால மாக தமிழ் மக்களை மோச மாகச் சீண்டிக் கொண்டிருக் கின்றது.

திருகோணமலை யில் வில்லூண்டி முருகனுக்குச் சொந்தமான காணியை ஆக்கிரமித்து வெளி நாட்டிலி ருந்து பிக்குகளைக் கொண்டு வந்துநான்குஅடிஉயரமுள்ள புத்தர் சிலையை வைக்கப் போகின்றார்களாம்.

இது தமிழர்களைச் சீண்டுகின்ற செயற்பாட்டின் அதி உச்சம். இதை நாங்கள் அனுமதிக்கப் போவது கிடை யாது.

தமிழர்களுடைய தாய கத்தைத்திட்டமிட்டுகபளீகரம் செய்கின்ற செயற்பாட்டில் ரணில் - ராஜபக்ச அரசின் வீச்சு தீவிரம் பெற்றுள்ளது.

இதற்காகத் தமிழ் மக் களாகிய நாம் ஜனநாயக ரீதி யில் தொடர்ந்தும் போராடிக் கொண்டிருக்கின்றோம்.

சரத் வீரசேகர, விமல் வீரவன்ச போன்ற சிங்கள பௌத்த பேரினவாத ஒட்டு மொத்த வடிவத்துக் கும், அவர்களுக்குப் பின்னால் இயங்கிக் கொண்டிருப் பவர்களுக்கும் நாங்கள் ஒரு செய்தியைச் சொல்ல விரும்புகின்றோம்.

நீங்கள் எங்கள் மீது ஆக்கிரமிப்புக்களைத் திணித் துக் கொண்டிருந்தால், ஒரு தாக்கத்துக்குச் சமனும் எதிரு மான மறு தாக்கம் இருக்கும். அதற்கு இணையாக தமிழ் ம க்களும் எழுச்சி கொண்டே இருப்பார்கள்.

உங்களுடையஆக்கிரமிப் புக்கள் எங்களுடைய விடுத லைக்கான வேட்கையை ஒருபோதும் தணிக்காது. அது இன்னமும் எங்களை வீறுகொள்ளவே வைக்கும் என்ற செய்தியைச் சொல்லி வைக்கின்றோம். இந்தப் பௌத்த சிங்கள பேரினவா தத்துக்கு எதிராக இறுதி வரைப்போராடுவோம். - என் றார். (02)

## நடுத்தர, சிறிய ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அவதானித்து புதிய விட யங்களில்அதிகமானகவனம் செலுத்த வேண்டும். புதிய வியாபாரங்களைச் சுயாதீன மாகத் தொடங்கவேண்டும்.

தற்போது நாடு இக்கட் டானதொரு நிலைமையில் இருக்கின்றது. பட்டதாரிகள் நடுத்தர மற்றும் சிறிய வியா பாரங்களைத்தொடங்குவதன் ஊடாகப் பெரும் பங்களிப் பினை பொருளாதாரத்திற்கு வழங்கமுடியும். அதுபற்றியும் கவனம் செலுத்த வேண்டும் - என்றார்.

## மக்களின் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
விமர்சனங்கள் மற்றும் ஏனைய விமர்சனங்களை அடக்குவதற்காக அரசியல் நோக்கங்களுக்காக இயங் கக்கூடாது. தற்போது இலங்கை மனித உரிமை கள் ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்டுள்ள வழி காட்டல்களை இலங்கை போன்ற நாட்டில் நடை முறைச் சாத்தியமான சட்டக் கோட்பாடுகளாக மாற்றுதல் வேண்டும் - என்றார்.

## லட்சக்கணக் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இருதரப்பினரையும் சார்ந் துள்ளது.

இளையோருக்கு வாக் குரிமை அளிக்கப்பட்டு 60 வருடங்கள் பூர்த்தியாகி விட்டன. தொடக்கத்தில் இளையோருக்கு வாக்கு ரிமை இருக்கவில்லை. 1960களிலேயே இளைஞருக் கான வாக்குரிமை சட்டமாக் கப்பட்டது. நாட்டின் வளங்கள் உரிய வகையில் முகாமைத் துவம்செய்யப்படாதகாரணத்தி னால்பெரும்அழிவுஏற்பட்டது.

நாட்டின் வளங்கள் பற் றிய மேற்பார்வை இருக்க வில்லை. கல்வி கற்ற இளை ஞர்களின் பங்களிப்பு, முன் மொழிவுகளையும் நடை முறைப்படுத்தும் இயலுமை உள்ளது. அவற்றை நடை முறைப்படுத்துவதற்கு நாடாளுமன்ற நிலையியற் கட்டளைகள்பாதகமாகஅமை யும் பட்சத்தில் அவற்றில் திருத்தம் செய்வது குறித்தும் கலந்தாலோசிக்கலாம்.

அவ்வாறாயின் மட்டுமே இந்த செயற்றிட்டத்தை சாத்தி யமாக்கமுடியும். நாட்டின்சட்ட ஒழுங்கை உறுதிப்படுத்தி, அரசியல் உறுதிப்பாட்டையும் பொருளாதாரத்தையும் வலுப்படுத்திக்கொண்டு முன் னோக்கிச் செல்லவேண்டும்.

இலங்கையைக் கட்டியெ முப்புவதற்கான உங்களது பங்கேற்பைத்தேசியக்கடமை யாக எண்ணுங்கள். ஐக்கிய நாடுகள்சபையின்அபிவிருத்தி த்திட்டங்கள் நீண்டகாலமாக எமது நாட்டிற்கு பங்களிப்பை வழங்கி வருகின்ற நிலையில் அதனூடாக புதிய பயன்களை பெற்றுக்கொள்ள முற்பட வேண்டியது அவசியமா கும். பல சவால்களை நாம் வெற்றிகொள்ளவேண்டியுள்ள நிலையில் அர்பணிப்புடன் பங்களிப்பை வழங்க வேண் டியது அவசியமாகும்.

படைப்பாற்றல் மூலம் புதியபயணத்தைமேற்கொள்ள முடியும். வரவிருக்கும் சவால் களைப் பற்றி மட்டும் சிந் திக்க வேண்டாம். இலட்சக் கணக்கானவர்கள் சாதாரண தரம் மற்றும் உயர்தர கல் வியை கைவிட்டுச் செல்கி றார்கள்.

இந்த இளம் தலைமுறை யின் பிரச்சினையை நாம் புதிதாக சிந்திக்க வேண்டும். அதற்குத் தேவையான பயிற் சிகளையும்தொழில்நுட்பஅறி வையும் வழங்க ஜனாதிபதி நடவடிக்கை எடுத்து வருகி றார். மேற்பார்வைக்குழுக்கள் பாரம்பரிய சிந்தனைகளை விடுத்து இளைஞர்களின் ஆலோசனைகளுடன் நாட் டின் முன்னேற்றத்திற்குப் பெரும் பலமாக செயற்பட வேண்டும் - என்றார்.

## நாட்டின் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அவர் மேற் கண்டவாறு தெரி வித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

எமது நாட்டின் அரசி யல் களத்தில் சொல்வது ஒன்று செய்வது ஒன்றுமா கவே காணப்படுகின்றது. அதற்கு மாறாக சொல்வதை செய்யும் கலாச் சாரம் உருவாகினால் இன் றைய தினம் (நேற்று) மிகப்பெரியதிருப்புமுனையாக அமையும்.

எதிர்கட்சிஎன்றவகையில் நல்ல விடயங்களை வர வேற்க வேண்டும் என்பதே எமது நிலைப்பாடாகும்.

வங்குரோத்து நிலையி லிருந்துமீண்டுவரும்நாட்டிற்கு நல்லவிடயமொன்று கிட்டுமா யின் அதனை வரவேற்பது அவசியம். அதனால் ஜனாதி பதிஉள்ளிட்டவர்களின் இந்தப் பணி பாராட்டுக்குரியது.

நிறைவேற்றுத்துறை, சட்டவாக்கம், நீதித்துறை ஆகியவற்றில் ஏற்றுக்கொள் ளப்பட்டஅதிகாரப்பரவலாக்கம் அவசியமாகிறது. அந்த வகையில் 17 துறைசார் மேற்பார்வை குழுக்களுக்கு 530 இளைஞர்கள் உள்வாங் கப்பட்டுள்ளமை சிறப்புக் குரியது.

அத்துடன், நாடாளு மன்றத்தில் வெறுமனே பதவி களைப் பரிமாற்றிக்கொள்வது என்பது 225பேருக்கான சலுகைகளைப்பெற்றுக்கொள் வது அல்ல. நாட்டின் தன்னெ முச்சியாக நடைபெற்ற மக் கள் போராட்டமே தற்போது இளைஞர்களை உள்ளீர்க்கும் செயற்பாட்டை அடைவதற்கு உதவியுள்ளது - என்றார்.

## சட்டச் செலவு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
உட்படுத்தி குறித்த மனு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

கடந்த ஆண்டு காலி முகத்திடல் போராட்டத்தின் போது, சமூக ஊடகங்களில் இலங்கை அரசுக்கு எதிரான போராட்டங்களை ஆவணப்படுத்தி வந்ததாக குற்றம் சுமத்தப்பட்ட கெய்லி பிரேசர் என்ற பெண்ணே இந்த மனுவைத் தாக்கல் செய்திருந்தார்.

குடிவரவு மற்றும் குடி யகல்வுத் திணைக்களம் தன்னிச்சையான முறையில் தம்மைநாடுகடத்தும்முடிவை இரத்துச் செய்ய உத்தரவிடக் கோரி, மனுதாரர் கோரிக்கை விடுத்திருந்தார்.

நீதியரசர் மூர்து பெர் னாண்டோதலைமையிலான மூவரடங்கிய உயர் நீதிமன்ற நீதியரசர்கள் அமர்வு, இந்த மனுவை விசாரணைக்கு எடுத்துக் கொண்ட பின்னர் ஆரம்பத்திலேயேநிராகரிக்கத் தீர்மானித்துள்ளது.

சட்டமா அதிபர் எழுப்பிய பூர்வாங்கஆட்சேபனைகளைக் கருத்தில் கொண்டு இந்தத் தீர் மானம் எடுக்கப்பட்டது.

முன்னதாக மருத்துவ வீசாவில் இலங்கை வந்தி ருந்த கெய்லி பிரேசர், விசா நிபந்தனைகளை மீறிய தற்காக, 2022 ஒகஸ்ட் 15 திகதிக்குள் நாட்டை விட்டு வெளியேறுமாறு குடிவரவுத் திணைக்களம் உத்தர விட்டிருந்தது.

எனினும், அவர் அதற்கு எதிராகத் தாக்கல் செய்த மனுவை, மேன்முறையீட்டு நீதிமன்றமும் நிராகரித்திருந் தது. (02)

## ஆளுநர் பதவி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
சனிக்கிழமை செய்தியாளர்க ளைச் சந்தித்தபோது அவர் இதனைத் தெரிவித்தார். கலந்து கொண்டு உரை யாற்றும்போதே அவர் மேற் கண்டவாறுதெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஆளுநர்பதவியைஜனாதி பதி ரணில் விக்கிரமசிங்க வழங்கினால்அதனை ஏற்றுச் செயற்படுவதற்கு தயராகவே உள்ளேன். பெண் என்ற வகையில் அப்பதவியில் அமருக்கும்போது ஏற்படு கின்ற சவால்களுக்கு முகங் கொடுப்பதற்கும் தயாராகவே உள்ளேன்.

ஆளுநர் பதவி என்பது அரசியல் பாரபட்சமின்றி சுயாதீனத்துடன் வகிக்கின்ற தொன்றாகும். இதுவரையில் ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்கவிடத்தில் நான் எத னையும் கோரியதில்லை. ஆகவேஅவரால்பொறுப்புக்கள் ஒப்படைக்கப்பட்டால் எனது கடமையை முறையாக முன் னெடுப்பேன் - என்றார்.

## தீ வைப்பதும், .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
உறுப்பினர்களையும் திய வன்னா ஓயாவில் தள்ளிவிடு மாறு மாற்றத்தை ஏற்படுத்த எதிர்பார்த்த இளைஞர்கள் கோரினார்கள். அவ்வாறு செய்திருந்தால் பெரும் சுற் றாடல் பிரச்சினையே ஏற் பட்டிருக்கும் தீர்வு கிடைத்தி ருக்காது என்று ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரி வித்தார்.

பத்தரமுல்ல வோடர்ஸ் ஹெட்ஜில் சனிக்கிழமை நடைபெற்ற நாடாளுமன்ற துறைசார் மேற்பார் வைக் குழுவின் இளம் உறுப்பினர் களைத் தெளிவுபடுத்து- வதற்கான வேலைத்திட்டத் தின் தொடக்க நிகழ்வில் கலந்துகொண்டு உரை யாற்றியபோதே அவர் மேற் கண்டவாறு தெரிவித்தார்.

ஐக்கியநாடுகள்சபையின் அபிவிருத்தி செயற்றிட்டத் தின் உதவியுடன் இலங்கை நாடாளுமன்றத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்த வேலைத்திட்டத்தில் பிரதமர்தினேஸ்குணவர்தன, சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச ஆகியோர் உட்பட நாடாளு மன்ற உறுப்பினர்களும் பங்கேற்றனர்.

நாடாளுமன்றத்தில் நிறுவப்பட்டுள்ள 17 துறை சார் மேற்பார்வை குழுக்க ளுக்காகப் பத்திரிகை விளம் பரம் ஒன்றின் ஊடாக அறிவிக்கப்பட்டு நாடாளு மன்றச் செயலாளரினால் தெரிவு செய்யப்பட்ட 18 - 35 வயதுக்கிடையிலான 550 இளைஞர்களுக்கு செயலமர் வில் பங்கேற்க அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

நாடாளுமன்றத்தைப்பிரதி நிதித்துவப்படுத்தும்அனைத்து அரசியல் கட்சிகளினதும் பிரதி நிதிகளின்பங்கேற்புடன்இந்தத் துறைசார் மேற்பார்வை குழு செயற்படுவதோடு, திருத்தம் செய்யப்பட்ட நிலையியற் கட்டளை ஏற்பாடுகளுக்கு இணங்கமுன்னெடுக்கப்படும் விசாரணைச்செயற்பாடுகளின் போது செயற்குழு தலைவர்க ளின் உதவிக்காக இளம் உறுப்பினர்கள்ஐவரைதெரிவு செய்து அழைப்பு விடுக்க முடியும்என்ற அடிப்படையில் ஒவ்வொரு செயற்குழுவிற்கு மான இளம் பிரதிநிதிகள் தெரிவு செய்யப்படவுள்ளனர்.

இந்த நிகழ்வில் கலந்து கொண்ட ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அங்கு உரை யாற்றுகையில் மேலும் தெரி வித்ததாவது:

இந்தச் சபையில் 500 புதிய இளம் உறுப்பினர்கள் இணைந்துகொண்டுள்ளனர். மேற்பார்வையாளர்களாக அன்றி நாடாளுமன்றக் குழுக்களில் உள்ள இளம் பிரதிநிதிகளாகவே இவர்கள் பங்கெடுத்துள்ளனர். உலகில் முதல் முறையாக இவ்வா றானதொரு செயற்பாடு முன் னெடுக்கப்படுகிறது.

அமெரிக்க செனட் குழு விலும் காங்கிரஸ் குழுவி லும் அவர்களது சபை உறுப் பினர்கள் மாத்திரமே பங் கேற்க முடியும். ஆனால் எமது பிரதமர், சபாநாயகர், எதிர்க்கட்சித் தலைவர் ஆகி யோர் நிலையியற் கட்டளை களில் மேற்கொண்ட திருத் தங்கள் காரணமாக இளம் உறுப்பினர்களுக்கும்வாய்ப்பு கிட்டியுள்ளது.

குழு உறுப்பினர்களின் கருத்துகளுக்கு மேலதிக மாக உங்களது கருத்துகளும் உள்வாங்கப்படும். சபைஅமர் வுகளும் விவாதங்களும் மட்டுமே நாடாளுமன்றத் தின் பணிகளெனப் பலரும் நினைக்கிறார்கள். இன்று அநேகமான நாடாளுமன் றங்கள் குழுநிலைச் செயற் பாடுகள்மூலமே அதிகளவான பணிகளை ஆற்றுகின்றன.

நிதி வழங்கலை அனும தித்தல் நிதியை ஈடுபடுத்தல், செலவிடுதல், சட்டத்தை நடைமுறைப்படுத்தல் மற் றும் கூட்டுத்தாபனங்களைக் கண்காணித்தல் உள்ளிட்ட பணிகள் மேற்பார்வைக் குழுக்களின் ஊடாகவே முன்னெடுக்கப்படுகின்றன. அதனால் சபை அமர்வில் பங்கேற்றல் மற்றும் உரை யாற்றுதல் ஆகியவற்றை தவிர்ந்த ஏனைய அனைத்து பணிகளிலும் நீங்கள் பங்கெடுக்க முடியும்.

இந்ததிட்டம்பற்றிக்கூறிய போது இது சாத்தியப்படாத விடயமெனச் சிலர் கூறினர். சிலர் இதனால் பயனில்லை நேரம் மட்டுமே வீணாகும் என்றனர். சிலருக்கு திட்டம் எவ்வாறானதுஎன்பதேபெரும் குழப்பமாகியிருந்தது.

இருப்பினும் சிலர் அச்சமின்றி தங்களது பெயர் களை அனுப்பி வைத்தனர். அவர்களிலிருந்தே சிறந்த 535 பேரை நாம் தெரிவு செய்துள்ளோம்.

நீங்கள் சாத்தியமாக் கிக் காட்டுங்கள். நீங்கள் சாத்தி யமாக்கிக் காட்டிய பின்னர் மற்றையவர்களும் இந்த பணியில் பங்கெடுப் பர். அதன் பின்னர் ஆயிரக் கணக்காணவர்கள் வரத் தொடங்கிவிட்டால் எவ்வாறு நிர்வகிப்பதுஎன்பதைபற்றியே இப்போது நாம் சிந்திக்க வேண்டியுள்ளது.

உங்களுக்கு இன்று வாய்ப்பு கிடைத்துள்ளது. சிறி தளவான இளைஞர்களுக்கு மட்டுமே உலகில் இவ்வகை யான வாய்ப்புகள் கிட்டியிருந் தன. அந்த வகையில் 28 வயதில் நாடாளுமன்றத்திற் குத் தெரிவாகி பிரதி அமைச் சராக பொறுப்பேற்ற நான் அதிஷ்டசாலியாவேன்.

அதற்கு முன்னதாக அப்போதைய பிரதமர் ஜே.ஆர்.ஜயவர்தனவுடன் நாடாளுமன்றத்திற்குச் செல் லக் கிடைத்ததால் நாடாளு மன்றக் கடமைகள் பற்றி அறிந்துகொண்டேன். பலருக்கும் அவ்வாறான வாய்ப்புக்கள் கிட்டியதில்லை. இன்று உங்களுக்கு அந்த வாய்ப்புகிட்டியுள்ளது. அதனை கொண்டு முழுமையாகப் பயனடையுங்கள்.

கடந்த வருடத்தில் இந்நாட்டில் பெரும் மோதல் கள் ஏற்பட்டிருந்தன. அந்த நேரத்தில் மேற்படி விடயம் தொடர்பில்முன்னாள்சபாநாய கர் கரு ஜயசூரியவுடன் கலந்துரையாடினேன். இந்த பிரச்சினைகளுக்கு எவ்வாறு தீர்வுகளை வழங்கலாமென ஆலோசித்தோம்.

அதற்கு முன்னதாக வைக்கப்பட்ட எந்தக் கோரிக்கைகளுக்கும் தீர்வு கிடைக்காததால் 225 பேரையும் தியவன்னா ஓயாவில் தள்ளிவிடுவோம் என்று கூறினார்கள். அப்படிச் செய்திருந்தால் சுற்றாடல் பாதிப்பு மட்டுமே ஏற்பட்டி ருக்கும்.

அதன் பின்னர் அவர் களின் வெற்றிடத்திற்கு புதியவர்கள் 255 பேரை கட்சிகளின் செயலாளர்கள் நியமித்திருப்பர். உண்மையில் பிரச்சினைகளுக்கு அது தீர்வாகாது, வீடுகளுக்கு தீ வைப்பதும் வீதிகளில் இறங்கி வீடுகளுக்கு தீ வைப்பதும் நாடாளுமன்றத்தை சுற்றி வளைப்பதும் தீர்வாக அமை யாது.

நாம் ஏன் வங்குரோத்து நிலைக்குச் சென்றோம். எமது பொருளாதாரத்திற்கு என்ன நடந்தது என்ற பிரச்சி னைகள் தலையெடுத்தி ருந்தன. எனது சிறு வயது காலத்தில் இலங்கையானது ஜப்பானுக்கு அடுத்தபடியான நாடாக விளங்கியது. இன்று நாம் எங்கு இருக்கிறோம்?

இப்பிரச்சினைக்கு எவ் வாறு தீர்வு காண்பதென முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய அவர்களிடத்தில் கேட்டபோது, அதற்கான தீர்வாக இளையவர்களை நாடாளுமன்ற துறைசார் மேற்பார்வைக் குழுக்களில் உள்வாங்கலாம் என்ற யோசனையை அவர் முன் வைத்தார்.

அதனை சபாநாயகரும் கட்சித் தலைவர்களும் ஏற்றுக்கொண்டனர். எனவே அவருக்கு நன்றி கூற வேண்டும்.. இவ்வா றானதொருசந்தர்ப்பம்எவருக் கும் கிடைக்குமென நான் நம்பவில்லை. பொருளாதார வீழ்ச்சியால் நாடு முடங்கிக் கிடக்கும் வேளையில் முழு மை யான மறுசீரமைப்புச் செயற்பாடொன்றினை நாம் முன்னெடுக்க முயற்சிக்கி றோம்.

அதற்காகச் செலவீனங் களை மட்டுபடுத்தினோம். புதிய செயற்றிட்டங்கள் கொண்டுவரவேண்டும், இப் போது விலைச் சூத்திரங்கள் ஊடாக எண்ணெய் விநியோ கம் செய்யப்படுகிறது, புதிய கல்வித் திட்டம் ஒன்று பற்றிச் சிந்திக்க வேண்டியுள்ளது.

இப்போது ஆட்சியா ளர்கள் காலநிலைப் பேரிடர் கள் தொடர்பிலான 5 புதிய சட்டங்களையும், பெண்களின் உரிமை பாதுகாப்பு தொடர்பிலான 3 அல்லது 4 சட்டங்களையும் கொண்டுவரவுள்ளதோடு, வேறு பல புதிய சட்டங்களும் கொண்டுவரப்படவுள்ளன. அவை தொடர்பில் கலந்தா லோசித்து உங்களுடைய கருத்துகளையும் வழங் குங்கள்.

எவ்வாறு நிதி செலவிடப் படுகிறது? குறித்த சில துறை களுக்கு அவற்றை வழங் கக் காரணம் என்ன? சில விடயங்களுக்கு வழங்கப் படாததன் காரணம் என்ன? இவை அனைத்தையும் அறிந்துகொள்ள முடியும். அதற்கான வாய்ப்பு உங் களுக்கு கிடைக்கும்.

உங்களுக்கு உதவ நாடாளுமன்றத்தில் ஆய்வுக் குழுவொன்று உள்ளது. நாடாளுமன்றவரவு, செலவுத் திட்ட அலுவலகம் ஒன்றும் புதிதாக நிறுவப்பட உள்ளது. ஏனைய அமைச்சுக்களின் உதவிகளையும் பெற்றுக் கொள்ள முடியும். ஜே.ஆர். ஜயவர்தன கேந்திர நிலை யமும் அரசியல் கல்விக்கான கேந்திர நிலையமாக மாற் றப்படவுள்ளது. இவைஅனைத் தையும் கொண்டு முழுமை யாகப் பயனடையும் வாய்ப்பு உங்களுக்குக்கிடைத்துள்ளது.

நாடாளுமன்ற அங் கத்தவர்களாகிய நமக்கும் அதற்குரிய பணிகளை முன் னெடுக்கவேண்டிய பொறுப்பு உள்ளது. நாடாளுமன்றத்தில் எல்லா நேரங்களிலும் கருத்து

(03ஆம் பக்கம் பார்க்க)







காலைக்கதிர் Kalaikkathir

## தீ வைப்பதும், .....

(02ஆம் பக்கத் தொடர்ச்சி) மோதல்கள் ஏற்படுவதற்கு நாம் இடமளிக்கவில்லை. இந்தமேற்பார்வைக்குழுவின் தலைவரும்உறுப்பினர்களும் இவற்றில்கட்டாயம்பங்கேற்ற வேண்டும்.

அன்றாட விடயங்களை மாத்திரமின்றி முக்கியமான விடயங்கள்தொடர்பில்ஆராய வேண்டும். குழு அமர்வு இடம்பெறாவிட்டால் அது குறித்து தலைவர்களிடத்தில் கேட்டறியவேண்டும்.நாடாளு மன்றஉறுப்பினர்கள்பங்கெடுக் காவிடின் அவர்களிடத்திலும் காரணங்களை கேட்டறி யுங்கள். 2மாதங்களுக்கும்மே லாக பங்கெடுக்காதவர்களை மாற்றுங்கள், இல்லாவிட்டால் இளையவர்களுக்கான வாய்ப்புக்களும் இல்லாமல் போய்விடும்.

முதற்தடவையாக நாடா ளுமன்றத்தைப் பிரதிநிதித்து வப்படுத்தக் கிடைத்துள்ள சந்தர்ப்பத்தை கொண்டு முழுமையாக பயனடைய வேண்டும். எமது நாடாளு மன்றம்பழமையானது. 1835 ஆம் ஆண்டு முதலான பாரம் பரியத்தைக்கொண்டது.

எம்மைவிடப் பழமை யான நாடாளுமன்றங்கள் இங்கிலாந்து, அமெரிக்கா, டென்மார்க், சுவிஸ்லாந்து ஆகிய நாடுகளில் மட்டுமே உள்ளன. இந்த நாடாளுமன் றத்தில் பல்வேறு திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. இது தொடர்பில் நாம் பொது நலவாயக் குழுவினருக்கும் அறிவித்து அவர்களுக்கும் அழைப்பு விடுக்க முடியும். சர்வதேச நாடாளுமன்ற சங்கத்தினருக்கு அறிவித்து அவர்களுக்கும் அழைப்பு விடுக்க முடியும்.

ஐரோப்பிய நாடாளு மன்றம் இதுபற்றிய விசேட கவனத்தைச் செலுத்தும். இந்த வேலைத் திட்டத்தை முன்னெடுத்துச்செல்ல அமெ ரிக்காவின் உதவியையும் நாம் பெற்றுக்கொள்ள முடி யும். அந்தப் பொறுப்புகள் உங்களையே சேரும். நாடா ளுமன்றத்தின் இளம் பிரதிநிதி களும் நாடாளுமன்ற உறுப் பினர்களும்இணைந்துஇந்தப் பணிகளைச் செய்யுங்கள்.

நாம் அபிவிருத்து அடைந்துவரும் நாடாகவே இருக்க முடியாது. எவ்வாறு நாம் அபிவிருத்தி அடைந்த நாடாக மாறுவது என்பதைச் சிந்திக்கவேண்டும். எமக்குநல் லதொரு எதிர்காலம் தேவைப் படுகிறது. அதற்காகநல்லதொரு பொருளாதாரமும் அவசிய மாகின்றது. சட்டத்தையும் நடைமுறைப்படுத்த வேண் டியுள்ளது. அது பற்றிய உங்களது கருத்துகளைக் கூறுங்கள்.

கருஜயசூரியவினால் மக்கள் சபை சட்டமொன்று கொண்டு வரப்படவுள்ளது. அதன் கீழ் அனைத்து கிராம சேவகர் பிரிவுகளிலும் மக்கள் சபையொன்று உரு வாக்கப்படும். அதனிலும் பங்கெடுக்க இளையோருக்கு வாய்ப்பளிக்கப்படும்.

நாடாளுமன்றத்திற்குத் தெரிவாகும் இளைஞர்களின் எண்ணிக்கைகுறைந்துள்ளது. அதற்காகக் கிராம மட்டத்தி லுள்ள அமைப்புக்களுடன் இணைந்து செயற்படுவதற் கான பேச்சு தேசிய இளை ஞர் மன்றத்தினால் முன்னெ டுக்கப்படுகிறது.

அந்த மாற்றங்களைக் காண இன்னும் பல நவடிக் கைகளை மேற்கொள்ள வேண்டியிருக்கிறது. அரச மைப்புக்கு அமையவே செயற்றிட்டங்களை மாற்ற வேண்டும். அடுத்த நாடாளு மன்றம் வரும்வரையில் பார்த்துக்கொண்டிருக்காமல் உங்கள் அனைவருக்கும் இந்த வேலைத்திட்டங்களை முன்னெடுக்க வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. இந்தச் சவாலைநாம்ஏற்றுக்கொண்டு நல்ல தீர்வுகளைப் பெற்றுக் கொடுப்போம்.

25வருடங்களின்பின்னர் நாம் மேற்கொண்ட தீர் மானங்களே இலங்கை யின் அபிவிருத்திக்கு வழி வகுத்தன என்று நீங்கள் பெருமிதம் கொள்ள முடியும் - என்றார்.

## தையிட்டி ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) தையிட்டியில் அமைக் கப் பட்டுள்ள திஸ்ஸ விகாரைக்கு ஆதரவுதெரிவித்துஅனைத்து மதங்களையும் ஒன்றாக மதிக்க வேண்டும் என்ற தொனிப் பொருளில் இந் தப் பேரணி தையிட்டி சந்தி யிலிருந்து விகாரை வரை முன்னெடுக்கப்பட்டது. சிறு வர், சிறுமியர் உள் ளிட்ட சுமார் 200 பேர் இதில் கலந்து கொண்டனர்.

அவர்களுக்கு மதிய உணவுடன் நல்ல கவனிப் பும் வழங்கப்பட்டது.

பேரணியில் கருத்து தெரிவித்த அருண் சித்தார்த், இலங்கையில் அனைவரும் அனைத்துமதங்களையும்மதி க்கின்ற, மத வழிபாடுகளை மேற்கொள்ளும் சுதந்திரம் உண்டு என்றார்.

தையிட்டி விகாரை யாழ்ப்பாண மாவட்ட வரைபடத்தில் 1959ஆம் ஆண்டே விகாரைக்குரிய பகுதி எனக் குறிக்கப்பட்டுள்ள நிலமாகும். பொதுமக்க ளின் காணிகள் அல்ல. விகாரை அழிவடைந்த காலத்தில் பொதுமக்கள் அக் காணியை கையகப்படுத்தித் தமது குடியிருப்பினை மேற்கொண் டிருந்தனர். ஆனால் அது விகாரைக்குரிய நிலமாகவே காணப்படுகிறது. பொதுமக் களின் காணியில் விகாரை அமைக்கப்பட்டால் அவர்கள் நீதிமன்றத்தினைநாடமுடியும் - என்றார்.

அத்துடன் ஒவ்வொரு மதத்தையும் இனத்தையும் கூறி இனவாதம் மற்றும் மத வாதத்தினை எவரும் தூண்ட முயற்சிக்கவேண்டாம்எனவும் அவர் கேட்டுக்கொண்டார்.

இந்தப் பேரணியை ஏற்பாடு செய்த அருண் சித் தார்த் மற்றும் அவரது மனைவி, உறவினர்கள் மீது நல்லூரில் உள்ள லக்ஸோட் டியா விடுதியின் உரிமை யாளரைத் தாக்கி சாணித் தண்ணீர் ஊற்றியது, விடுதி யைத் தாக்கிச் சேதப்படுத் திய ஆகிய குற்றச்சாட்டுக்கள் கீழ் வழக்குப் பதிவு செய்- யப்பட்டுள்ளது. அவரது மனைவியும் மைத்துணியும் இந்த வழக்கில் கைது செய் யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார்கள். 03

## கிழக்குப் பல் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) ஈகைச் சுடரேற்றி அகவணக் கம் செலுத்தப்பட்டது.

அதன்பின்னர் மலரஞ் சலியும் மாணவர்களால் செலுத்தப்பட்டது.(02)







## கைரேகைப் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) நாளை தொடக்கம் நடை முறைப்படுத்தப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்தச் சுற்றறிக்கையின் விதிமுறைகளுக்குஅமைவாக அனைத்து நிறுவனங்களின் தலைவர்களும் கவனம் செலுத்தவேண்டும்.

அமைச்சின் செயலா ளர்கள், பிரதான செயலாளர் கள், திணைக்களத் தலை வர்கள், மாகாண செயலா ளர்கள், மாவட்ட செயலாளர் கள், பிரதேச செயலாளர்கள் மற்றும் கூட்டுத்தாபனங்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும்

இது தொடர்பான சுற்ற றிக்கை அனுப்பப்பட்டுள்ளது.

# உருத்திரபுரீஸ்வரர் ஆலய ஆக்கிரமிப்பை தடுங்கள்

## சிறீதரன் எம்.பி ஜனாதிபதிக்குக் கடிதம்



(ந.லோகதயாளன்)

கிளிநொச்சி மாவட்ட உருத்திரபுரம் உருத்திர புரீசுவரர் ஆலயத்தில் மே 18 தொல்பொருளியல் திணைக்களத்தால் மேற் கொள்ளப்படவுள்ளஅளவீட்டுப் பணிகளை உடனடியாகத் தடுத்து நிறுத்தி, ஆலயத் தின் பழைமையையும், புனிதத்தன்மையையும் பாதுகாக்க நடவடிக்கை எடுக்குமாறு, நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீ தரன் ஜனாதிபதிக்கு கடிதம் அனுப்பிவைத்துள்ளார்.

உருத்திரபுரம் ஆலயத் தில் 2021.03.22 அன்று அளவீட்டுப் பணிகளை மேற் கொள்ள முனைந்த தொல் பொருளியல் திணைக்கள அதிகாரிகளை, ஆலய நிர் வாகத்தினரும், மக்களும் இணைந்து அங்கிருந்து வெளியேற்றியிருந்தனர். இதனைக்கடந்த 2021.03.24 அன்று ஓர் ஒத்திவைப்பு வேளைப் பிரேரணையாக நான் நாடாளுமன்றத்தில் முன்வைத்திருந்தேன்.

அதன்பின்னர் 2023. 05.11 அன்று நடைபெற்ற தங்களுடனான பேச்சில் தொல்பொருளியல் திணைக் களத்தின் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளை நிறுத்த நடவடிக்கை எடுப்பதாக தாங்கள் வழங்கிய உறுதி மொழியை உடனடியாக மீறுவதாகவும் இவ்வாலய விவகாரம் அமைந்துள் ளது.

இந்த நாட்டில் இன நல்லிணக்கம், மதப் பிரி வினையின்மை, பொறுப் புக்கூறல் போன்ற விடயங் களைத் தொடர்ச்சியாக வலியுறுத்தும் தாங்கள், உருத்திரபுரீசுவரர் ஆல யத்தை அகழ்வு என்ற பேரில் ஆக்கிரமிக்கும் நடவடிக் கையை நிரந்தரமாக நிறுத் தவும், தமிழர்களின் இன, மத, மொழி, மரபுரிமை அடை யாளங்கள் மீதான சிங்கள பௌத்த ஆக்கிரமிப்பை தடுத்து நிறுத்தவும் உடனடி நடவடிக்கை எடுப்பீர்கள் என்ற எதிர்பார்ப்போடு இக் கடிதத்தை சமர்ப்பிக்கிறேன் - என்று அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை எதிர்வரும் நாளை திங்கட்கிழமை நடை பெறவுள்ள ஜனாதிபதியுட னான சந்திப்பில் இக்கடிதத் தின் ஆங்கில வடிவத்தை நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன், ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்கவுள்ளார்.

# காலிமுகத்திடல் போராட்டக்காரர்கள் காடையர்கள்; இவர்களை வரலாறு ஒருபோதும் மன்னிக்காதாம்!

## இப்படி விமர்சிக்கின்றது மஹிந்தவின் கட்சி



காலிமுகத்திடல் போராட் டக்காரர்களைக் காடையர்கள் என்று விமர்சித்துள்ளார் ஸ்ரீலங்காபொதுஜனபெரமுன கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் விமலவீர திஸா நாயக்க.

இது தொடர்பில் ஊட கங்களிடம் அவர் மேலும் கூறுகையில்,

காலிமுகத்திடல் போராட் டக்காரர்களே நாட்டைச் சீரழித்தார்கள். இவர்களை வரலாறு ஒருபோதும் மன் னிக்காது.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி என்பது பீனிக்ஸ் பறவை போன்றது. எம்மை எவராலும் அழிக்க முடியாது. அழித்தாலும் மீண்டெழுவோம். இதனை இம்முறை மே தினக் கூட்டத் தில் நிரூபித்துக் காட்டியுள் ளோம். - என்றார். (02)

# புதுக்குடியிருப்பில் பரபரப்பு

முல்லைத்தீவு, புதுக்குடி யிருப்பு - கைவேலிப் பகுதி யில் இரண்டு இளைஞர்கள் இணைந்து சிறுமி ஒரு வரைக் கடத்த முயற்சி மேற்கொண்டனர் என்று பரவிய தகவல் காரணமாக அங்கு பெரும் பரபரப்பு ஏற் பட்டது. சந்தேகத்ததில் இரு இளைஞர்களையும் ஊர் மக்கள் பிடித்துப் பொலிஸாரி டம் ஒப்படைத்தனர். .

சனிக்கிழமைகைவேலிப் பகுதியில் 10 வயதுடைய பாடசாலை சிறுமி தனியார் வகுப்புக்காக மோட்டார் சைக் கிளில்தாயாரினால்அழைத்து வரப்பட்டு இறக்கிவிடப்பட்ட நிலையில், வீதியில் மோட்டார் சைக்கிளில் சென்ற இரண்டு இளைஞர்கள் அந்தச் சிறுமியைக் கடத்த முயன்றார்ள் என்று கூறப் படும் சம்பவத்தாலேயே பரபரப்பு ஏற்பட்டது.

சிறுமியின் கையைப் பிடித்துக்கொண்டு முகத்தைத் துணியால் பொத்திப் பிடித்த போது சிறுமி மயங்கி விழுந் தார் என்றும் அதைப் பார்த்து வீதியால் சென்ற மக்கள் சத் தமிடவே இளைஞர்கள் இரு வரும் தப்பி ஓடினார்கள் என் றும் தெரிவிக்கப்பட்டது.

சிறிது நேரத்தின் பின்னர் கண்விழித்துக் கொண்ட சிறுமி குறித்த பகுதியைச் சேர்ந்த இளைஞர் ஒருவரின் பெயரைக் கூறியதற்கு இணங்க கிராம அபிவிருத்திச் சங்கத்தினர் இளைஞரைமடக் கிப் பிடித்துப் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற் கொண்ட பொலிஸார், 23 வயதுடைய 2ஆம் வட்டாரம், கோம்பாவில் பகுதியைச் சேர்ந்த இளைஞரைக் கைது செய்துள்ளதுடன் மேல திக விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர்.

# வாகன விபத்தில் 7 மாத குழந்தை சாவு; தாய் உட்பட ஐவர் வைத்தியசாலையில்!

வாகன விபத்தில் 7 மாத குழந்தையொன்று பரிதாபகர மாக உயிரிழந்துள்ளது. அத்துடன் குறித்த குழந் தையின் தாய் உட்பட ஐவர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க் கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் தங் காலைபொலிஸ்பிரிவில்சனிக் கிழமை இடம்பெறுள்ளது.

தங்காலைப் பகுதி யிலிருந்து அங்குனுகொல பெலஸ்ஸ நோக்கிப் பய ணித்த வான் ஒன்றும் ரன்னவிலிருந்து தங்காலை நோக்கிவந்த லொறி ஒன்றும் ஒன்றுடன் ஒன்று மோதி யதில் வானில் பயணித்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஐவர் காயமடைந்தனர். அதேவேளை, லொறியின் சாரதியும் காயமடைந்தார்.

இந்நிலையில், வானில் பயணித்த ஐந்து பேரும் லொறியின் சாரதியும் தங் காலை ஆதார வைத்திய சாலையில் சேர்க்கப்பட்ட தையடுத்து வானில் பய ணித்த குழந்தையொன்று உயிரிழந்துள்ளது.

ஆபத்தான நிலையில் உள்ள குழந்தையின் தாய் மேலதிக சிகிச்சைக்காக மாத்தறை பொது வைத்திய சாலைக்கு மாற்றப்பட்டுள்ளார் என்றுதங்காலைபொலிஸார் தெரிவித்துள்ளனர்.

லொறியின் சாரதி உறங் கியமையால் இந்த விபத்து ஏற்பட்டுள்ளதுஎன்றுபொலிஸ் விசாரணையில் தெரிய வந்துள்ளது.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை தங்காலை பொலிஸார் மேற் கொண்டு வருகின்ற னர். (02)

விளம்பரத் தொடர்புகளுக்கு –
தொலைபேசி இலக்கம்
076 443 8622



காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## இனப் பதற்றத்தைத் தணிக்க தேசியக் கொள்கை தேவை

அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்க வடக்கு கிழக்கு தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் மே 11 பேச்சு நடத்துகிறார். அதில் தொல்லியல் திணைக்களத்தின் நடவடிக்கைகள், காணி அபகரிப்புக்கள் தொடர்பில் இனிவரும் நாட்களில் எந்த நடவடிக் கையும் மேற்கொள்ளப்படாது என்று உறுதியளிக்கப்படுகின்றது. ஆனால், மறுநாளே திருகோணமலையில் தொல்லியல் திணைக் களத்தினர் அடையாளப்படுத்திக்கொடுத்த இடத்தில் பிக்குகள் புத்தர் சிலை வைக்க எடுக்கும் நடவடிக்கை தீப்பிடிக்கிறது. அதுபோன்றே கிளிநொச்சி மாவட்டம், உருத்திரபுரத்தில் உள்ள உருத்திர ஈஸ்வரம் ஆலயத்தை தொல்பொருள் இடமாக்குவதற்கான முயற்சி யாக அளவிடல் பணிகளை முன்னெடுக்கப்போவதாக ஆலய நிர்வாகத்திற்குத் திணைக்களத்தால் அறிவிக்கப்படுகின்றது. ஏற்கனவே இதுபோன்று அளவிட எடுக்கப்பட்ட நடவடிக்கை மக் களால் தடுத்து நிறுத்தப்பட்டிருந்த நிலையில், மீண்டும் அதே நடவடிக்கைக்கு நாள் குறிக்கப்படுகின்றது.

தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களுடனான பேச்சில், கடந்த காலங்களில் தொல்பொருள் திணைக்களம் பல தவறுகளை விட்டிருக்கின்றது, அவற்றைச் சரிசெய்வோம் என்று அதன் பணிப் பாளர் தெரிவிக்கின்றார். அதுவொரு பொதுப்படையான வாக்கு–மூலம் என்கிறபோதும், குறைந்தபட்சம் தனது திணைக்களத்தின் நடவடிக்கைகளை வடக்கு கிழக்கில் இடைநிறுத்தி வைத்து அவற்றை மீளாய்வு செய்திருக்கவேண்டும். தவறு என்று ஒப்புக்கொண்ட பின்னர் அந்தத் தவறைச் சீர் திருத்தவேண்டியதுதானே நியாயம். ஆனால், அப்படி நடக்கவில்லை. பதிலாக ஆட்சியாளர்கள் ஏதாவதொரு கொள்கை முடிவை எடுப்பதற்கிடையில் தமது நோக் கங்களை நிறைவேற்றிவிடுவதில் திணைக்களங்கள் தீவிரமாக இருக்கின்றன.

இது இப்போது மட்டுமல்ல, ரணில் விக்கிரமசிங்கவுடனான எல்லாப் பேச்சுக்களிலும் இதனை அவதானிக்க முடிந்திருக்கிறது. தமிழர் விவகாரம் தொடர்பாக நடக்கும் பேச்சில் அரசுத் தலைவர் எடுக்கக்கூடிய முடிவுகளைச் செயற்படுத்துவதில் நிர்வாகத்துறை மெத்தனமாகவே இருக்கும். உதாரணம் அரசியல் கைதிகள் விடுதலை. 2015 ஆட்சிக்கு வந்தபோதே அரசியல் கைதிகளை விடுவிப்பது என்கிற கொள்ளை முடிவுக்கு ஆட்சியாளர்கள் வந்துவிட்டார்கள். ஆனால் அதனை இன்னும் செயற்படுத்தி முடிக்கவில்லை. இன்னும் சொல்லப்போனால் ரணிலின் அந்த ஆட்சிக் காலத்தில் ஒரு அரசியல் கைதிகூட அவரது மன்னிப்பின் கீழ் விடுவிக்கப்பட அதிகாரிகள் இடமளித்திருக்கவில்லை.

இதுபோன்றே வனவளத் திணைக்கள விடயத்திலும் நடக்கியது. அந்தத் திணைக்களம் சுவீகரித்துக்கொண்ட மக்கள் குடியிருப்புப் பகுதிகளை விடுவிக்கும்படி ரணில் விக்கிரமசிங்க உத்தரவிட்டு நீண்ட காமாகிவிட்டபோதும் இன்னமும் அவை விடுவிக்கப்பட வில்லை. இப்போது தொல்பொருள் திணைக்களத்தின் விடயத் திலும் அதுவேதான் நடக்கின்றது.

பௌத்த, சிங்கள மேலாதிக்கவாதத்தால் ஆக்கிரமிக்கப்பட்டி ருக்கும் அரச திணைக்களங்கள், அதற்கெதிரான முடிவுகளைச் செயற்படுத்தப் பின்னடிப்பது, ஆட்சி மாறியதும் தமக்கான காலம் வரும் என்கிற காத்திருப்பில்தான். தமக்குச் சார்பான ஆட்சியாளர்கள் வருவார்கள், அல்லது பௌத்த சிங்கள மேலாதிக்கவாதத்திற்கு எதிரான வேலைகளைச் செய்துவிட்டு அதற்காதரவானவர்கள் அதிகாரத்திற்கு வரும்போது பதில் சொல்லமுடியாது என்பதால்தான் இந்த நிலை. பௌத்த சிங்களப் பேரினவாதத்தில் ஊறிப் போயிருக்கும் திணைக்களங்கள் அவ்வளவு இலகுவாக அசைந்து கொடுக்கமாட்டா.

இதனை மாற்றியமைத்து நிலமையைக் கட்டுப்பாட்டில் வைத்து, இனங்களிடையிலான நல்லுறவு சீர்குலையாமல் இருப்பதை உறுதிப்படுத்த வேண்டுமானால் இந்த விவகாரங்கள் தொடர்பில், அரசியல் தீர்வு ஒன்று வரும் வரைக்குமான கொள்ளை முடிவொன்றை அனைத்துக் கட்சிகளின் ஆதரவுடனும் ஆட்சி யாளர்கள் மேற்கொள்ளவேண்டும். குறிப்பாக, பாதுகாப்புப் படையினர் விவகாரம், காணி பிடிப்பு விவகாரம், வழிபாட்டிடங்கள் அமைக்கப்படுவது தொடர்பான விவகாரம், வனவள மற்றும் வன உயிரிகள் திணைக்கள விவகாரங்கள், அரசியல் கைதி கள் விவகாரம், நல்லிணக்க முயற்சிகள் போன்றவற்றில் ஒரு கொள்கை முடிவை ஆட்சியாளர்கள் ஆணித்தரமாக எடுத்து அதனை நாடாளுமன்றத்தில் பகிரங்கப்படுத்தவேண்டும். குறைந்தபட்சம் அரசியல் தீர்வு ஒன்று அடையப்படும்வரை இந்தக் கொள்கை முடிவு இறுக்கமாக நடைமுறைப்படுத்தும் உத்தரவு பிறப்பிக்கப்படவேண்டும். அப்போதுதான் இனப் பதற்றங்களையும் தணிக்கக்கூடியதாக இருக்கும். தனித் தனியாக ஒவ்வொரு சம்பவங்களையும் கையாள்வதன் மூலம் இந்தப் பிரச்சினைகள் ஒரு முடிவுக்கு வராது.

## முல்லையில் அமைக்கும் விசேட தேவையுடையோருக்கான வைத்தியசாலைக்கு வைத்தியர், ஊழியர்களை நியமிக்குக

### சார்ள்ஸ் நிர்மலநாதன் வலியுறுத்து



அரசாங்கத்தால் வழங் கப்படும் நலன்புரி கொடுப் பனவுகள் அரசியல் தலை யீடின்றி, உண்மையில் வறு மையில் இருப்பவர்கள் யார் என்பதைஅடையாளம்கண்டு வழங்க வேண்டும்.

இனங்களுக்கு இடை யிலான சமத்துவ கொள்கை பின்பற்றப்பட்டிருந்தால் நாடு என்ற ரீதியில் முன்னேற்றம டைந்திருக்கலாம் எனதமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடா ளுமன்றஉறுப்பினர்சார்ள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற நலன்புரிக் கொடுப்பனவுகள் தொடர்பான விவாதத்தில் உரையாற்றும் போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரை யாற்றிவை வருமாறு -

நாட்டின் மொத்த சனத் தொகையில் 42 வீதமான மக்கள் வறுமைக்கோட்டின் கீழ் வாழ்கிறார்கள். இனங்க ளுக்கு இடையிலான சரி யான சமத்துமான அரசியல் கொள்கையும், சரியான பொருளாதாரக் கொள்கையும் இருந்திருந்தால் இலங்கை யில் வறுமையை ஒழித்தி ருக்க முடியும்.

எனினும் நலன்புரி கொடுப் பனவுகளின் மூலம் வறுமையை ஒழிக்க முடி யாது என்பதே என்னுடைய நிலைப்பாடாக உள்ளது.

நலன்புரி கொடுப்பனவு களில் பல குறைபாடுகள் காணப்படுகின்றன. அந்தக் குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்காக அமைச்சால் புதிய விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. அது பரி சீலனையில் இருப்பதாக இராஜாங்க அமைச்சர் கூறி யுள்ளார்.

அரசியல் ரீதியலான மற்றும் பக்கச்சார்பான பரி சீலனை இன்றி வறுமையில் இருப்பவர்கள் யார் என்பதை முறையாக ஆராய்ந்து இந்தக் கொடுப்பனவுகளை வழங்கு வது மிகவும் பொருத்தமான தாக இருக்கும்.

வயோதிபர்களுக்கான கொடுப்பனவுகள் தபால் நிலையங்கள் மற்றும் உப தபாலகங்களிலும் வழங்கப் பட்டு வந்த நிலையில் தற் போது அதனை சமுர்த்திவங்கி களில் பெற்றுக்கொள்ள முடி யும் என்று அரசாங்கம் தீர்மா னித்துள்ளமை சிக்கலானது. சில இடங்களிலேயே சமுர்த்தி வங்கிகள் உள்ளன.

இதனால் அந்தப் பணத்தை பெற்றுக்கொள்வ தற்காக பெருமளவு பணத் தைச் செலவிட்டு செல்ல வேண்டியுள்ளது. வயது முதிர்ச்சியால் அவர்களுக்கு தூர இடங்களுக்குச் செல்வது சிக்கலானது.

இதனால் இந்தக் கொடுப் பனவை கிராம அலுவல கங்களில் பெற்றுக்கொள் ளக்கூடியவாறு ஏற்பாடு களை செய்ய வேண்டும் என்று கோருகின்றோம்.

அத்துடன் சில வருடங் களுக்கு முன்னர் நெதர் லாந்து அரசாங்கத்தின் உதவி யின் கீழ் வடக்கு மாகாணத் தில் புதிய வைத்தியசாலை கள் அமைக்கப்பட்டன.

அந்த வகையில் முல் லைத்தீவு மாங்குளம் பிரதே சத்தில் நவீன மருத்துவ உப கரணங்களுடன் விசேட தேவையுடையோருக்கான வைத்தியசாலை அமைக் கப்படுகின்றது. அந்த வைத்தி யசாலைக்கு வைத்தியர்கள், ஊழியர்களுக்கான நியம னங்கள் இல்லாமல் உள்ளது.

அதற்குத் தேவையான நடவடிக்கைகளை முன் னெடுக்க வேண்டும். புதிய வைத்தியசாலை அமைக் கப்பட்டும் அது மக்களுக்கு சேவை யாற்ற முடியாத கட் டடமாக இருக்கக்கூடாது. இத னால் இது தொடர்பில் கவ னம் செலுத்த வேண்டும். - என்றார்.

## அநுராதபுரம் விகாரை ஒன்றின் அறையிலிருந்த சுமார் 3 லட்சம் ரூபா பாதணிகள் மாயமாம்

அநுராதபுரம் ஜெயந்தி மாவத்தையில் அமைந்துள்ள விகாரைக்கு உரித்தான அறை ஒன்றை வாடகைக்குப் பெற்று அதில் வைக்கப்பட்டிருந்த சுமார் 3 லட்சம் ரூபா பெறுமதியான காலணிகள் திருடப் பட்டமை தொடர்பில் விசா ரணைகள் ஆரம்பிக்கப்பட் டுள்ளதாக அநுராதபுரம் தலைமையக பொலிஸார் தெரிவித்தனர்.

குருணாகல், மீகொல்ல, ஹிந்தகொல்ல பிரதேசத்தில் வசிக்கும் நபர் ஒருவர் குரு ணாகல் பிரதேசத்தைச் சேர்ந்த நண்பர் ஒருவருடன் இணைந்து பாதணிகளைத் தயாரித்து அநுராதபுரம் பகுதி யில் உள்ள நபரொருவரிடம் விற்பனைக்காக ஒப்படைத் துள்ளதாக பொலிஸார் தெரி விக்கின்றனர்.

அநுராதபுரம் ஜெயந்தி ம ாவத்தையில் அமைந் துள்ள விகாரை ஒன்றில், கால ணிகளின் உரிமையாளர் அறையொன்றை வாடகைக்கு எடுத்து பாதணிகளை சேமித்து வைத்திருந்தார் எனவும் பொலி ஸார் தெரிவித்தனர்.

கடந்த 8 ஆம் திகதி இரவு குறித்த அறையின் சாவியை காலணி விற்பனை செய்யும் நபரிடம் உரிமையாளர் கொடுத்துவிட்டு குருணாகல் பகுதிக்குச் சென்றபோதே இந்த திருட்டு இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ள னர்.

## யாழ்.மாவட்டத்தில் நுங்கு திருட்டுக்கள் அதிகரிப்பு!

யாழ்ப்பாணத்தில் நுங்கு திருட்டுக்கள் அதி கரித்துள்ளன எனவும், அத னைக் கட்டுப்படுத்த உரிய தரப்புக்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் காணி உரிமையாளர்கள் கோரியுள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் நில வும் வெப்பமான கால நிலைமை காரணமாக நுங்குக்கு கடும் கிராக்கி ஏற் பட்டுள்ளது.

அதனால் ஆள்கள் அற்ற தனியார் காணிகளுக்குள் உள்ள பனை மரங்களில் நுங்குகளை குலை குலை யாகத் திருடர்கள் வெட்டிச் செல்கின்றனர்.

காணிக்குள் விழும் பனம் பழங்கள் ஊடாகவே பனாட்டு செய்கிறோம், பனம் பழங்களின் விதைகள் கொண்டு, பனம்பாத்திசெய்து அதன் ஊடாகவே பனம் கிழங்கு, ஒடியல்என்பவற்றை பெற்றுக்கொள்கிறோம்.

பனம் பழத்தின் இளம் பதமாக உள்ள நுங்குகளை குலைகுலையாகத்திருடர்கள் வெட்டி செல்வதால் பனம் பழம் இல்லாது போகிறது.

பனம் பழத்தின் ஊடாக பெற்றுக்கொண்ட எமது சிறிய வாழ்வாதாரம் இல்லாமல் போகின்றது. எனவே உரிய தரப்புக்கள் இது தொடர்பில் கவனம் செலுத்தி நுங்கு திருட்டுக்களைக் கட்டுப் படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கோரி யுள்ளனர்.

## இரத்தினபுரியில் விபத்து: இளம் தம்பதியினர் உயிரிழப்பு!

இரத்தினபுரி, திருவன கெட்டிய பிரதேசத்தில் இடம்பெற்ற விபத்தில் இளம் தம்பதியினர் உயிரிழந் துள்ளனர் என இரத்தின புரி பொலிஸார் தெரிவித்த னர்.

இச் சம்பவம் வெள்ளிக் கிழமை காலை 7 மணியள வில் இடம்பெற்றுள்ளது.

மோட்டார் சைக்கிள் தனியார் பஸ்ஸை முந்திச் செல்லமுற்பட்டவேளை இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

கஹவத்த ஓபாதவை சேர்ந்த 24 வயதுடைய எஸ்.மோகன் ராஜ் மற்றும் புஷ்பிகா ஹர்னி என்ற தம்பதி யினரே உயிரிழந்துள்ள னர். இவர்களுக்கு திருமண மாகி இரண்டு மாதங்கள் ஆகிறது.

இரத்தினபுரி போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட போது அவர்கள் ஏற்கனவே உயிரி ழந்துவிட்டார் என வைத்தி யசாலை வட்டாரங்கள் தெரி வித்தன.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசா ரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## திருமணமாகி சில மாதங்களேயான நிலையில் இங்கிரியவில் சடலமாக மீட்கப்பட்டார் பெண்

கொழும்பு, மே 14

இங்கிரிய, போதினாகல யஹல வத்த பகுதியில் உள்ள வீடொன்றில் தனியாக இருந்த 25 வயது பெண் ஒரு வர் திடீரென உயிரிழந்துள் ளார் என இங்கிரிய பொலி ஸார் தெரிவிக்கின்றனர்.

அத்துடன், தினுஷிக்கா தமயந்தி ஜயசிங்க என்ற பெண்ணே இவ்வாறு உயி ரிழந்துள்ளார் என்றும் இவ ருக்கு கடந்த சில மாதங்க ளுக்கு முன் திருமணம் இடம் பெற்றதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்நிலையில், உயிரி ழந்த பெண்ணின் கணவர் மாலையில் வேலை முடிந்து வீட்டுக்கு வந்தபோது, சமை யலறையில் மயங்கிய நிலை யில் மனைவி கிடப்பதைக் கண்டு, அவரை இங்கிரிய பிரதேச வைத்தியசாலைக்கு கொண்டு சென்றபோதிலும், அவர் ஏற்கனவே உயிரிழந் திருந்தார் எனப் பொலிஸ் விசாரணைகளில் தெரியவந் துள்ளது.

மேலும், சமையலறை யின் அருகில் உள்ள அறை யில் சுவரில் இருந்து மின் சார பிளக் ஒன்று கழன்று வீழ்ந்து, உயிரிழந்த பெண் ணின் அருகில் கிடந்த தாக பொலிஸார் தெரிவித்த னர்.

இந்தசம்பவம்தொடர்பில் பாணந்துறை பிரிவு குற்றப் புலனாய்வு அதிகாரிகளும் விசாரணைகளை மேற் கொண்டுள்ளனர்.

## ருமேனியாவில் தொழில் தருவதாக கூறி பண மோசடி செய்த பெண் களுபோவில பகுதியில் வைத்து கைது!

ருமேனியாவில்தொழில் தருவதாக கூறி பண மோசடி செய்த பெண்ணொருவர் தெஹிவளை களுபோவில பகுதியில்வைத்துகைதுசெய்-யப்பட்டனர் என வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத் தின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்த பெண் ருமேனி யாவில் தொழில் வழங்கு வதாக கூறி ஒருவரிடமிருந்து 440,600 ரூபாவை பெற் றுள்ளதாகவும், அவருக்கு வயது 30 என்றும் அந்த அதி காரி மேலும் தெரிவித்தார்.

## இலங்கைக்கான விமான சேவைகளை ஜூலை முதல் தொடங்குகிறது சீனா

சீன விமான சேவை நிறுவனமான எயார் சைனா ஜூலை மாதம் முதல் இலங்கைக்கான விமான சேவையை ஆரம்பிக்கும் என சுற்றுலாத்துறை அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ தெரி வித்துள்ளார்.

அமைச்சர் பெர்னாண் டோவின் தகவலின்படி, ஏயார் சீனா ஆரம்பத்தில் வாரத்துக்கு மூன்று விமான சேவைகளை இயக் கும் எனத் தெரிய வருகிறது.

காலைக்கதிர்
Kalaikkathir

# பெரும் துறைமுகங்கள் வளாகத்தை இலங்கையில் அமைக்கிறதா சீனா?

கொழும்பு, மே 14

உணவு, எரிபொருள் மற்றும் மருந்துகள் போன்ற அத்தியாவசியப் பொருள்களின் பற்றாக்குறை போராட்டங்களுக்கு வழிவகுத்த நிலையில் கடன் திருப்பி செலுத்தலை நிறுத்தியுள்ள இலங்கை தற்போது பொருளாதார மீட்சிக்கான திட்டத்தை வகுத்து வருகின்றது.

இந்நிலையில் கொழும்பு துறைமுகத்தில் ஒரு பெரிய தளவாட வளாகத்தில், 392 மில்லியன் டொலர்கள் மதிப்பீட்டைக் கொண்ட சீனா வணிக குழுவின் முதலீடொன்று முன்னெடுக்கப்படுகின்றது. இது தற்போது இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட முதல் பாரிய வெளிநாட்டு முதலீடாகும்.

தளவாட மையத்திட்டம் இலங்கையின் வருமானத் திட்டம் 2 பில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு மேல் கொண்டு செல்லும், இது நாட்டின் மிகப் பெரிய வெளி நாட்டு முதலீடாக உருவெடுக்கும் என்று அந்நிறுவனம் தெரிவித்துள்ளது.

அதுமட்டுமன்றி டுபாய்க்கும் சிங்கப்பூருக்கும் இடையிலான கடற்போக்குவரத்துப் பாதையில் ஆழ்கடல் துறைமுகமான கொழும்பில் இந்த வளாகத்தை நிர்மாணிப்பதற்காக அமைக்கப்பட்டுள்ள நிறுவனத்தில் சீன நிறுவனம் 70 சதவீத பங்கு களைக்கொண்டிருக்கும்.

இந்தத் திட்டத்தை தெற்காசியாவின் மிகப்பெரிய தளவாட மையமாக விவரித்த அந்நிறுவனம், 2025 ஆம் ஆண்டின் இறுதிக் குள் அதை நிர்மாணித்து நிறுத்துவதற்கு எதிர்பார்க் கின்றது. அதேநேரம், இலங்கையின் தெற்கு முனையில் உள்ள அம்பாந்தோட்டையில் உள்ள துறைமுக வளாகத்தையும் நிர்வகிக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

2015ஆம் ஆண்டுவரை ஒரு தசாப்த காலம் நாட்டை ஆட்சி செய்த முன் னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வால் முன்னெடுக்கப்பட்ட வெள்ளை யானைத் திட்டங்களில் ஒன்றாக அந்தத் துறைமுகம் கருதப் படுகின்றது.

இலங்கையின் வரலாற்றில் மிக மோசமான பொருளாதார நெருக்கடிக்கு வழி வகுத்த கடன்பொறி என்று பலர் விமர்சித்த திட்டங்களுக்காக ராஜபக்ஷ சீனாவிடம் இருந்து பெருமளவு கடன் வாங்கினார்.

அம்பாந்தோட்டை துறைமுகத்தை நிர்மாணிப்பதற்காக 2017ஆம் ஆண்டு சீனாவிடம் இருந்து பெறப்பட்ட பாரிய கடனை திருப்பி செலுத்த முடியாத நிலையில், அதனை 99 வருட குத்தகைக்கு 1.12 பில்லியன் டொலர்களுக்கு அந்நிறுவனத் திடம் இலங்கை ஒப்படைத்தது.

சீனா தனது பிரம்மாண்டமான ஒரே மண்டலம் மற்றும் முன்முயற்சியின் கீழ் ஆசியா, ஆபிரிக்கா மற்றும் ஐரோப்பாவில் பல திட்டங்களுக்காக பில்லியன் கணக்கான கடன்களை வழங்கியுள்ளது. இது நாடுகளை கடனில் மூழ்கடிப்பதாக விமர்சகர்கள் கூறுகின்றனர்.

இலங்கையின் துறைமுகங்களை அணுகுவதன் மூலம் இந்தியப் பெருங்கடலில் சீனா ஒரு கடற்படை நன்மையைப் பெறுவது தொடர்பாக அண்டை நாடான இந்தியாவும் அமெரிக்காவும் கவலை தெரிவித்துள்ளன.

இந்நிலையில் இலங்கையின் துறைமுகங்கள் எந்தவொரு இராணுவ நோக்கத்துக்கும் பயன்படுத்தப்பட மாட்டாதென இலங்கை வலியுறுத்தியுள்ளது.

## கல்முனை கோட்டமட்ட விளையாட்டுப் போட்டிகள்: சம்பியன் பஹ்ரியா, 2 ஆமிடம் கல்முனை மிஸ்பாஹ்




கல்முனை கல்வி வலயத்திற்குட்பட்ட கல்முனை கோட்ட மட்ட பாடசாலைகளுக்கு இடையிலான விளையாட்டு போட்டி நிகழ்ச்சிகள் கல்முனை வலயக்கல்வி அலுவலக உதவிக்கல்வி பணிப்பாளரும், கல்முனை கோட்டக்கல்விப் பணிப்பாளருமான ஏ.பி.பாத்திமா நஸ்மியா சனூஸ் தலைமையில் மருதமுனை மசூர் மௌலானா விளையாட்டு மைதானத்தில் கடந்த மூன்று நாள்களாக நடைபெற்று இறுதி நாள் நிகழ்வுகள் வெள்ளிக்கிழமை கோலாகலமாக நடைபெற்றது.

வைபவரீதியாக இடம் பெற்ற இறுதி நாள் நிகழ்வில் கல்முனை வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.எஸ். சஹுதுல் நஜீம் பிரதம அதிதியாக கலந்து கொண்டு கோட்ட மட்ட போட்டிகளில் வெற்றிபெற்ற வீரர்களுக்கு பரிசில்களை வழங்கி வைத்தார். இந்நிகழ்வில் நிர்வாக பிரதிக்கல்வி பணிப்பாளர் எம்.எச்.எம். ஜாபீர், கல்முனை கல்வி மாவட்ட பிரதம பொறியலாளர் ஏ.எம். ஸாஹிர், வலயக்கல்வி அலுவலக கணக்காளர் வை. ஹபிபுல்லாஹ், கல்முனை மாநகர உதவி ஆணையாளர் ஏ.எஸ்.எம். அசீம், கல்முனை மாநகர சபை முன்னாள் உறுப்பினர் சிரேஷ்ட சட்டத்தரணி ஆரிகா காரியப்பர் ஆகியோர் கௌரவ அதிதிகளாகவும் உதவிக்கல்வி பணிப்பாளர் யூ.எல்.எம். சாஜித் உட்பட பிரமுகர்கள் பலரும் விசேட அதிதிகளாகவும் கலந்து கொண்டனர்.

கல்முனை கோட்டத்தில் உள்ள கல்முனை, மருதமுனை, நற்பிட்டிமுனை, பெரியநீலாவணை ஆகிய பிரதேசங்களில் உள்ள பாடசாலை மாணவர்கள் இந்த விளையாட்டுப் போட்டியில் பங்குபற்றியதுடன் 125 போட்டி நிகழ்சிகள் நடைபெற்று வெற்றிபெற்ற வீரர்கள் இறுதி நாள் நிகழ்வில் பரிசில்கள், பதக்கங்கள், சான்றிதழ்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

பாடசாலை மாணவர்களின் கண்கவர் அலங்கார அணிவகுப்புக்களும், கலை நிகழ்ச்சிகளும் இடம் பெற்ற இறுதிநாள் நிகழ்வில் கோட்டத்தின் அதிபர்கள், பாடசாலைகளின் பிரதிநிதிகள், உடற்கல்வி ஆசிரியர்கள், விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர்கள், ஏற்பாட்டாளர்கள் என பலரும் கலந்துகொண்டு மாணவர்களை உற்சாகப்படுத்தினர். புள்ளிகளின் அடிப்படையில் இந்த வருடம் பவளவிழா காணும் கல்முனை கமு ஃகமு ஃஅல் - பஹ்ரியா மகா வித்தியாலயம் கோட்டத்தின் சம்பியன் பட்டத்தையும், இரண்டாம் இடத்தை கல்முனை கமுஃகமுஃ அல் - மிஸ்பா மகா வித்தியாலயம் தனதாக்கி கொண்டது குறிப்பிடத்தக்கது.

## சாய்ந்தமருது சமுர்த்தி வங்கிச் சங்க முகாமைத்துவ பணிப்பாளர் ஜுனைதாவுக்குப் பிரியாவிடை நிகழ்வு

சாய்ந்தமருது பிரதேச செயலக சமுர்த்தி வங்கி சங்கத்தின் முகாமைத்துவ பணிப்பாளராக இறக்காமத்தைச் சேர்ந்த ஏ.எல்.யூ. ஜுனைதா கடந்த ஆறு வருடங்களாக கடமையாற்றி இறக்காம பிரதேச செயலகத்துக்கு இடமாற்றம் பெற்றுச்செல்வதையிட்டு பிரியாவிடை நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை சமுர்த்தி வங்கிசங்ககூட்டமண்டபத்தில் இடம்பெற்றது.




சாய்ந்தமருது பிரதேச சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்பு மற்றும் சமுர்த்தி வங்கிச் சங்க கட்டுப்பாட்டுச் சபை ஆகியவற்றின் ஏற்பாட்டில் சாய்ந்தமருது பிரதேச சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்பின் தலைவர் ஊடகவியலாளர் எம்.ஐ. சம்சுதீன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்விற்கு சாய்ந்தமருது பிரதேச செயலக உதவி பிரதேச செயலாளர் எம்.ஐ.முவஃபிக்கா பிரதம அதிதியாக கலந்துகொண்டார்.

இந்நிகழ்வில் தலைமைப் பீட சிரேஷ்ட சமுர்த்தி முகாமையாளர் ஏ.சி.ஏ. நஜீம், சமுர்த்தி வங்கி சங்கத்தின் சிரேஷ்ட முகாமைத்துவ பணிப்பாளர் ஏ.எல்.யூ. ஜுனைதா, கருத்திட்ட முகாமையாளர் றியாத் ஏ.மஜீத், கருத்திட்ட உதவியாளர் எம்.எம்.எம். முபாரக், அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.எப்.ஆர்.ஷர்பீன், அபிவிருத்தி உத்தியோகத்தர் எம்.ஐ.ர்வீன், சமுர்த்தி வங்கிச் சங்க கட்டுப்பாட்டு சபையின் தலைவர் கே.எம்.கபீர், உதவித் தலைவர் ஏ.எம்.அக்ரம், பிரதேச சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்பின் செயலாளர் எம்.முபிதா, முன்னாள் தலைவர் ஏ.எம்.அலாவுதீன், கணனி உதவியாளர் எஸ்.சாபித் அக்மல் உள்ளிட்ட சாய்ந்தமருது பிரதேச சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்பு மற்றும் சமுர்த்தி வங்கிச் சங்க கட்டுப்பாட்டுச்சபை ஆகியவற்றின் பிரதிநிதிகள் என பலரும் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் முகாமைத்துவ பணிப்பாளர் ஏ.எல்.யூ. ஜுனைதா அவர்களின் சேவைகள் மற்றும் அவரின் ஆளுமைகள் பற்றி அதிதிகள் மற்றும் பிரதேச சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்பு மற்றும் சமுர்த்தி வங்கிச் சங்க கட்டுப்பாட்டுச் சபை ஆகியவற்றின் பிரதிநிதிகளால் நினைவுகூர்ந்து பாராட்டி வாழ்த்துத் தெரிவிக்கப்பட்டது.

இதில் பிரதேச சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்பின் முன்னாள் தலைவர் ஏ.எம்.அலாவுதீனால் முகாமைத்துவ பணிப்பாளர் ஏ.எல்.யூ. ஜுனைதா பற்றி வாழ்த்துப்பா வாசிக்கப்பட்டு கையளித்துவைக்கப்பட்டது. மேலும் முகாமைத்துவ பணிப்பாளர் ஏ.எல்.யூ. ஜுனைதாவின் கடந்த ஆறு வருடகால மக்கள் சேவையினை கௌரவித்து பிரதேச சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்பு மற்றும் சமுர்த்தி வங்கிச் சங்க கட்டுப்பாட்டுச் சபை ஆகியவற்றின் பிரதிநிதிகளால் அன்பளிப்புகள் வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

# தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின்; 15ஆவது பொதுப் பட்டமளிப்பு விழா




இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் பதினைந்தாவது பொதுப் பட்டமளிப்பு விழா உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபுவக்கர் தலைமையில் வேந்தர் கௌரவ பாயிஸ் முஸ்தபாவின் முன்னிலையில் இன்று (சனிக்கிழமை) பல்கலைக்கழக மாநாட்டு மண்டபத்தில் ஆரம்பமானது.

பட்டமளிப்பு விழா நிகழ்வில் முதல் அமர்வின் போது களனிப் பல்கலைக் கழகத்தின் ஆங்கில மொழி சிரேஷ்ட பேராசிரியர் மைத்திரி விக்கிரமசிங்க பிரதம பேச்சாளராக கலந்துகொண்டு விசேட உரைநிகழ்த்தினார்.

அதேவேளை மூன்றாவது அமர்வில் உயர் நீதிமன்ற நீதியரசர் திலீப் நவாஸ் பிரதான உரையை நிகழ்த்தினார்.

சனிக்கிழமையும் ஞாயிற்றுக்கிழமையும் என இரண்டு நாள்களுக்கு ஐந்து அமர்வுகளாக நடத்துவதற்கு ஏற்பாடாகியுள்ளன.

குறித்த பட்டமளிப்பு விழா நிகழ்வுகளில் முதல் அமர்வில் கலை கலாசார, தொழில்நுட்ப பீடங்களைச் சேர்ந்த 395 மாணவர்களுக்கு பட்டங்கள் வழங்கப்பட்டன.

இரண்டாவது அமர்வில் முகாமைத்துவ - வர்த்தக பீடத்தைச் சேர்ந்த 371 மாணவர்களும், மூன்றாவது அமர்வில், இஸ்லாமிய கற்கைகள் அரபு மொழி பீடத்தைச் சேர்ந்த 380 மாணவர்களும் பட்டங்களை பெற்றுக்கொண்டனர்.

கலை கலாசார பீடத்தில் 2015ஃ2016 ஆம் கல்வி ஆண்டில் அரசியல் மற்றும் சமாதான கற்கையில் சிறந்த மாணவருக்கான கலாநிதி எம்.எல்.ஏ.காதர் விருதை முகம்மட் அலி பாத்திமா அஸ்மியா பெற்றுக் கொண்டார். இதேவேளை தமிழில் சிறந்த மாணவருக்கான பேராசிரியர் கைலாசபதி 2015/2016 ஆம் கல்வி ஆண்டில் முகம்மட் ஹுசைன் பாத்திமா றிஸ்லா பெற்றுக்கொண்டதுடன் அதே கல்வியாண்டில் இந்து கலாசார கற்கைக்கான சிறந்த மாணவருக்கான புலவர் மணி பெரியதம்பிப்பிள்ளை ஞாபகார்த்த விருதை பேபி சாலினி ராமக்கவுண்டர் பெற்றுக்கொண்டார்.

இரண்டாவது அமர்வில் முகாமைத்துவ - வர்த்தக பீடத்தினைச் சேர்ந்த டிவயாளி கிடாராமலீ சாலக்சாணி வசந்த குமாரி 2015/2016 ஆம் கல்வி ஆண்டில் வர்த்தக துறையில் சிறந்த மாணவருக்கான அல் ஹாஜ் ஏ.எம்.இஸ்மா யில் ஞாபகார்த்த விருதை பெற்றுக்கொண்டதுடன் முகம்மட் நஜீம் பாத்திமா நுஸ்ரா முகாமைத்துவ துறையில் அல் ஹாஜ் ஏ.எல். இப்ராலெப்பை ஞாபகார்த்த விருதைப் பெற்றுக்கொண்டார்.

மூன்றாவது அமர்வில், இஸ்லாமிய கற்கைகள் அரபு மொழி பீடத்தைச் சேர்ந்த அப்துல் மஜீத் முகம்மட் ஆகில் 2015/2016 ஆம் கல்வி ஆண்டில் அரபு துறையில் சிறந்த மாணருக்கான எம்.எச்.அப்துல் காதர் ஆலிம் ஞாபகார்த்த விருதையும் முகம்மட் இப்ராகிம் பாத்திமா ஷீபா இஸ்ராமிய வங்கி மறங்றுத் நிதி துறையில் கலாநிதி எம்.ஏ.எம்.சுக்ரி ஞாபகார்த்த விருதையும் கலந்தார் லெப்பை பாத்திமா மஸ்லிஹா முது தத்துவ மாணி துறையில் சிறந்த மாணவருக்கான இஸ்மாயில் டீன் மரிக்கார் விருது வழங்கி வைக்கப்பட்டது.

இதேவேளை கிறிஸ்னபிள்ளை மகாலிங்கம் முது கலைமாணி மற்றும் சிரேஷ்ட ஊடகவியலாளர் முஹம்மட் மூஸா முது தத்துவமாணி பட்டங்களையும் பெற்றுக் கொண்டனர்.

இரண்டாம் நாள் அமர்வில் (நான்காவது அமர்வில்) பிரயோக விஞ்ஞானங்கள், பொறியியல் ஆகிய பீடங்களைச் சேர்ந்த 332 மாணவர்கள் பட்டங்கள் பெறவுள்ளனர். ஐந்தாவது அமர்வில் கலை கலாசார, முகாமைத்துவ - வர்த்தக பீடங்களில் இணைந்து கல்வி கற்ற 374 வெளிவாரி மாணவர்களுக்கான பட்டங்கள் வழங்கப்படவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

அதேநேரம், வியாபார நிருவாகம், முகாமைத்துவம், தமிழ் உள்ளிட்ட துறைகளில் பட்டப்பின்படிப்புக்களை நிறைவு செய்த மாணவர்களுக்கான முதுமாணி, முதுதத்துவமாணி பட்டங்கள் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

நாட்டில் நிலவுகின்ற கொவிட் - 19 அசாதாரண சூழ்நிலையைக் கருத்திற்கொண்டு, பட்டமளிப்பு விழா நிகழ்வுகளை சுகாதார வழிகாட்டலுக்கமைய இடம் பெற்றன.

பட்டமளிப்பு விழாவின் இரண்டாம் நாள் அமர்வில் கிழக்குப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் உப வேந்தர் பேராசிரியர் த. ஜெயசிங்கம் விடே உரையாற்றவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர் Kalaikkathir

# ‘சுகாதாரத்துறை சுற்றுலா’ மூலம் வருமானமீட்ட இலங்கை திட்டம்

சுகாதாரதுறை சுற்றுலா மூலம் இலங்கைக்கு வருமானத்தை ஈட்டும் வேலைத் திட்டம் ஒன்று தயாரிக்கப்படும் என ஜனாதிபதியின் தேசிய பாதுகாப்பு தொடர்பான சிரேஷ்ட ஆலோசகர் சாகல ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

சர்வதேச தாதியர் தினத்தை முன்னிட்டு



கொழும்பு அறக்கட்டளையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிகழ்வில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

நமது நாட்டின் அழகிய சூழலுடன், சுகாதார சுற்றுலாவை வருமானம் ஈட்டக் கூடிய ஆதாரமாக நாம் உருவாக்க முடியும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இங்கிலாந்து மற்றும் ஆஸ்திரேலியாவில் வாழும் பல இலங்கையர்கள் மருத்துவ சிகிச்சை பெறுவதற்காக மீண்டும் நாட்டுக்கு வருகின்றமை தொடர்பில் தான் அறிந்துள்ளதாகவும் சாகல ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

இலங்கை இதை ஒரு வணிக வாய்ப்பாக மாற்றி, நாட்டின் சுகாதார அமைப்பின் இந்த அம்சத்தை மேலும் மேம்படுத்த வேண்டும் என்று சாகல ரத்நாயக்க கூறியுள்ளார்.

## ஹெரோயினுடன் இரண்டு பேர் வட்டுக்கோட்டையில் கைது!

யாழ்ப்பாணம், வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சுழிபுரம் பத்திரகாளி கோவில் பகுதியில் வைத்து இருவர் வெள்ளிக்கிழமை ஹெரோயின் போதைப்பொருளுடன் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸ் விசேட அதிரடிப் படையினரின் சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போதே ஓட்டோவில் ஹெரோயினை கொண்டு சென்ற இருவரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இதன்போது கைதான பனிப்புலம், பண்டத்தரிப்பு பகுதியைச் சேர்ந்த 38 வயதான நபரிடமிருந்து 2 1/2 கிராம் ஹெரோயினும், தொட்டிலடி, சங்கானை பகுதியைச் சேர்ந்த 33 வயதுடைய நபரிடமிருந்து 5 கிராம் ஹெரோயினும் மீட்கப்பட்டது.

இந்நிலையில், கைதாகி வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இருவரையும் மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## மதுபானங்களின் விலைக் குறைப்பு தொடர்பாக நிதியமைச்சு பேச்சு

கொழும்பு, மே 14

மதுபானம் மற்றும் பியர் ஆகியவற்றின் விலைகளை குறைப்பது தொடர்பான தங்களது அபிப்பிராயங்களை வழங்குமாறு கலால் திணைக்களம் உள்ளிட்ட தரப்பினருக்கு நிதியமைச்சு அறிவித்துள்ளது.

இதன் விலைகள் குறைவாக காணப்படுவதால் கலால் வரி வருமானத்தில் சில பாதிப்புகள் ஏற்படக் கூடும் எனவும், எனவே அபிப் பிராயங்களை வழங்குமாறு கலால் திணைக்களம், உள்நாட்டு இறைவரித் திணைக்களம் மற்றும் திறைசேரிக்கு நிதியமைச்சு அறிவித்துள்ளது.

உற்பத்தி வரியை குறைக்க வாய்ப்பு இருந்தால், மதுபானம் மற்றும் பியர் ஆகியவற்றின் விலையை குறைக்க வாய்ப்பு உள்ளதாக தயாரிப்பாளர்கள் சுட்டிக் காட்டுவதுடன், அடுத்த இரண்டு மாதங்கள் அவற்றின் விலையை குறைக்க வாய்ப்பு உள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

மேலும், மக்கள் சட்ட விரோத மதுபான பாவனையால் மதுபானத்தின் விலை அதிகரிப்பு காரணமாக பல சுகாதார பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளது என்றும் இதன் காரணமாக மருந்துகளின் விலையும் அதிகரித்துள்ளதாகவும் அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

# தூக்கக் கலக்கத்தில் மோட்டார் சைக்கிளை ஓட்டிய கடற்படைச் சிப்பாய் விபத்தில் சாவு

புத்தளம் - குருணாகல் பிரதான வீதியின் 2ஆம் கட்டைப் பகுதியில் இடம் பெற்ற வாகன விபத்தில் கடற்படைச் சிப்பாய் ஒருவர் ஸ்தலத்திலேயே உயிரிழந்துள்ளார்.

ஆனமடுவ பகுதியிலிருந்து புத்தளம் நோக்கி சென்ற லொறியுடன், புத்தளத்திலிருந்து ஆனமடுவ பகுதியை நோக்கிச் சென்ற மோட்டார் சைக்கிளொன்று நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானது.

இந்தச் சம்பவம் நேற்று (சனிக்கிழமை) அதிகாலை 5.45 மணியளவில் இடம்பெற்றுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மோட்டார் சைக்கிளை ஓட்டிச் சென்ற தம்பபண்ணி கடற்படை முகாமில் பணிபுரியும் கடற்படை சிப்பாய் இந்த விபத்தின்போது சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

அவர் குருணாகல், வாரியபொல பகுதியைச் சேர்ந்த 33 வயதான கே.எம். சந்தன பெரேரா என்கிற கடற்படை வீரர் என பொலிஸார் உறுதிப்படுத்தியுள்ளனர்.

குறித்த கடற்படை வீரர் கடந்த வெள்ளிக்கிழமை இரவு கடமையை முடித்துவிட்டு, நேற்று அதிகாலை வீடு திரும்பிக்கொண்டிருந்தபோதே இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாகப் பொலிஸார் மேலும் கூறியுள்ளனர்.

மோட்டார் சைக்கிள் ஓட்டிச் சென்றபோது கடற்படை சிப்பாய்க்கு ஏற்பட்ட தூக்கத்தால் கவனம் சிதறி, அவர் லொறியுடன் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானதாக பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையின் ஊடாகத் தெரியவந்துள்ளது.

இந்நிலையில், உயிரிழந்தவரின் சடலம் புத்தளம் ஆதார வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, விபத்தால் காயங்களுக்குள்ளான லொறியின் சாரதி புத்தளம் ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார் எனவும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை புத்தளம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.


Northern PC Park

வடக்கின் கணினிப்பூங்கா
கணினி உலகில் நம்பகமான சேவையில் 15 வருடங்களுக்கு மேலாக யாழ் மண்ணில்
#10 Muddaskadai Junction, Stanley Road, Jaffna.
info@pcpark.co www.pcpark.co
Hot Line :- 077 777 1545
077 757 0124 | 075 555 7327
077 336 6443 | 071 777 2377
021 567 5566 | 021 222 9581
021 222 2050 | 021 222 0388
Northern Pc Park Npcpark northernpcpark Northern PC Park



ஆறு மாத DSL உத்தரவாதத்துடன்
Palma மின்கலங்கள்
dsl We lead the way...!
IT Power Backupக்காக
PALMA
7Ah | 9 Ah | 20 Ah | 26 Ah | 42 Ah
65 Ah | 100 Ah | 150Ah | 200 Ah
ரூ.5,814 இருந்து
மின்சார தராசுகள் & பொம்மைகளுக்காக
6Ah | 12 Ah
ரூ.2,223 இருந்து
மின் மோட்டார் சைக்கிள்களுக்கான
12Ah | 20 Ah | 24 Ah | 28 Ah | 45 Ah
ரூ.13,252 இருந்து

Douglas & sons (pvt) ltd நான்கு தசாப்தங்களாக இலங்கை வாடிக்கையாளர்களின் வாகன மற்றும் பிற தேவைகளுக்காக சர்வதேச தரத்திலான பேட்டரிகளை இறக்குமதி செய்து விநியோகித்து வருகிறது.
077 307 8799
070 163 0209

காலைக்கதிர் Kalaikkathir

# நாமார்க்கும் குடியல்லோம் எனவுரைத்த தமிழுடியார்!



மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா
மேனாள் தமிழ்மொழிக் கல்வி இயக்குநர்
மெல்பேண், ஆஸ்திரேலியா

தமிழ்மொழி மற்றைய மொழிகளிலும் சிறப்பான மொழியாக விள ங்குவதற்குக் காரணம் , மற்றைய மொழிகளில் இல்லாத ஒரு சிறப்பு தமிழ் மொழியில் இருப்பதேயாகும் என்பது அறிஞர்கள் கருத்தாக இருக்கிறது. அந்தத் தனிச்சிறப்பு எது தெரியுமா அதுதான் பக்தி இலக்கியம் ஆகும். உலகின் எந்த மொழியிலும் பக்தி என்பது இலக்கியமாகக் கொள்ளப்படவே இல்லை. ஆனால் தமிழ் மட்டும் தனக்கெனப் பக்தியை இலக்கியம் ஆக் கியே இருக்கிறது. இதனால் தமிழ் பக்தியை அரவணைத்தபடியே பயணப்படு கிறது என்பதை கருத்திருத்தல் அவசியமாகும்.பக்தியை இலக்கியம் ஆக்கும் வகையில் தமிழுக்கு வந்து வாய்த்தவர்கள்தான் ஆண்டவனது அடியார்கள் ஆவர். அந்த அடியார்களில் முன்னுக்கு வந்து நிற்பவர் களில் மூத்தவர் காரைக்கால் அம்மையார். அவரின் பின் பக்திப் பெருவெளியில் பயணப்பட இம் மாநில த்தில் வந்தவர்களாய் அப்பரும் சம்பந்தரும் விளங்குகிறார் எனலாம். இவர்கள் இருவரும் ஒரே காலத் தவராக இருக்கின்ற பொழுதும் - அப்பர் மூத்தவராகவும் , சம்பந்தர் இவரின் இளையவராகவும் ஆகி நிற்கி றார்கள்.

அப்பரும் சம்பந்தரும் கி.பி ஏழாம் நூற்றைண்டைச் சேர்ந்தவர்களாய் இருந்தாலும், இருவர் வாழ்வும், அவர்களுக்குக் கிடைத்த அனுபவங்களும் வேறு பட்டனவாகவே அமைந்திருந்தன என்பதும் நோக்கத் தக்கது,அப்பர் குடும்பச் சூழல் வேறாயும் சம்பந்தர் குடும்பச் சூழல் வேறாயும் அமைந்தே காணப்பட்டது. ஆனால் பக்தி என்னும் நிலையில் இருவரும் ஒருமித்தே பயணப்பட்டார்கள். அப்படிப் பயணப்பட்ட நிலையிலும் அப்பரின் சிந்தனை, செயற்பாடுகள், சம்பந்தரிலும் வேறுபட்டதாகவே அமைகின்ற ஒரு நிலை தோற் றம் பெற்றது. அதற்கு உரிய காரணம் தான் என்ன என்பதை அறிவது மிகவும் முக்கியமாகும்.

மருள் நீக்கியார் சைவத்தில் பிறந்து சைவத்தைத்துறந்து சமணம் என்னும் சமயத்தைத் தழுவுகின்றார். மருள் நீக்கியாரின் இளம் மனத்தில் சமணத்தின் கொள்கைகள் சிறந்தனவாகப் பதிகின்றன. சமணரும் இவரை அணைக்கின் றனர்.சமண மடத்தின் தலைவராய் ஆகும் அளவுக்கு மருள் நீக்கியார் ஆளுமை வளர்கிறது. மருள் நீக்கியார் என்னும் பெயர் மறைந்து சமண மடத்தி ன் தலைவராய் தருமசேனர் என்னும் புதுப் பெயர் வாய்க்கிறது.நாட்டில் சமணமே அரசபீடத்தாலும் அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது.மருள் நீக்கியாரின் மனம் மாறுகிறது. சமணத்தின் தலைமையைத் தூக்கி எறிந்துவிட்டு தான் பிறந்த சைவத்தில் அவர் சங்கமம் ஆகிறார். சங்கமம் ஆகும் நிலையில் அவர் நெஞ்சம் தமிழைக் கொட்டுகிறது. அதுவும் கவியாய், பக்தியாய் ,இசையாய் கொட்டுகிறது. எம்பெருமான் சிவனே வியந்து நாவுக்கரசு என்று விளிக் கும் அளவுக்கு தமிழ் ஆக்கி நிற்கிறது. மருள் நீங்கியதால் அருள் கிடைக்கிடைக்கிறது. தருமசேனர் சைவம் தளைக்க , தொண்டுகள் சிறக்க, நாவுக்கக்கரசாய் வலம் வருகிறார்.வலம் வருகின்ற நாவுக்கரசரை இளையவரான சம்பந்தப் பெருமான் கண்டவுடன் அப்பரே என்று அழை க்கின்றார். இறைவன் அழைத்த நாவுக்கரசர் என்னும் பெயரும் சம்பந்தப் பெருமான் அழைத்த அப்பரே என்னும் பெயரும் - சைவத் தமிழ் உலகில் நிலையான , உறுதியான பெயராக நிலைத்தே விட்டது என்பது மனங்கொள்ளத்தக்கது.

அப்பர் பெருமான் வரலாற்றை நோக்கும் பொழுது - அவர் சமயத்தின் வழியிலும் பயணப்பட்டிருக்கிறார். சமூகநீதியின் வழியிலும் பயணப்பட்டி ருக்கிறார் என்றுதான் மனங்கொள்ள வைக்கிறது. சம்பந்தப் பெரு மானின் சமகாலத்தவராக இருந்த பொழுதும் , அப்பரின் வாழ்வியல் அனுபங்களும் , அவரின் வயதின் முதிர்ச்சியும் அவருக்கென்று தனியான ஒரு இடத்தி னையே வழங்கி இருக்கிறது எனலாம்.

சமணமதத் தலைவராய் இருந்த காரணத்தால் அவரின் புலமை நலம் ஆளுமை உடையதாகவே அமைந்தது,வடமொழியிலும் , தமிழ் மொழியிலும் புலமை உடையவராகவும் இருந்திருக்கிறார். சமண மதத்தாரால் மதிக்கப்படும் நிலையில் அவர் இருந்திருக்கிறார் என்பதும் நோக்கத்தக்கது. அப்படி மதிக்கப் பட்டவர் அந்த மதத்தை விட்டு வெளியில் வருவதும் , சைவத்தில் இணைவதும் சம்பந்தருக்குக் கிடைக்காத நிலை எனலாம். மதம் விட்டு விடு மதம்மாறியவர் என்று எடுத்துக் கொண்டால் அதில் அப்பர்தான் முன்னிற்கிறார்.அப்படி அவர் மனம் மாறியமையமையால் சைவம் மிகச்சிறந்த ஒரு அடியவரை, பேராளுமையை, சிந்தனையாள ரைப் பெற்றுக்கொள்ளும் நிலை வாய்த்தது என்பதை கருத்திருத்தல் அவசியமா னதாகும்.ஏழாம் நூற்றாண்டின் சமய சமூக சூழலில் சம்பந்தருடன் அப்பரின் இணைப்பு அளப்பரும் இணைப்பாகவே அமைந்தது. அப்பரும் சம்பந்தரும் அப்பாவும், பிள்ளையும் போல இணைந்து ஆலயங்கள் தோறும் சென்று அடியார்கள் மனத்தில் பக்தியென்னும் விதையினை ஆழமாக விதைத்திட்டார்கள் என்ப தும் நோக்கத்தக்கதாகும்.இளமையும் முதுமையும் இணைந்த நிலை சைவ பக்தியுலகுக்கு பெரும் உந்து சக்தி யாக அமைந்தது என்பதைக் கருத்திருத்தல் வேண்டும்.

அப்பர் மதம்மாறிய நிலையில் , அவரின் கூட இருந்த சமணர்கள் ஆத்திரம் கொண்டு வெகுண்டெழுந் தார்கள். ஏழாம் நூற்றாண்டில் அரசுகட்டிலில் பாண்டியனும் , பல்லவனும் இருந்தார்கள். அவர்களும் சமணத்தைத் தழுவி அதற்கே ஆதரவும் காட்டி நின்றார்கள். சமணம் என்பது அரசமதமாகவே காணப்ப ட்டது எனலாம். வெகுண்ட சமணர்கள் அரசனை நாடி , மதம்மாறிய துரோகத்துக்கு உரிய தண்டனை யினை அப்பருக்கு வழங்கிட வழி வகுத்தனர். அரசனுடைய அழைப்பாணை அப்பரிடம் போனது. அப்பர் மனம் முழுவதும் எம் பெருமான் சிவனின் நினைப்பே நிறைந்திருந்த காரணத்தால் , அரசாணையினை அவர் ஒரு பொருட்டாக எடுக்கவேயில்லை. அரனுக்கு அடியவராய் ஆகி விட்ட காரணத்தால் அரசினையே எதிர்த்து ;

**நாமார்க்குங் குடியல்லோம் நமனை யஞ்சோம்**
**நரகத்தி லிடர்ப்படோம் நடலை யில்லோம்**
**ஏமாப்போம் பிணியறியோம் பணிவோ மல்லோம்**
**இன்பமே யெந்நாளுந் துன்ப மில்லை**
**தாமார்க்குங் குடியல்லாத் தன்மை யான**
**சங்கரன்நற் சங்கவெண் குழையோர் காதிற்**
**கோமாற்கே நாமென்றும் மீளா ஆளாய்க்**
**கொய்ம்மலர்ச்சே வடிஇணையே குறுகி னோமே**

என்று அஞ்சாமல் ஏழாம் நூற்றாண்டில் எடுத்துரைத்த தமிழ் அடியவராய் அப்பர் பிரகாசித்து நிற்கிறார். அரசனையே எதிர்த்து தனது அஞ்சாமையை உரைத்த அப்பரின் துணிச்சல் ஒரு சமய , சமூகப் புரட்சியாய் அமைகிற தல்லவா! பிற்காலத்தில் பாரதி அச்சமில்லை அச்சமில்லை என்று கர்ஜிப்பதற்கும் வழி வகுத்தவர் அப்பர் என்றும் எடுத்துக் கொள்ளலாம் அல்லவா!

சம்பந்தருக்கு இவ்வாறான சந்தர்பம் வாழ்க்கையில் வாய்க்கவில்லை. அது மட்டு மல்ல அப்பரின் பின் வந்த எந்த அடியவர்களுக்கும் இப்ப டியான சந்தர்ப்பம் வரவேயில்லை. இதனால் அப்பரினால் மட்டுமே நாமா ர்க்கும் குடியல்லோம் என்று சொல்லும் நிலை வாய்த்துவிட்டது. சமய த்தை மாற்றி வந்த நிலை யிலும் அப்பர் உயர்நிலையிலே யாவராலும் பார் க்கப்பட்டார். இதுவும் அப்பரை மற்றவர்களிருந்தும் வேறுபடுத்தியே காட்டி நிற்கிறது.

தமங்குத் தீங்கு வந்தால் யாவருமே நொந்து போவார்கள். வந்த தீங்கினை வைதே நிற்பார்கள். ஆனால் அப்பர் வித்தியாசமானவராக விளங்குகிறார். அவருக்கு சூலை நோய் வந்தது. பெருந்துன்பப் பட்டார். அப் படிப் பெருந் துன்பத்தை தந்த சூலைநோயினை வையாமல் அதற்கு நன்றியினைச் சொல்லுகிறாரென்றால் அப்பரின் சிந்தனை வித்தியாசாமானதுதானே!

**பொய்வாய்மை பெருக்கிய புன்சமயப் பொறிஇல் சமண்நீசர் புறத்துறையும்**
**அவ் ஆழ்குழியின் கண்விழுந்து எழும் ஆறு அறியாது மயங்கி**
**அவம்புரிவேன்**
**மைவாச நறுக்குழல் மாலையாள் மணவாளன் மலர்க்கழல் வந்தடையும்**
**இவ்வாழ்வு பெறத்தரு சூலையினுக்கு எதிர்செய் குறை என்கொல்**

இப்படிச் சொல்லுவதற்கு யாரால் முடியும் ? அப்பர் ஒருவரால்த்தான் முடியும். அதனால் அவர் உயர்ந்தே நிற்கிறார். சூலை வந்த படியால்த் தான் , புன்சமயத்தை விட்டு வெளிவரவும். அறிவானது தெளிவுற்று, நற்பாதை வழி காணவும், உயர்பொருளான அந்தப் பரம்பொருளின் பாதங்களைப் பற்றவும் முடிந்தது என்னும் மனத்தெளிவும் ஏற்பட்டது என்று சொல்லும் அளவுக்கு அப்பர் இருந்திருக்கிறார் என்பது அடியவர்கள் அனைவருக்கும் ஏன் சமூகத்துக்குமே காட்டப்படும் புதுக் கருத்தாய் மலர்கிறதல்லவா!

சமயத்தில் புரட்சி , சமூகத்தில் புரட்சி என்று அப்பரின் புரட்சிகள் வளர்ந்து கொண்டே போவதைக் காணமுடிகிறது. அரசை எதிர்த்தார். பெரிய அமைப் பாய் அக்காலத்தில் இருந்த சமணத்தையே எதிர்த்து துணிவுடன் உண்ணா நோன்பினைக் கைக்கொண்டு உறுதியுடன் தனது எண்ணத்தை நிலை நாட் டுகிறார். பிற்காலத்தில் அண்ணல் காந்தி உண்ணா நோன்பினைக் கைக் கொள்ளவும் , அவரைத் தொடர்ந்து பலரும் பல சந்தர்ப்பங்களில் உண்ணா நோன்பினைக் கைக்கொள்ளவும் முன்னோடியாக அப்பர் விளங்குகிறார் என்பதும் மனங் கொள்ளத்தக்கது.

துணிவான எணண்ணங்களை மனத்திலே நிறைத்து வைத்தவராய் அப்பர் பெருமான் இருந்திருக்கிறார் என்பதைக் கட்டாயம் சொல்லியே ஆக வேண் டும். அந்தவகையில் அவரின் எண்ணமாய் மலரும் இக்கருத்து யாவரை யும் சற்று திகைப்புடன் திரும்பிப் பார்க்க வைத்திடும் கருத்தாகவே அமை கிறது எனலாம். ஆண்டவன் அடியார்களுக்கு அவர் கொடுக்கும் உயரிய நிலை இங்கே காட்டப்படுகிறது.

**சங்கநிதி பதுமநிதி யிரண்டுந் தந்து**
**தரணியொடு வானாளத் தருவ ரேனும்**
**மங்குவார் அவர்செல்வம் மதிப்போ மல்லோம்**
**மாதேவர்க் கேகாந்த ரல்லா ராகில்**
**அங்கமெலாங் குறைந்தழுகு தொழுநோ யராய்**
**ஆவுரித்துத் தின்றுழலும் புலைய ரேனும்**
**கங்கைவார் சடைக்கரந்தார்க் கன்ப ராகில்**
**அவர்கண்டீர் நாம்வணங்கும் கடவு ளாரே**

என்னதான் செல்வமும் ,செல்வாக்கும் , உயர்நிலையும் வாய்த்தாலும் ஆண்டவன் அடியவராய் இல்லார் எதுவுமே இல்லார்தான். என்று கூறி - எந்த ஒரு நிலையில் இருந்தாலும் அவர்கள் ஆண்டவனின் அன்புக்கு உரிய வரானால் அவர்களே வணங்கத் தக்கவர்கள் என்று சொல்லும் அப்பரின் சிந்தனை சமயத்தில் தோற்றுவிக்கப்பட்ட புதிய சமூகச் சிந்தனையாக எழுகிறதல்லவா!

சமணத்தில் பல தத்துவங்கள் இருக்கின்றன. அறநூல்கள் பலவற்றின் ஆசிரியர்களாக சமண ஆளுமை கள் பலர் இருக்கின்றார்கள் என்பதை எவரும் மறுத்துரைத்துவிடல் முடியாது. ஆனால் உலகியல் வாழ்வில் இசையினையும் , இல்லறத்தினையும், பெண்களையும், கலைகளையும், அழகினையும், சமணம் ஒதுக்கியது மட்டுமல்ல வெறுப்புடனுமே பார்த்தது. இந்த நிலை அப்பருக்கு உடன்பாடாக அமைவதாக இல்லை. இவை அனைத்தையும் சைவம் அணைத்தே நின்றது. அப்பரும் அவற்றை அகமிருத்தி தன்னு டைய சிந்தனைகளை மலர்ந்திடச் செய்து நின்றார். அதன் ஒரு நிலைதான் இசையோடு உகந்த திருமுறை ப்பாடல்களாகும்.ஏழாம் நூற்றாண்டில் தமிழ் இசையினைக்



# கல்யாண மேடை



- பிரமி -
திருகோணமலை

ஈஸ்ரஜனின் அழைப்பிலும் தெஸ்ரோனின் ஈர்ப்பிலும் ஓய்வு நேரங்கள் எல்லாம் தங்களுக்காகவே பரிமாற்றப்பட்டன. ஜெகதா பணிநிமிடங்கள் போக மீதி எல்லாவற்றையும் அவனுக்காக, சிந்திப்பதிலும் கூட அவனுக்காக ஒதுக்கி கொள்வாள். அவன் மாத்திரம் என்ன அவளோடு ஒன்று கூட அதுவும் நினைவிலும். ஓய்வில்லாத நேரங்களை கூட ஒதுக்கி கொடுப்பான்.

அந்த திருமண நாட்களில் ஆரம்பங்களில் எல்லாத் தொடர்பாடல்களும் ஒருவித உச்சஸ்தாயில் ஆரோகண இசை மீட்டும் ஏற்றம் பெற்றுக் காணப்பட்டது. இந்த துரிதத்தில் ஒன்று இரண்டாய் நான்கு பிள்ளைகள். விலையதிகரிக்கப்பட்ட சந்தைப் பொருள் போன்று கொள்வனவில் குறை ஒன்று நகர்ந்து கொண்டே இருந்தது. இந்த ஆரோகண இசை இந்த நாட்களில் மத்திமஸ்தாயிக்கு கொஞ்சம் கொஞ்சமாய் மந்தகதியில் அவரோகணிக்கத் தொடங்கியது. வேலைப் பழு பிள்ளைகள் மீதான கவனம் அதிகமாகிக் கொண்டது.

சத்தியன் வெளிக்கடமைகளுடன் ஜெகதாவையும் விட்டுவிடவில்லை. தொடர்ந்து கவனித்துக் கொண்டே இருந்தான். ஜெகதா நான்கு பிள்ளைகளுடன் சத்தியனுக்கான நேரத்தைப் பாதியில் இன்னும் பாதியாய், இன்னும் இன்னும் பாதியாய் பகிர்ந்து கொண்டாள். அவள் அரச உத்தியோகம் பார்ப்பவள். பணிகளுக்கும் அவ்வப்போது நேரப் பகிர்வுகள் கைமாறிக் கொண்டிருந்தது. நான்கு பெண் குழந்தைகளுக்கும் அவள் ஊட்டிக் கொடுத்துக் காய்ந்து, குறைந்த உதிரம் அவள் உடல் வண்ணத்தை மாற்றித் தாய்மையை தூக்கிவிட்டது. ஜெகதா அவள் எழில் கோலத்தைத் தன் பிள்ளைகளுக்குத் தாரை வாத்துக் கொண்டிருந்தாள். தன் உடல் மாற்றங்களை கவனிக்க அவளுக்கு நேரம் இருந்தது இல்லை. செக்குப் பூட்டிய விலங்கென நிக்காமல் ஓடிக் கொண்டிருக்கும் நிர்பந்தம். சத்தியன் அவள் காதல் குழந்தைகளைக் கருணை காட்டுவதில் தவறுவதில்லை.

இப்போது எல்லாம் சத்தியனின் ஆளுமை அகன்ற தோள்களுடன் மேலும் மெருவூட்டப்பட்டுக் கொண்டே இருந்தது. அவன் தேவை தேடலில் ஆரோகணத் துரிதம் இன்னும் உச்ச ஸ்தாயிலே இருந்தது. அன்று இரவு உணவுக்காக மேசையில் கரடி பிறை பார்த்தது போல் அமரும் வாய்ப்பு நீண்ட நாட்கள் ஆன பின் சத்தியனிடம் இருந்தது. ஒரு விழி வழிப் பரிமாற்றம். ஜெகதாவுக்கு இது திருமண காய்ச்சல் போல் தெரிந்தது. அவளும் சுதாகரித்துக் கொண்டாள். இரவு உணவு வேகமாகின்றது. சத்தியன் கைகளைக் கழுவிக் கொண்டே அவளையும் கண்களால் கழுவி ஒற்றிக் கொண்டான். ஜெகதாவிடம் இருந்து அத்துணை சமபங்கான சாடைகள் உணர்வாக காணவில்லை. இருப்பினும் விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளப்பட்டது. பிள்ளைகள் தூங்கட்டும் என்பதாய் ஒரு காட்டி குறித்து விட்டாள்.

அது அவர்கள் நேரம். சத்தியனின் ஆதி அன்பு ஆசைதேடலுக்கு அவளால் இப்போதெல்லாம் இசைந்து போக முடியவில்லை. சினத்தாள். சில நேரம் சிந்தனை அவளை விட்டு தூரமாகவும் போயிருந்தது. ஒருவர் தேட ஒருவர் மூட தேடல் தீவிரத்தில் தவித்து, கண்டு கொண்ட அந்த நீரோடை காய்ந்து வற்றி ஏமாற்றியது. வற்றிய சுனையில் ஆங்காங்கே தேங்கிய துளிகளை ஒன்று சேர்த்து பருகிவிட முயற்சி. ஆனாலும் வலி மிகுந்தது. உணவு இருந்தும் பசி இருந்தும் பார்த் திருப்பு. பரிமாற மனமிருந்தும் பாத்திரம் கொடுக்க மறுத்ததா? சூரியன் தன் வேளை என்று நிலவினை வழியனுப்பி விட்டு கிழக்கில் கனிய ஆயத்தமானான். இராக்கால நீள்கடலில் பொத்தல் வலை வீசிய மீனவனாய் விடியலில் வெறும் கையோடு கரை சேர்ந்தான் சத்தியன்.

வழக்கமான வாழ்க்கை ஓட்டம். இன்று அவள் வேகத்தில் திடீர் வீழ்ச்சி. தொட்டதும் பட்டதுமாய் ஆங்காங்கே எல்லா வேலைகளும் தொக்கு நின்று கொண்டே இருந்தது. கேள்விக்கணைகள் அவளை அட்டதிசைகளிலும் இருந்து வந்து தாக்கிக் கொண்டிருந்தது. பிள்ளைகளை கவனித்து பாடசாலைக்கு அனுப்பி விட்டு காலை உணவை தனக்கும் சத்தியனுக்கும் பொட்டலம் செய்து விட்டு, அவன் பொட்டலத்தில் தன் ஏக்கத்தையும் சேர்த்து முடித்து வைத்து, தன்னை ஆயத்தம் செய்தாள்.

இன்று கண்ணாடியில் சற்று நேரம் செலவாகிறது. திருமண நாட்களில் 16 வருடங்கள் தீர்ந்து போயிருந்தது அன்றுடன். அவள் முகப்புச்சுக்களும் டப்பாவுடன் காய்ந்து காலாவதியாகிஇருந்தது. அதனை எடுத்துப் பார்த்து, அப்படியே வைத்துவிட்டுக் கண்ணாடியுடன் ஏதோ உரையாடத் தொடங்கினாள் ஜெகதா. 'என்னடி ராத்திரி இப்படி பண்ணிட்டாய்?' 'இனி அவரை என்னால பாத்துக்க முடியாது போல! அவருக்கு ஆக்கி போடும் பக்குவம் இல்லாமல் போச்சா? என்ன எனக்கே என்னை பார்க்க முடியாமல் இருக்கின்றதே' என தன் உடல் மாற்றங்களை, நிறை அதிகரிப்பை, தன் நேர்த்திக் குறைவுகளை கவனிக்கலானாள்.

'எங்கே என் இடை? கன்னத்தில் என்ன கரையான் புத்துக்கள்? கண்ணை சுற்றி ஏன் கருங்குழியங்கள்? தோள்பட்டையின் கீழ் கைகளில் என்ன இது தேனீக்கள் மெழுகு சேர்த்து விட்டதா?' தசைதொங்கி கைகளில் ஊஞ்சலாடிக் கொண்டிருக்கின்றது. நகக்கண்களில் சட்டி பானை தடவிய சாம்பல் கரி கண்காட்டியது. தலைமுடி விடை பெற்று ஆங்காங்கே ஆட்டு வால் போன்று சிலிர்த்து ஆடிக் கொண்டிருந்தது. ஆழ,ஆழ, ஆழம் சென்று ஆராய்ந்து தன்னைத்தான் குறைந்து கொண்டாள்.

சத்தியன் 'நான் தயார் போகலாமா?' என்றான் இன்னும் உடுக்கவில்லை அவள். அவன் நேரமானதால் 'சரி நீங்க ஆறுதலா போங்க நான் இன்றைக்கு நேரத்துக்கு போகணும்.' என்று அவசரமாய் கிளம்பினான். 'வீட்டில் சாப்பிட வர மாட்டேன். கடையில் சாப்பிடுவேன் இன்று' என்றபடி புறப்பட்டான்.

பேரிடி... ஒப்பிட்டாள் ஜெகதா. 'கடையில் சாப்பிடு வாரோ?' வினா எழுப்பினாள் தனிமையில்.

மாலையில் சத்தியன் சற்று தாமதமாய் வீட்டுக்கு வந்தான். வந்ததும் அலுவலகத்தில் தன் சக பணியாளர் மீனாவின் மதிய உணவு பற்றி கூறினான். வேலை அதிகம் அதனால் அவளுடன் பகிர்ந்துண்டதாக கூறினான். இயல்பாக அவன் கூறிவிட்டு எந்த சலனமும் இன்றி நகர்ந்தான். ஜெகதா கொக்கரித்தாள். அடைக்கோழியின் அத்தனை சாங்கமும் இப்போது அவளிடம். கரகரத்தபடி அங்குமிங்கும் அவன் தொட்டது பட்டது எல்லாவற்றுக்கும் எரிந்து விழலானாள். சத்தியனுக்கு ஒன்றும் புரியவில்லை. அவன் அழகாக உடுத்திக் கொண்டாள், தனியாக எதனைச் செய்தாலும் அன்று கலவாய் குருவி குடி வந்துவிடும் வீட்டில்.

ஏன் தேவைகளின் தேக்கமா? புரிதலின் புறந்தள்ளலா? எண்ணங்களில் தப்பிதமா? சுயமதிப்புத் தாழ்வுகளா? ஜெகதா தினம் தினம் தீண்டும் நாகமாய் மாறிக்கொண்டே இருந்தாள். சத்தியன் எப்போதும் தன் கண் முன் இருக்க வேண்டும். இதுவே விருப்பம் ஆனால் இருக்கும் போதெல்லாம் எரிந்து விழத் தவறுவதில்லை. சில நேரம் தேவையற்ற கடின வார்த்தைகளால் காயம் தந்து விட்டு தன்னைத்தான் குத்திக் கொள்வாள். பாவம் ஏன் என்று தெரிந்தா செய்தாள். இல்லையே! சத்தியன் விடுமுறைகளில் அவளின் அனுமதி உடன் மதுபானத்தை மருந்து போன்று எடுத்துக் கொள்வது வழக்கம். இப்போது அவன் இரண்டு முறை, மூன்று முறை என தடவைகளை நெருக்கிக்கொண்டான்.

இவர்களின் ஆயுதம் அற்ற கெரில்லா யுத்தத்தில் பிள்ளைகளுக்கும் உத்தி அறிந்து கொண்டனர். பெண் பிள்ளைகள் எப்பவும் தந்தையின் ஒத்தூதிகள். இவர்களும் விதிவிலக்கு அல்ல. ஜெகதா இன்னும் தன்னை தாழ்வுகளில் புதைக்கலானாள். பாவம் எல்லோரின் வெறுப்பும் எதிர்பாரா கடிந்து கொள்ளலும் ஜெகதாவிடம் அடுக்கி உயர்த்தப்பட்டன. வேண்டாதவர் கோபம் வேண்டியவர்களில் இடம் மாற்றப்பட்டது. அத்தமற்ற சந்தேகங்கள் ஓ...ப்போட்டுக் கொண்டு அன்பை தொலைத்துக்கொண்டது. இரவு தொடர்புகள் அணைகட்டிக் கொண்டது. தனித்து போனாள் அவள்.

சத்தியன் 'நீ இந்த புடவையில் அழகு' என்றான் 'அப்படியா?' என ஏற்புரை தந்தாள் மீனா புதியதொரு நட்பு வானவில் ஆனது. வஞ்சகம் அற்ற மனம் நட்போடு தொடர்ந்தது. ஜெகதா வெறுப்பில் இன்னும் இன்னும் தொடர்ந்தாள். திருமணத் தேதி இருபதும் வந்தது. ஜெகதாவின் மாற்றத்தை அவதானித்த சத்தியன் 'இன்று எப்படியாவது பேசிவிட வேண்டும். என்ன? இப்படி ஒரு மாற்றம் இவளிடம். ஏன் புரிதலற்ற புனைவுகளுடன் தன்னைத்தான் துன்புறுத்தி என்னையும் கவலை செய்கிறாளே! முன்பு இவள் இப்படி இல்லையே! நான்கூட அவளை எதிலும் கட்டாயம் செய்யவில்லையே!' சிந்தித்து முடிவெடுத்தான். திருமண நாள் வழக்கமான அவன் பரிசில் அழகிய பட்டுப்புடவை மல்லிகைச்சரம் வாங்கிக்கொண்டு அவளிடம் வந்தான். 'ஜெகதா அம்மா!' ஓ... இவன் மறக்கவில்லை அவள் கண்கள் நிறைந்தது. 'ஏன்? ஏனடி' என்று கைகளைப் பற்றி இறுக்கி அணைத்துக்கொண்டான். அவள் உள்ளம் புரிந்தவளாய் இருபது ஆண்டுகள் முன்சென்று அவளை கோர்த்துக் கொண்டான். கூட்டுக் கிளி கதவு திறந்தது போல் இறக்கைகளை அடித்துக் கொண்டாள் ஜெகதா. 'ஏண்டி என்ன சந்தேகப்படுகிறாய். உன்ன விட்டு எங்க போகபோறேன்டா' வார்த்தைகள் குறைந்து வருடல்கள் மீள ஆரோகணித்தது. மடை திறந்த வாவியென ஜெகதா அவன் மார் நனைத்துக் கொண்டிருந்தாள். 'பிள்ளைகளுக்கு கேட்டு விடப்போகுது சற்று பொறு வருகின்றேன்.' மகளின் பெயரை சொல்லி அழைத்து பார்த்தான். அசைவுகள் இல்லை. அவர்கள் தூக்கம். உறுதி செய்தவன். அவன் உச்சஸ்தாயி இசையை வாசிக்கலானான்.

'இல்லங்க உங்களை இப்படி பட்டினி போட்டுட்டேனே!' 'என்னால உங்களை சந்தோமாய் பார்க்க முடியாது போல இருக்கு. நான் ரொம்ப அசிங்கமாக போயிட்டேன். அதுதாங்க நீங்க என்ன விட்டுட்டு வேற எங்கேயும்...' நீட்டி நெழிந்தாள். 'பயமாக இருக்கு.' என்று இழுத்துக் கொண்டு ஓலமிட்டாள்.

ஓ... பெண்கள் அதிலும் மனைவிகள் கணவனிடம் எரிந்து விழுவது எல்லாம் அவனை வெறுப்பதால் இல்லை. தன்னை விட்டு எங்கும் போய்விடக்கூடாது என்றுதான். திருமணத்தின்பின் முழு உணர்வுகளையும் கணவனுக்கு தாரை வார்த்துத் தந்த பின்னே தாலி வாங்கிக்கொள்பவள். இந்த மெய்ஞானத்தின் ஆற்றுகை புரிதலுக்கு அப்பாற்பட்டது. தன் கணவன் தனக்கு மட்டும் என்பதில், அவன் தன்னிடம் மட்டுமே இருந்து விட வேண்டும். என்ற உரிமைப் போராட்டத்தில் ஒரு சிலர் அவன் தவறுகளை நிருபணம் செய்தபின்னும் தனக்குள் புதைத்து நேசிக்கும் பாங்கில் முந்தானை முடிச்சிட்ட தந்திர தாரங்கள் விசேமானவர்கள். என் உரிமை என்று இல்லாதவற்றை எடுத்துக்காட்டி எட்டித் தட்டி குறைகூறி மெண்டு ஏப்பமிட்டுக் கொண்டே கொண்டு போடும் சிலர். வேண்டும் நீ என்ற தொடரில் தொலைத்து விட்டு நிற்பவர்கள்.

இதில் இரண்டாம் ஜாதி தான் ஜெகதா பாவம் தன் கணவனை புரியாதவளாய் பிரிய மனமின்றி பேரிரச்சல் இட்டமேகமாய் பெய்து ஓய்ந்து வெளிச்சமான பூமி போல் அவள் முகம் பிரகாசித்தது. சத்தியன் அவளை இன்னும் இரசிப்பதாய் உணர்த்தினான். இரவு வானம் அழகானது கண்ணாடி முன் இருவரும் அர்த்தமுள்ள சிற்பமாய் அவளை சிலை என்றான். அவள் பொய் என்றாள். ஊடலில் ஆண் சுவாசம் பெண்மை நுகர்ந்தது. புரிதல் பிரம்மாண்டமாய் நிறைந்து கொண்டது மீண்டும் ஓர் முதல் இரவில்.

# நாமார்க்கும் குடியல்லோம் .....

காத்திட வந்த பேராளுமையாகவே அப்பர் எழுகின்றார். அவரினால் பக்தி இலக்கியப் பரப்பில் திருத்தாண்டகம் என்பது புதுவரவாய் வருகிறது. தமிழ் இலக்கியப் பரப்பில் தாண்டகத்தை அறிமுகப்படுத்தியவராய் அப்பர் பெருமானே முன்னிற்கிறார். இவரின் இந்த புதிய அறிமுகத்தால் அமைந்த தமிழ் பக்திப் பாடல்கள் இசையுடன் பாடுவதற்கு இயைந்த தாகவே அமைகிறது. அடியவர்கள் இறைவனை ஆராக்காதலுடன் பாடிப் பரவிட இந்த இசையுடன் அமை ந்த தாண்டகப் பாடல்கள் கைகொடித்தே நிற்கின்றன. இது அப்பரினால் ஏற்பட்ட மிகப்பெரிய மாற்றம் எனலாம். அப்பரின் இப்புது முயற்சியால் அவர் தாண்டக வேந்தர் என்று யாவராலும் அழைக்கும் நிலைக்கு ஆளாகியும் விட்டார். அப்பரினால் தமிழ் இசை வெள்ளம் தமிழ்ச்சமூகத்தில் பெருக்கெடுக்கத் தொடங்கியது எனலாம். இந்தத் தொடக்கமே பின்னாளில் அண்ணாமலைச் செட்டியாருக்கு தமிழிசையில் ஊக்கத்தையும் ஆக்கத்தையும் ஊட்டியிருக்கிறது என்பதும் நோக்கத்தக்கது.

கையிலே ஆயுதம் ஏந்தி சமயவழி நின்றவரும் அப்பர்தான். அவரின் கையில் உழவாரம் என்னும் ஆயுதம் இருந்தது. இது கொல்லும் ஆயுதம் அல்ல. அருள் தன்னைக் கொள்ளும் ஆயுதமாகவே அமைந்திருந்தது. தொண்டின் மகிமையினை உணர்த்தும் ஆயுதமாக இருந்தது. உழைப்பின் மகிமையினை உணர்த்தும் அடையாளமாகவும் இருந்தது எனலாம். அடியார்கள் வாழ்வில் அப்பரின் உழவாரம் அசையாத ஆன்மீகச் சொத்தாக அமைந்தது எனலாம். என்கடன் பணி செய்து கிடப்பதே என்பதை உணர்த்தி நின்றது என்றும் எடுத்துக் கொள்ளலாம்.

ஆலயம் தொழுவது சாலவும் நன்று என்பதை மிகவும் சிறப்பாக அப்பர் காட்டி , அங்கு சென்று என்னவெல்லாம் செய்ய வேண்டும் என்று யாவருக்கும் நல்ல பாடத்தைப் போதிக்கும் நல்லாசி ரியனாகவும் விளங்கி நிற்கிறார்.

**நிலைபெறுமாறு எண்ணுதியேல் நெஞ்சே நீவா**
**நித்தலும் எம்பிரானுடைய கோயில் புக்குப்**
**புலர்வதன்முன் அலகிட்டு மெழுக்கு மிட்டுப்**
**பூமாலை புனைந்து ஏத்திப் புகழ்ந்து பாடித்**
**தலையாரக் கும்பிட்டுக் கூத்தும் ஆடிச்**
**சங்கரா சயபோற்றி போற்றி யென்றும்**
**அலைபுனல்சேர் செஞ்சடையெம் ஆதீயென்றும்**
**ஆரூரா என்றென்றே அலறா நில்லே.**

நிலை பெறுவதற்கு அப்பர் காட்டும் இந்த வழி ஆன்மீகத்தில் மிகவும் முக்கிய வழியாகும் என்பதைக் கருத்திருத்தல் வேண்டும்.

திருவங்கமாலை என்னும் ஒரு புதிய சிந்தனையை அப்பர் எமக்கெல்லாம் தருகிறார். கோவில் வழிபாட்டின் எங்கள் உடலின் முக்கியத்துவத்தை இங்கே அட்டவணைப்படுத்தி கிளிப்பிள்ளைக்குப் பாடம் கற்பிப்பதுபோல் பக்குவமாய் அருமையான பாடல்களாய் தந்து அடியார்களில் முன்னிற் பவராய் அப்பர் ஆகி நிற்கிறார். மற்றைய அடியார்கள் காட்டாத புது முயற்சி இது எனலாம்.

**தலையே நீ வணங்காய்**
**கண்காள் காண்மின்களே**
**செவிகாள் கேண்மிங்களோ**
**மூக்கே நீ முரலாய்**
**வாயே வாழ்த்துகண்டாய்**
**நெஞ்சே நீ நினையாய்**
**கைகாள் கூப்பித்தொழீர்**
**ஆக்கை யாற்பயனென்**
**கால் களாற்பயனென்**
**உற்றார் ராருளரோ**

**உற்றார் ராருளரோ**
**உற்றார் ராருளரோ**
**உயிர் கொண்டு போம்பொழுது**
**குற்றாலத்துறை கூத்தனல்லால்**
**நமக்குற்றார் ஆருளரோ**

இவ்வாறு வழிபட வழிகாட்டுவது அப்பருக்குரித்தான புதுக்கருத்தாக பார்க்க வேண்டி இருக்கிறது.

இனிப்பிறவியே வேண்டாம் என்றுதான் அடியார்கள் பலரின் நிலையாக இருந் தது. ஆனால் அப்பர்மட்டும் தனக்கு மனிதப் பிறவி வேண்டும் என்று ஆண்டவனிடம் வேண்டும் வித்தியாசமான சிந்தனையுடைய அடியவராய் விளங்குகின்றார்.

**குனித்த புருவமும், கொவ்வைச் செவ்வாயில் குமிண் சிரிப்பும்,**
**பனித்த சடையும், பவளம் போல் மேனியில் பால் வெண் நீறும்,**
**இனித்தம் உடைய எடுத்த பொன்பாதமும் காணப் பெற்றால்**
**மனி(த்)தப் பிறவியும் வேண்டுவதே, இந்த மா நிலத்தே!**

ஆண்டவனின் அழகான தோற்றப்பொலிவினைக் காட்டி அதனைக் காண் பதற்காகவே இந்த மாநிலத்தில் மனிதப் பிறவி வேண்டும் என்னும் சிந்த னை புதுமையாய் மலர்கிறதல்லவா !

நமச்சிவாய வாழ்க என்று பிற்காலத்தில் மணிவாசகர் மொழிவதற்கும் அப்பர் வழிகாட்டி இருப்பாரோ என்றும் எண்ணக்கிடக்கிறது.

**சொற்றுணை வேதியன் சோதி வானவன்**
**பொற்றுணைத் திருந்தடி பொருந்தக் கைதொழக்**
**கற்றுணைப் பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும்**
**நற்றுணை யாவது நமச்சி வாயவே**
**இல்லக விளக்கது விருள்கெ டுப்பது**

**சொல்லக விளக்கது சோதி யுள்ளது**
**பல்லக விளக்கது பலரும் காண்பது**
**நல்லக விளக்கது நமச்சி வாயவே**

நமச்சிவாய என்று சொல்லும் பொழுது என்னதான் இடைஞ்சல்கள் வந் தாலும் அத்தனையும் வந்த இடந்தெரியாமல் மறைந்தே விடும் என்னும் நம்பிக்கையை அப்பர் அகமிருந்து காட்டி நிற்பதும் நல்ல சிந்தனையாக அமைகிறது அல்லவா !

அடியார்கள் பலர் தமக்கு அதுவேண்டும் இது வேண்டும் என்ற கேட்ட இட த்தில் எந்தப் பொருளுமே கேட்கா நின்றவர் அப்பர் பெருமான் மட்டுமே. அவர் கேட்டது மனிதப் பிறவி ஒன்றை மட்டுமே. அதுவும் அந்தப் பெருமா னைக் கண்களால் காண்பதற்காகவே. ஓடும் செம்பொன்னும் ஒக்க நோக்கு பவராய் அப்பர் இருந்தார். அடியார்கள் பலர் அனுபவிக்காத பல தண்டனை களுக்கு ஆளானவரும் அப்பரே. சமணர்களால் தூண்டப்பட்ட அரசனின் பல தண்டனைகளைக் கண்ட அடியவராகவும் அப்பரே இருக்கிறார். வாழ்க்கைத் தத்துவங்களை அதாவது நிலையாமை பற்றிய பல கருத்துக்களை எடுத்து மொழிந்த நிலையிலும் அப்பர் முன்னிற்கிறார் எனலாம். அதற்குக் காரணம் அவருக்கு கிடைத்த வாழ்வியல் அனுபவங்களே ஆகும். இன்று அல்ல ல்பட்டு ஆற்றா நிற்கும் பலருக்கும் உகந்த ஆறுதலை, தேறுதலை அளிக்கும் அர்த்தநிறை சிந்தனைகளை அப்பர் தன்னுடைய பாடல்களில் காட் டுகிறார் என்பதை மறுத்துரைத்திடல் இயலாது. அப்பர் என்றால் அனுபவம் என்றுதான் சொல்ல வேண்டும். பற்றற்ற அடியார். ஆனால் பரமனைப் பற்றி நின்ற அடியார். புரட்சியை விதைத்த அடியார். புதுமையைப் புகுத்திய அடியார். எல்லா உலகமும் ஆனாய் நீயே என்று விழித்துரைத்த அடியார். அப்பர் என்பவர் தமிழராய் விளங்கி தமிழையே அகமிருத்தி தமிழி னால் இறை புகழைப் பரப்பி தமிழ்ப் பக்தி இயக்கத்தில் தலைநிமிர்ந்து நிற்கிறார் என்பதை யாவரும் மனமிருத்துவது அவசியமாகும்.

**விண்ணுளார் தொழுதேத்தும் விளக்கினை**
**மண்ணுளார் வினை தீர்க்கும் மருந்தினைப்**
**பண்ணுளார் பயிலுந் திருக்கோளிலி**
**அண்ணலாரடி தொழுதுய்மினே**

**சலம்பூவொடு தூபம் மறந்தறியேன் தமிழோடிசை பாடல் மறந்தறியேன்**
**நலந்தீங்கிலும் உன்னை மறந்தறியேன் உன்னாமம் என்னாவில் மறந்தறியேன்**
**உலந்தார்தலையிற்பலிகொண்டுழல்வாய் உடலுள்ளுறு சூலை தவிர்த்தருளாய்**
**அலந்தேன்அடியேன்அதிகைக்கெடில வீரட்டானத்துறை அம்மானே.**


OKAYA
ELECTRIC VEHICLES
dsl
We lead the way...!
பெட்ரோல் பைக்குகளை பயன்படுத்துவதை
விட 77% இலாபமான பாவனைக்கு
The inEVitable
Future of Smart Mobility
FAAST-F4
140-160 KM ஒருமுறை*
சார்ஜ் செய்தால்
FAAST-F2T
80-85 KM ஒருமுறை*
சார்ஜ் செய்தால்
FREEDOM
70-75 KM ஒருமுறை*
சார்ஜ் செய்தால்
Rs.550,000/- இருந்து
வண்ணத்தெரிவுகள்:
conditions apply*
இந்தியாவில் அதி வேகமாக
விற்பனையாகும் மின்சார வாகனம்
2 வருட உத்தரவாதம்
3 இலவச சேவைகள்
Visit DSL EV Experience Center : # 525, Union Place Colombo 02
Hotline - 070 300 9555

# RADIANT DAWN

A Sunday Supplement in English to Kalaikkathir

Page I English for all Sunday the 14th May 2023



We welcome students' articles in word for publication

-Editor-

kalaikkathiredu@gmail.com


# Sweet Dreams



A good night's sleep is very important for your health. Your brain and your body use that time to do all kinds of things that they cannot do as well when you're awake. How much sleep do you need? Every person is a little different, but many experts say that children need about ten hours of sleep per night. So if you wake up at seven o'clock to go to school, you should be going to bed by nine o'clock at night.

Sometimes it's not easy to fall asleep quickly, though. You might have a lot of energy. Or you might be excited about something. Maybe you're worried about something. When that happens, it's hard to get sleepy. Here are some things you can do to make it easier for you to get the sleep you need:

- Keep your body in a routine by going to bed at the same time every night.
- Do something calming right before bedtime, such as taking a warm bath or reading.
- Limit sodas, iced tea, and other foods and drinks that contain caffeine.
- Turn off your TV when it is time to sleep. Better yet, don't have a TV in your room. Studies show that children who have a TV in their rooms sleep less.
- Don't watch scary TV shows or movies close to bedtime because these can sometimes make it hard to fall asleep.
- Exercise during the day—it will help you sleep better at night. But don't exercise just before going to bed.
- Don't do homework, read, play games, or talk on the phone in bed. Use your bed just for sleeping—you'll train your body to associate your bed with sleep.

If you follow these handy tips, you will get yourself relaxed before bedtime. Then, it will be easier for you to fall asleep and stay asleep.

**1. Which is true for the bulleted list in the text?**

A. The first item is the most important.
B. Each item on the list is important and supports the main idea.
C. The items should be done in order.
D. Bulleted lists make no sense.

**2. Which of these is a topic sentence stating a main idea?**

A. You might have a lot of energy.
B. A good night's sleep is very important for your health.
C. Try to go to bed at the same time every night.
D. Use your bed just for sleeping.

**3. What is a purpose for reading this text?**

A. to find ways to sleep better
B. to learn good study habits
C. to learn how to cook
D. to find a good place to buy a bed

**4. What is an accurate inference about caffeine?**

A. It can make you sleepy.
B. It can keep you awake.
C. It is good for your health.
D. It is hard to find.

**5. What would the author's advice be for readers?**

A. sleep less
B. stop getting exercise
C. buy a TV
D. get plenty of sleep

**6. Why might having a TV in your room keep you awake?**

A. You would forget to turn it on.
B. You would not like having a TV.
C. You would turn it off to sleep.
D. You would watch it instead of sleeping.

**7. Why do you think being excited about something might keep you awake?**

A. You will be afraid to fall out of bed.
B. You will fall asleep very quickly.
C. You will think about what is making you excited instead of getting sleepy.
D. You eat too much if you are excited.

**8. Which is the best summary of this text?**

A. People can get a good night's sleep by following some helpful tips.
B. Sleep is not important.
C. Children don't know how to go to sleep.
D. Many people have sleep issues.

---

When you go to sleep at night, you probably think that you are not doing much. Your body is in one place, your eyes are closed, and you don't talk to people. But your body is doing more than you think it is! Scientists have used special, sophisticated machines to study the way people sleep. They have found that your brain is actually very busy when you sleep.

There are several stages of sleep in a sleep cycle. You go through the sleep cycle multiple times each night. Your brain's activity level is a little different in each stage. The final stage of the cycle is called rapid eye movement (REM) sleep. During REM, your eyes are moving even though you are asleep. That is how this stage got its name. Most of your dreams occur during REM sleep.

**1. What is your brain doing while you are sleeping?**

A. It is not able to work.
B. It is only a little busy.
C. It is also asleep.
D. It is very busy.

**2. What is true about people during REM sleep?**

A. They dream.
B. They are awake.
C. They talk a lot.
D. They feel sick.

**3. How else could you say asleep?**

A. slept
B. sleep




C. sleeping
D. sleepwalk

**4. Which is a synonym for occur?**

A. run
B. sleep
C. happen
D. wake

**5. Which word describes the tone of this text?**

A. informative
B. cautionary
C. funny
D. serious

# 'Ponniyin Selvan: 2' movie review: Mani Ratnam dishes out a satisfying sequel



*'Ponniyin Selvan 2' takes creative liberties from Kalki's material, but the performances and cinematic touches keep you invested*

The events of Mani Ratnam's Ponniyin Selvan: 1, which released late last year, left audiences not just on a high, but also with many questions: What really happened to Arunmozhi Varman? Who is the mysterious lady who makes fleeting but impactful appearances? And most importantly, what happened to the succession battle for the Chola kingdom?

Ponniyin Selvan: 2 answers these queries — as it should. Mani Ratnam's sequel takes liberal creative liberties by leaving out some parts from the Tamil classic in order to present it cinematically — and the climax might be the subject of some discussion in this context, especially among fans of the book — but it largely encapsulates the myriad twists and turns as the story unravels.

Mani Ratnam interview: Doing pan-Indian films is not a trap, but a choice

We were given a sneak peek into the romance of Aditha Karikalan (Vikram) and Nandini (Aishwarya Rai) in the first part. Ponniyin Selvan: 2 opens with this angle; the first shot is that of a young Nandini taking a dip in a river. Remember this shot, because it makes a sort of a comeback later in the film. In thes pan of a few minutes, Ratnam packs in almost three short AR Rahman songs to narrate this story of young love, before he plunges into the actual story.

We get why, though. The Karikalan-Nandini angle is the root of most of the confusion in the Chola kingdom, a place that continues to see much turmoil. Arunmozhi Varman aka Ponniyin Selvan iswell and alive — but he suffers from an illness. Can he return and reclaim his position as the successor to the throne? Will Aditha Karikalan meet Nandini and what will transpire of that? And what about Vandhiyathevan (Karthi), through whom we were introduced to the main characters?



Maniam, the legendary artist, who brought alive Ponniyin Selvan through his stunning visuals

The zing of the first installment might be missing here, but there is certainly more depth to the characters. Despite having to chronicle several character arcs and showcase the twists and turns, Mani Ratnam's cinematic flourishes come to the fore. The director has always been an expert at showcasing two different character sequences packaged as one; remember how he juxtaposed Rajinikanth's fight sequences with Arvind Swamy's swearing-in ceremony in Thalapathi? He employs a similar technique during a death sequence; there is silence all around the body, while a slow-motion fight happens elsewhere, replete with Tamil poetic lines being recited in the background. There is poetry and poignance at once. Much like the sequence involving the three main actors — Vikram, Jayam Ravi and



Trisha — that was heartening to watch.

Ponniyin Selvan 2

Director: Mani Ratnam

Cast: Vikram, Aishwarya Rai Bachchan, Jayam Ravi, Karthi, Trisha, Prakash Raj

Duration: 164 minutes

Storyline: The endgame to the battle of succession for the Chola kingdom results in some unexpected twists and turns

Down memory lane: When Mani Ratnam and G Venkateswaran wanted to make 'Ponniyin Selvan' in 1989

However, some of the scenes do extend more than they ought to; there's a Vikram-Aishwarya Rai meet-up that becomes too dialogue-oriented, but do watch out for their sparking performances and cinematographer Ravi Varman's rich use of light and colour in this particular sequence. Aishwarya Rai Bachchan's hard work and effort to portray Nandini shows on the big screen, and she oozes confidence, but one wishes the makers gave this character more heft in the end. Somehow, she gets a lot of character-building (Vikram even describes her as 'the snake from Pazhavoor') but her different shades could have been conveyed more effectively. Thankfully, the Karthi-Trisha romance is more understated and subtle, with the likeable 'Aga Naga' playing in the background and ending with an apt top-angle shot.


If Karthi was the life of the first part — we had written back then that he "kindled a feeling of joie de vivre, thanks to his zesty acting style" — Vikram and Jayam Ravi get their act together here, with powerful performances. Vikram displays flashes of acting brilliance, especially during the sequence where he learns that a plot is brewing against him. Jayam Ravi comes across as more quiet and confident, especially in a sequence that involves Buddhist monks saving him from a tricky situation. Whoever said 'mass' moments needed lots of action?

Tamil literary pioneers recommend novels that would make for great movie adaptations

Aiding this galaxy of actors — including Prakash Raj, Sarath Kumar, Parthiban, Kishore, Vikram Prabhu and Rahman — is a rousing score from AR Rahman who seems to know when to dish out soft musical cues (the usage of 'Aga Naga') and go all out with powerful vocals and percussion (the usage of the PS anthem). He even explores a paasuram from Andal's Thirupaavai — the 'Aazhi Mazhai Kanna' track which, interestingly, refers to the sea, and is actually believed to have swallowed two key characters in the film. Editing this magnum opus would have quite a task, especially considering the number of established actors, but Sreekar Prasad's cuts ensure we get a glimpse of as much drama as possible.

Despite the war sequences in the end, it is the interpersonal dynamics and drama between its main characters that make the core of Ponniyin Selvan. Kalki has packed inside his literary work several twists that might be a little hard to understand for someone unfamiliar with the PS universe and the family tree, but Mani Ratnam's cinematic adaptation makes for a satisfactory watch.


Malaysia Tour
5 DAYS 4 NIGHTS
SOLD OUT
Next Tour
June 30
INCLUSION
» 04 Night stay in Kuala Lumpur
» Daily breakfast at hotel
» Return AirTicket
» Getting Highland tour with cable car
» City tour on arrival day
» Evening tour to twin tower
» Batu caves temple visit
» Putrajaya city tour
LKR 148,000.00
For Early Booking
Travel Date: 19 - 23 May 2023
Semba
Semba Services (Pvt) Ltd.
551A, Kasthuriyar Road ,Jaffna
+94 77 307 8799



கிளிநொச்சியில்

# ஐஸ்வர்யம் பெருவிருந்து மண்டபம்

# Ishwaryam Banquet Hall



Tel:- 021 228 3701, 071 7354308

Whatsapp:- 071 7736 4308

No.315, Kandy Road,
Kilinochchi




சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்

# ISHWARYAM BANQUET HALL

## BANQUET MEALS HALL




## FULL OPTION

### MAIN DIHES

Vegitable Fried Rice with Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable in Indian Style

### DESSERT

| | |
|---|---|
| ice Cream Cup | - 60/= |
| Fruit Salad | - 60/= |
| I ce Cream & Fruit Salad | - 100/= |
| Cream Caramel | - 120/= |

SPECIAL MENU PACKAGE

### BEVERAGES

| | |
|---|---|
| jUICE 200 ml | - 70/= |
| Milk Drink | - 70/= |
| Cocacola M | - 70/= |
| Pepsi M | - 70/= |
| Swchpees Tin | - 250/= |
| Coca Cola Tin | - 250/= |


இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 14.05.2023இல் வெளியிடப்பெற்றது.

பக்கங்கள்: 04

# காலைக்கதிர்

Kalaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 04 வள்ளுவர் ஆண்டு 2054 சித்திரை 30 சனிக்கிழமை 13.05.2023 கதிர் 57

## தேசிய அரசு குறித்து ரணில் பேசவில்லை!



மனோ தெரிவிப்பு

தேசிய அரசு பற்றி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பேசவில்லை. முழு நாடாளுமன்றமும் அரசுக்காக வேலை செய்ய வேண்டும் என்றுதான் கூறினார். இவ்வாறு தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவரான நாடாளுமன்ற உறுப்பினர்

2

# கொழும்பில் பாதுகாப்பு அதிகரிப்பு

## சில குழுக்கள் கலகத்தில் ஈடுபடத் திட்டமிட்டதால் நடவடிக்கை

கொழும்பில் பல இடங்களிலும் வெள்ளிக்கிழமை இரவு முதல் பொலிஸார் பாதுகாப்பை பலப்படுத்தியுள்ளனர். சில குழுக்கள் திட்டமிட்டு போராட்டம் மற்றும் கலகத்தில் ஈடுபட முயற்சித்ததை அடுத்து பாதுகாப்பை பலப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

கொழும்புப் பல்கலைக்கழகத்துடன் தொடர்புடைய சில குழுக்களே இந்தப் போராட்டம் மற்றும் கலத்தில் ஈடுபட்டு இந்த ஆட்சியின் மீது செல்வாக்குச் செலுத்தத் தயாராக இருந்தன என்றும் அவர்கள் கூறுகின்றனர். இதையடுத்துக் கொழும்பு பல்கலைக்கழகத்தை சுற்றிப் பாதுகாப்பை பலப்படுத்த எடுக்கப்பட்ட நடவடிக்கைகளைத்தொடர்ந்துகுழப்பங்களை ஏற்படுத்தத் திட்டமிட்டவர்களின் முயற்சிள் தோற்கடிக்கப்பட்டிருக்கின்றன என்றும் அவர்கள் கூறுகின்றனர்.

சுமார் 750 பேர்கொண்ட குழுவொன்றே போராட்டம் மற்றும் குழப்பத்தில் ஈடுபடத் தீர்மானித்திருந்ததாகப் புலனாய்வுத் தகவல்கள் கிடைத்ததாகவும் அதிகாரிகள் கூறுகின்றனர்.

இதையடுத்து கொழும்பு பல்கலைக் கழகத்தைசூழவுள்ளபகுதிகளுக்குபொலிஸ், பொலிஸ் விசேட அதிரடிப்படை, பொலிஸ் கலகத்தடுப்புபிரிவுமற்றும்முப்படையினரும் வரவழைக்கப்பட்டுள்ளனர். பொலிஸ் மற்றும் முப்படையினருக்கு மேலதிகமாக, தீயணைப்புவாகனங்களைவரவழைக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

கொழும்பு சுதந்திர சதுக்கத்தை சூழ, கொள்ளுப்பிட்டி சந்தியை சுற்றி பகுதி மற்றும் அராலியகஹா மன்றம் போன்ற மக்கள் போராட்டங்கள் அடிக்கடி நடக்கும் பகுதிகளிலும் பாதுகாப்பை பலப்படுத்த பாதுகாப்பு தரப்பினர் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

## தமிழர்களை ஏமாற்றுவதிலேதான் ஜனாதிபதி குறியாக இருக்கிறார்

### சிறீதரன் எம்.பி. காட்டம்

(கண்டாவளை)

தமிழ் மக்களை ஏமாற்றுவதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க குறியாக இருக்கின்றாரே தவிர ஒரு தமிழர்களுக்கு ஒரு தீர்வை வழங்க அவர் தயாராக இல்லை என்று நாடாளுமன்றஉறுப்பினர்சிவஞானம் சிறி தரன் தெரிவித்தார் கிளிநொச்சியில் அமைந்துள்ள அவரது அலுவலகமான அறிவகத்தில் இன்று பிற்பகல் 1.30 மணிக்கு செய்தியாளர்களைச் சந்தித்து அவர் இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்தாவது:

அண்மையில் ஜனாதிபதியுடன் நடைபெற்ற சந்திப்பின்போது தொல்லியல் திணைக்களத்தினால் அடையாளப்படுத்தப்பட்டு ஆக் குகிரமிக்கப்படுகின்ற காணிகள் தொடர்பில் எடுத்துக் கூறியிருந்தோம் அந்த இடத்தில் தொல்லியல் திணைக்களப் பணிப்பாளரும் இருந்தார். அவரிடம் ஜனாதிபதி அத்தகைய நடவடிக் கைகளை நிறுத்துமாறு உத்தரவிட்டிருந்தார். அதன் பின்னர்தான் உருத்திரபுரம் சிவாலயத்தின் காணியை மே 18 அளவீடு செய்யப்போவதாக தொல்லியல் திணைக்களம் ஆலய நிர்வாகத்திற்குக் கடிதம் அனுப்பி இருக்கின்றது.

இவ்வாறு ஒரு புறத்தில் தமிழர்களுடன் பேச்சு நடத்திக்கொண்டு மறுபுறத்தில் காணி அளவீடுகளைச் செய்ய முனைவது என்பது மக்களை ஏமாற்றுகின்ற ஒரு செயல். மே 9 நான் நாடாளுமன்றத்தில் ஆற்றிய உரையில் வடக்குக் கிழக்கிலே தமிழர்களுடைய வழிபாட்டிடங்கள் இடித்தளிக்கப்பட்டுப் புத்தர் சிலைகள் நிறுவப்படுவது பற்றியும் விகாரைகள் அமைக்கப்படுவது பற்றியும் தெரிவித்திருந்தேன். இவ்வாறு தொல்லியல் திணைக்களத்தால் ஆக்கிரமிக்கப்படும் இடங்களை இடங்களையும் அடையாளப்படுத்தி ஓர் அறிக்கையையும் சமர்ப்பித்திருந்தேன்.

இப்போது உருத்ரபுரம் சிவாலயத்தை மே 18 அளவீடு செய்வது தொடர்பில் ஜனாதிபதிக்கு அவசர கடிதம் ஒன்றை அனுப்பி இருக்கின்றேன் அதன் பிரதிகளை மாவட்டச் செயலர் மற்றும் வடமாகான ஆளுநர் பிரதேச செயலாளர் ஆகியோருக்கும் அனுப்பி இருக்கின்றேன் என்றார்.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக இருந்து கொண்டு நடத்த வேண்டிய தேர்தலை நடத்த விடாது அதனை தடுத்து வருகின்றார், எதை நிறுத்த வேண்டுமோ அதை நிறுத்து-வதற்கு அவர் தயாராக இல்லை என்றும் சாடினார். (315)

## முள்ளிவாய்க்காலில் இன்று நினைவுக் கஞ்சி வழங்கல்

(சண்முகம் தவசீலன்)



முள்ளிவாய்க்கால் நினைவு முற்றத்தைத் துப்புரவு செய்து தயார்ப்படுத்தும் தொண்டும் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கலும் இன்று இடம்பெற்றன. வடக்கு கிழக்கு முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் பொதுக்கட்டமைப்பின் ஏற்பாட்டில் இந்தப் பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

இலங்கை அரசினால் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்ட தமிழ் இன அழிப்பு நினைவேந்தலை மே 18 பெருமெடுப்பில் மேற்கொள்வதற்குத் தாய்த் தமிழ்ப் பரப்பு தயாராகி வருகின்றது. அதையொட்டி நேற்று முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரம் தொடங்கியது. வடக்கு கிழக்கின் பல்வேறு பகுதிகளிலும் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கப்பட்டு வருகின்றது.

அதன் ஒரு பகுதியாக இன்று முள்ளிவாய்க்கால் நினைவு முற்றம் துப்புரவு செய்யப்பட்டது. வளாகத்தை நினைவேந்தலுக்கு ஏற்றதாகத் தயார் செய்யும் பணிகள் தொடங்கப்பட்டன. அத்தோடு முள்ளிவாய்க்காலில் நினைவுக் கஞ்சியும் காய்ச்சிப் பரிமாறப்பட்டது.

2009 இதே நாட்களில் மூன்று லட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் இந்த முள்ளிவாய்க்கால் என்கிற சிறு கரையோர நிலப்பரப்புக்குள் சிக்கிக்கொண்டிருந்தனர். சண்டைத் தவிர்ப்பு வலயம் என்று அறிவிக்கப்பட்டிருந்த இந்தப் பகுதிக்குள் அனைத்து மக்களும் திரண்டு வந்து பாதுகாப்புத் தேடிக்கொண்டிருந்த

2

## மே18 நினைவு ஊர்திக்கு வவுனியா மக்கள் அஞ்சலி

முள்ளிவாய்க்கால் மனிதப் பேரவலத்தையும், தமிழ் இனப் படுகொலையையும் நினைவூட் டும் வகையிலான முல்லைத் தீவில் இருந்து நேற்றுப் புறப் பட்ட ஊர்தி இன்று வவுனியாவில் பயணத்தைத் தொடர்ந்தது. மக் கள் பெருமெடுப்பில் அஞ்சலி செலுத்தினர்.




முல்லைத்தீவுக் கரையோரமிருந்து நேற்றுக் காலை தொடங்கியது இந்த ஊர்திப் பவனி. நேற்றிரவே வவுனியாவை வந்தடைந்தது. இன்று காலை வவுனியா பழைய பேருந்து நிலையத்தில் இருந்து தனது பயணத்தை மீண்டும் தொடங்கியது. பேருந்து நிலையத்தில் மக்கள் அஞ்சலி செலுத்தினர். அதன் பின்னர் ஊர்தி நகரை வலம் வந்ததுடன் மன்னார் நோக்கிப் பயணமானது.

2009 ஆம் ஆண்டு முள்ளிவாய்க்காலில் தமிழினம் கொத்துக் கொத்தாகக் கொன்றழிக்கப்பட்டதை அடையாளப்படுத்தி முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை நினைவேந்தல் வாரம் ஒவ்வொரு ஆண்டும் மே மாதம் 12 ஆம் திகதி முதல் 18 ஆம் திகதி வரை அனுஷ்டிக்கப்பட்டு வருவதோடு 18 ஆம் திகதி முள்ளிவாய்க்கால் முற்றத்திலே மாபெரும் நினைவேந்தல் நிகழ்வுகளும் இடம்பெறுவது வழக்கம்.

தமிழ் இனப் படு கொலையின் நினைவாக இந்த ஆண்டு

2

## வேப்பங்குள விபத்தில் இளைஞர் உயிரிழப்பு



வவுனியா- மன்னார் வீதியில் நேற்றிரவு இடம்பெற்ற மோட்டர் சைக்கிள் விபத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழந்தார்.

வேப்பங்குளம் பகுதியில் இடம்பெற்ற இந்த விபத்தில் மோட்டார் சைக்கிளை ஓட்டி வந்த இளைஞரின் உயிர் சம்பவ இடத்திலேயே பிரிந்தது.

மகாறம்பைக்குளம் பகுதியைச் சேர்ந்த தனுஜன் (வயது 20) என்ற இளைஞரே உயிரிழந்தார்.

வவுனியா, நெளுக்குளம் பகுதியில் இருந்து

2

## வவுனியாவில் இன்று அதிகாலை பயங்கரம்

# இளம் தாய் சுட்டுக்கொலை சந்தேகநபரும் தற்கொலை

### ஒரு தலைக் காதல் விவகாரம் காரணம் எனச் சந்தேகம்

வவுனியா, நீலியாமோட்டைப் பகுதியில் இளம் குடும்ப பெண் ஒருவர் இன்று அதிகாலை சுட்டுக்கொல்லப்பட்டார். உள்ளூர் தயாரிப்பான இடியன் துப்பாக்கியால் தலையில் சுடப்பட்ட இவர் மூளை சிதறி உயிரிழந்தார்.

அதேயிடத்தைச் சேர்ந்த ஒன்றரை வயதுக் குழந்தையின் தாயாரான நியூட்டன் தர்சினி (வயது 26) என்பவரே கொல்லப்பட்டார்.

இவரைச்சுட்டுக்கொன்றார்என்றுகருதப்படும் சந்தேகநபரான சிவபாலன் சுஜாந்தன் (வயது 24) அந்தப் பகுதியில் உள்ள ஆலயம் ஒன்றின் முன்பாக துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் இறந்துகிடந்தார். அவரது கையில் இடியன் துப்பாக்கி இருந்தது. அவர் தன்னைத் தானே சுட்டுத் தற்கொலை செய்துகொண்டிருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

நள்ளிரவுக்கும் இன்று அதிகாலை ஒரு மணிக்கும் இடையில் இந்தப்

2





# நாட்டின் ஆட்சி மாறினாலும் பொருளாதார கொள்கைகள் மாற்றமடையக் கூடாதாம்

## நாமல் கூறுகின்றார்



ஆட்சி மாறினாலும்,பொருளாதார கொள்கைகள் மாற்றமடைய கூடாது. தேசிய கொள்கை வகுப்பு ஆணைக்குழுவை அரசமைப்பின் ஊடாக ஸ்தாபிக்க விசேட கவனம் செலுத்த வேண்டும்.

சமர்ப்பிக்கப்படும் அறிக்கைகள் நாடாளுமன்றத்துக்கு மாத்திரம் வரையறுக்கப்பட்டால் எதிர்வரும் காலங்களிலும் குழு அமைப்பது, அறிக்கை சமர்பிப்பது மாத்திரம் மிகுதியாகும் என குறுகிய,நடுத்தர மற்றும் நீண்ட கால கொள்கை வகுப்பு உப குழுவின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ச தெரிவித்தார்.

தேசிய பேரவையின் குறுகிய,நடுத்தர மற்றும் நீண்ட கால தேசிய கொள்கைகளை வகுப்பதில் முன்னுரிமைகளை அடையாளம் காணல் பற்றிய உப குழுவின் முதலாவது இடைக்கால அறிக்கையை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்து உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றியவை வருமாறு –

பொருளாதாரப் பாதிப்புக்கு மத்தியில் பொருளாதார மீட்சிக்கான குறுகிய ,நடுத்தர மற்றும் நீண்டகால கொள்கைகளை வகுப்பது தொடர்பில் நாடாளுமன்றத்தில் விசேட உப குழு அமைக்கப்பட்டது.

கொள்கை உருவாக்கத்துக்காக அமைச்சுக்கள், திணைக்களங்கள், நிறுவனங்கள் உட்பட பல்வேறு தரப்பினருடன் பேச்சுகளை மேற்கொண்டோம்.

முன்வைக்கப்படும் கொள்கைத் திட்டங்களை முறையாக செயற்படுத்தாவிட்டால் அது நாடாளுமன்றத்துக்கு மாத்திரம் வரையறுக்கப்பட்டதாக காணப்படும்.சமர்ப்பிக்கப்படும் அறிக்கைகளை அரசமைப்பு ஊடாக உறுதிப்படுத்தப்பட்ட தாபனம் ஊடாக செயற்படுத்தாவிட்டால் 10 ஆவது நாடாளுமன்றத்திலும் பிறிதொரு உப குழுவை அமைத்து ஆராய வேண்டும்.

தேசிய கொள்கை தொடர்பான ஆணைக்குழுவை ஸ்தாபிக்க அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.இந்த விடயத்தில் எதிர்க்கட்சிகள் உட்பட நாடாளுமன்றத்தின் அங்கம் வகிக்கும் சகல அரசியல் கட்சிகளும் தங்களின் நிலைப்பாட்டை முன்வைக்க வேண்டும். நிலையான சிறந்த மாற்றத்துக்கு அனைவரும் ஒன்றுபட வேண்டும்.

அரசாங்கங்கள் மாற்றமடையும்போது பொருளாதாரக் கொள்கைகள் மாற்றமடைந்தால் ஒருபோதும் முன்னேற்றமடைய முடியாது. ஆட்சி மாறினாலும் பொருளாதார கொள்கை மாற்றமடையக் கூடாது என்ற வகையில் அரசமைப்பு ஊடாக உறுப்பாட்டை ஸ்தாபிக்க வேண்டும். – என்றார்.

# நலன்புரிக் கொடுப்பனவுகள் திட்டம்; பெருந்தோட்ட மக்களுக்கு சந்தேகம்

## இராதாகிருஸ்ணன் வருத்தம்



17 ஆயிரத்துக்கும் குறைவான மாத வருமானம் பெறும் குடும்பங்களுக்கு அஷ்வசும் நலன்புரி கொடுப்பனவு வழங்கப்பட வேண்டும் என்ற நியதி காணப்படும் போது மலையக மக்களுக்கு இந்த கொடுப்பனவு கிடைக்குமா என்ற சந்தேகம் காணப்படுகிறது.

பொருளாதார ரீதியில் பெருந்தோட்ட மக்கள் பல்வேறு வழிமுறையில் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.ஆகவே இந்த விடயத்தில் பெருந்தோட்ட மக்கள் தொடர்பில் நிதியமைச்சு விசேட கவனம் செலுத்த வேண்டும் என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் வேலுச்சாமி இராதாகிருஸ்ணன் சபையில் வலியுறுத்தினார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற அஷ்வசும் நலன்புரி கொடுப்பனவு திட்டம் மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றியவை வருமாறு –

ஏழ்மைநிலையில் உள்ள மக்களுக்கான சிறந்த நலன்புரி கொடுப்பனவுத் திட்டமாக அஷ்வசும் புதிய செயற்திட்டம் காணப்படுகிறது. பல லட்சம் பேருக்கு இந்தத் திட்டத்தின் ஊடாக நலன்புரி கொடுப்பனவுகள் வழங்கப்படுகின்றன.2016 ஆம் ஆண்டு காலப்பகுதியில் 6 ஆயிரம் ரூபா குறைந்த வருமானம் பெறும் தரப்பினருக்கு மாத்திரமே அரச நலன்புரி கொடுப்பனவு வழங்கப்பட்டன. இந்த தொகை தற்போது 17,772 ரூபாவாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

பொருளாதாரப் பாதிப்புக்கு மத்தியில் 46 சதவீத அத்தியாவசிய பொருள்களின் விலை பன்மடங்கு அதிகரிக்கப்பட்டுள்ளன. மாத வருமானம் மற்றும் அத்தியாவசிய பொருள்களின் விலை ஆகியவற்றை மதிப்பிட்டு ஒரு குடும்பத்தின் நிலையை மதிப்பிட முடியும்.

மாதம் 17 ஆயிரத்துக்கும் குறைவான வருமானம் பெறும் தரப்பினருக்கு அல்லது குடும்பத்துக்கு இந்த நிவாரணம் வழங்க வேண்டும் என்ற வரையறை காணப்படுவதால் பெருந்தோட்ட மக்களுக்கு இந்த நலன்புரிக் கொடுப்பனவு கிடைக்குமா என்ற சந்தேகம் காணப்படுகிறது.

ஏற்கனவே வழங்கப்பட்ட சமுர்த்தி கொடுப்பனவிலும் மலையக மக்களில் பெரும்பாலானோர் புறக்கணிக்கப்பட்டுள்ளார்கள். குடும்ப அடிப்படையில் மலையக மக்களுக்கு இந்த நிவாரணம் கிடைக்குமா என்பதை நிதியமைச்சு தெளிவுபடுத்த வேண்டும்.

விவசாயத்துறை வீழ்ச்சி,அத்தியாவசியப் பொருள்களின் விலையேற்றம் ஆகிய காரணிகளால் ஒட்டுமொத்த மக்களும் பாதிக்கப்பட்டுள்ளார்கள். இந்த நலன்புரித் திட்டத்துக்கு உலக வங்கி உதவி வழங்குகிறது. ஆகவே இந்த நிதி தொகை நியாயமான முறையில் மக்களுக்கு கிடைக்க வேண்டும் என்பதை வலியுறுத்துகிறோம்.

நுவரெலியா வைத்தியசாலையில் அண்மையில் 34 பேருக்கு கண் சத்திர சிகிச்சை இடம்பெற்றுள்ளது.இவர்களில் 10 பேருக்கு கண் பார்வையில் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது. இந்த விடயம் தொடர்பில் சுகாதார அமைச்சு விசேட கவனம் செலுத்த வேண்டும். – என்றார்.

# யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்கு ஆடுகளை ஏற்றிச் சென்றவர் கைது





வவுனியாவில் விதிமுறைகளை மீறி 54 ஆடுகளை கூலர் ரக வாகனத்தில் ஏற்றிச்சென்ற சந்தேக நபரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

யாழ்ப்பாணத்திலிருந்து கல்கிசைக்கு விதிமுறைகளை மீறி ஆடுகள் ஏற்றிச்செல்வதாக வவுனியா பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஜே.ஏ.ஏ.எஸ்.ஜெயக்கொடிக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் இந்த சோதனை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

பதில் பிரதான பொலிஸ் பரிசோதகர் ஜெயதிலக தலைமையிலான குழுவினர் தாண்டிக்குளம் பகுதியில் குறித்த வாகனத்தை மறித்து சோதனைக்குட்படுத்தினர்.

இதன்போது விதிமுறைகளை மீறி 54 ஆடுகள் குறித்த கூலர் ரக வாகனத்தில் இருந்தமை உறுதி செய்யப்பட்டது.

பின்னர் குறித்த வாகனத்துடன் வவுனியா பொலிஸ் நிலையத்திற்கு கொண்டு சென்றதுடன், வாகனத்தின் சாரதியான 42 வயதுடைய நபரை பொலிஸார் கைது செய்யப்பட்டு தடுப்பு காவலில் வைக்கப்பட்டுள்ளார்.

மேலதிக விசாரணைகளின் பின் வவுனியா மாவட்ட நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்துவதற்குரிய நடவடிக்கையினை வவுனியா பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

# இரண்டு குழுக்களுக்கு இடையில் மோதல் நபரின் கால்களை துண்டாக்கிய கும்பல்!

## கொழும்பில் சம்பவம்

கொழும்பின் புறநகர் பகுதியில் இரு குழுக்களுக்கு இடையில் ஏற்பட்ட மோதல் காரணமாக நபர் ஒருவர் மீது கூரிய ஆயுதங்களால் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ஹங்வெல்ல, கஹாஹேன பிரதேசத்தில் ஏற்பட்ட வாக்குவாதத்தின் பின்னர் இரண்டு பிள்ளைகளின் தந்தையொருவரே இவ்வாறு தாக்கப்பட்டுள்ளார்.

இந்த தாக்குதலில் 25 வயதுடைய இளைஞனின் கைகள் மற்றும் கால்கள் உடலில் இருந்து பிரிந்துள்ளன.

காயமடைந்தவர் ஹன்வெல்ல, கஹாஹேன, அஜித் பெரேரா மாவத்தையில் வசிக்கும் 25 வயதுடைய இரண்டு பிள்ளைகளின் தந்தை என பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

குறித்த நபர் வெள்ளிக்கிழமை மாலை வீட்டுக்கு முன்பாக உள்ள வீதியில் சென்று கொண்டிருந்த போது கூரிய ஆயுதத்துடன் வந்த நபர் ஒருவர் தாக்குதல் மேற்கொண்டுள்ளார். அத்துடன் தப்பியோட முற்பட்ட வேளையில் கால்களில் தாக்கியுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதன் காரணமாக, அவரது வலது கால் உடலில் இருந்து பிரிந்ததுடன், கைகளும் பிரிந்து தொங்கியுள்ளன.

காயமடைந்த நபரின் வீட்டுக்கு அடுத்த வீதியில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. தாக்குதல் ஆரம்பமானதை அடுத்து பாதிக்கப்பட்டவரின் மனைவிக்கு தெரியவந்ததாகவும், உடனடியாக அவரை சிகிச்சைக்காக ஹோமாகம ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

அதனுடன் உடலில் இருந்து பிரிந்திருந்த காலின் பகுதியும் வைத்தியசாலைக்கு கொண்டு வரப்பட்டதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

# அரச ஊழியர்களால் நாட்டுக்கும் மக்களுக்கும் உண்மையான நன்மைகள் ஏதும் கிடைக்குமா?

## ரவி கருணாநாயக்க கேள்வி



நாட்டில் 17 லட்சம் அரச ஊழியர்கள் உள்ளனர் எனவும், வரி செலுத்துவோரின் மொத்த வருமானத்தில் 76வீதம் இந்த 17 லட்சம் பேரை பராமரிப்பதற்கே செலவிடப்படுவதாக முன்னாள் நிதி அமைச்சரான ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு –

17 லட்சம் அரச ஊழியர்களை பராமரிப்பதற்காக வருடாந்தம் செலவிடப்படும் 1.4 லட்சம் கோடி ரூபாவுடன் ஒப்பிடுகையில், அவர்களால் நாட்டுக்கும் மக்களுக்கும் உண்மையான நன்மை கிடைக்குமா என்பதை நாம் சிந்திக்க வேண்டும்.

ஒரு வருடத்தில் 104 ரில்லியன் ரூபா செலவாகும் என்றும், இலங்கை மின்சார சபை, பெற்றோலியக் கூட்டுத்தாபனம், இலங்கை விமானம் மற்றும் வலையமைப்புக் கொள்வனவுச் சபை என்பன கடந்த நான்கு வருடங்களில் 1350 பில்லியன் ரூபா நட்டத்தைச் சந்தித்துள்ளன எனவும் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

இந்த பணத்தை சேமித்திருந்தால் 12 லட்சம் வீடுகள் நிர்மாணிக்கப்பட்டிருக்கும் எனவும், நாட்டில் உள்ள ஒவ்வொருவரும் 178,000 ரூபாவை சேமித்திருப்பார்கள் என வும் முன்னாள் நிதியமைச்சர் தெரிவித்துள்ளார்.

## இளம்தாய்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

படுகொலைகள் இடம்பெற்றுள்ளன என்று தயடவியல் பொலிஸார் தெரிவித்தனர்.

ஒருதலைக் காதல் விவகாரமே இந்தக் கொலைகளின் பின்னணியாக இருக்கக் கூடும் என்று பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

நீலியாமோட்டையைச் சேர்ந்தவர் தர்சினி. அதே பகுதியைச் சேந்தவர் சுஜாந்தன். தர்சினியை அவர் ஒரு தலைப்பட்சமாகக் காதலித்து வந்தார் என்று கூறப்படுகின்றது. அவரது காதலை ஏற்றுக்கொள்ளாத தர்சினி, ஒன்றரை வருடத்திற்கு முன்னர் வேறு ஒருவரை திருமணம் செய்தார். திருமணமானது முதல் யாழ்ப்பாணத்தில் வசித்து வந்துள்ளார்.

ஒரு மாதத்திற்கு முன்னர் தனது சொந்த ஊருக்குக் குடும்பத்துடன் திரும்பினார் தர்சினி. தனது தாயின் வீட்டில் வசித்து வந்துள்ளார். 3 தினங்களுக்கு முன்னரே தனியாக ஒரு வீடு பார்த்துக்கொண்டு கணவன், குழந்தை மற்றும் வயதான பெண் ஒருவருடன் தனிக் குடித்தனம் சென்றுள்ளார்.

தர்சினி தனி வீட்டுக்கு குடிபெயர்ந்த மறுநாளே சந்தேகநபரான சுஜாந்தன் அந்த வீட்டுக்குச் சென்று முரண்பட்டார் என்று சாட்சிகள் தெரிவிப்பதாகப் பொலிஸார் கூறினர். நேற்றிரவு தர்சினியின் கணவன் குளத்தில் மீன் பிடிக்கச் சென்றிருந்தார். அப்போது தர்சினி வீட்டில் பிள்ளையுடன் உறங்கிக் கொண்டிருந்தார். அதிகாலை ஒரு மணியளவில் கணவன் வீட்டிற்கு வந்த போது மனைவியும், மனைவிக்கு அருகில் பிள்ளையும் குருதி வெள்ளத்தில் மிதப்பதைக் கண்டுப் பதறிப்போய் 119 பொலிசாருக்கு தகவல் வழங்கினார். சம்பவ இடத்திற்கு விரைந்த பறையனாலங்குளம் பொலிசார், குறித்த சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டனர். சுஜாந்தன் தொடர்பில் தகவல் அறிந்து சந்தேகத்தின் பேரில் அவரைத் தேடினர். இந்நிலையில் இன்று காலை அப்பகுதியில் உள்ள ஆலயம் ஒன்றின் முன்னால் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் துப்பாக்கியைக் கையில் பிடித்தபடி இளைஞன் ஒருவன் உயிரிழந்து கிடக்கின்றான் என்று பொலிஸாருக்குத் தகவல் கிடைத்தது. அங்கு சென்று பார்த்த பொலிஸார் உயிரிழந்தவர் சுஜாந்தன் என்பதை உறுதிப்படுத்திக் கொண்டனர். அவர் தற்கொலை செய்து கொண்டிருக்க லாம் என்றே பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

## வேப்பங்குள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வவுனியா நகரை நோக்கி வேகமாகச் சென்றுகொண்டிருந்த மோட்டார் சைக்கிள் வேப்பங்குளம் பகுதியில் பயணித்தபோது குறுக்கே ஓடிய நாய் ஒன்றுடன் மோதி விபத்துக்குள்ளானது. அருகில் இருந்த பாலத்துடன் மோதியதில் இளைஞர் படுகாயமடைந்து, அதிகளவு குருதிப் பெருக்கால் அந்த இடத்திலேயே உயிரிழந்தார். விபத்து தொடர்பான விசாரணைகளை நெளுக்குளம் பொலிசார் மேற்கொண்டு வருகின்றனர். (100)

## மே 18...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பல பகுதிகளிலும் 'முள்ளிவாய்க்கால் கஞ்சி' வழங்கும் நிகழ்வுகள் பல தரப்பினராலும் ஒழுங்கமைக்கப்பட்டுச் செயற்படுத்தப்படுகின்றன. வடக்கு, கிழக்கு மாவட்டங்கள் பலவற்றிலும் இந்தக் கஞ்சி வழங்கல் நிகழ்வு இடம்பெற்று வருகின்றது. இதன் மற்றொரு அங்கமாக முல்லைத் தீவில் இருந்து குறித்த முள்ளிவாய்க்கால் நினைவு ஊர்திப் பவனி தொடங்கப்பட்டிருந்தது.

மன்னார், கிளிநொச்சி, யாழ்ப்பாணம் பகுதிகளுக்கும் செல்லும் இந்த ஊர்தி மீண்டும் கிளிநொச்சி மாவட்டம் ஊடாக முள்ளிவாய்க்கால் முற்றத்தை மே 18 வந்தடையும் என்று இதன் ஏற்பாட்டாளாகிய தாயக நினைவேந்தல் அமைப்பினர் தெரிவித்தனர்.




## முள்ளிவாய்க்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போதும் அவர்கள் மீது கொத்துக் குண்டுகளும், பல்குழல் எறிகணைகளும், நீண்ட துர எறிகணைகளும் வீசப்பட்டன. அதனால் பலர் கொத்துக் கொத்தாகச் செத்து மடிந்தனர்.

இந்தப் படுகொலைகளை நினைவேந்தும் வகையில் மே 18 பெரும் நினைவேந்தல் தினம் கடைப்பிடிக்கப்படுகின்றது. மே 12 முதல் 18 வரை நினைவேந்தல் வாரம் கடைப்பிடிக்கப்படுகின்றது.

## தேசிய அரசு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மனோ கணேசன் தெரிவித்தார். 'தேசிய அரசு தொடர்பில் உங்களது நிலைப்பாடு என்ன?' என்ற கேள்விக்குப் பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அரசுடன் இணைய விரும்புபவர்கள் அவர்களது கட்சியுடன் வந்து சேர முடியும் என்று ஜனாதிபதி கூறினார். அப்படி முடியாதுவிட்டால் தனியே வர முடியும் என்று அறிவித்தார்.

அப்படியும் முடியாதுவிட்டால் எதிர்க்கட்சியில் இருந்துகொண்டே அரசுக்கு வேலை செய்யலாம் என்றார். அதற்கான குழுக்களை நிறுவி பொறுப்புக்களைப் பகிர்ந்து கொடுப்போம் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார். – என்றார்.

'உங்களது கட்சி அரசுடன் இணையுமா?' என்ற கேள்விக்கு மனோ, அப்படியான தீர்மானம் இல்லை என்று கூறினார். (02)

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# ஹிஜாஸ் ஹிஸ்புல்லாவுக்கு எதிரான குற்றச்சாட்டுக்களையும் நீக்குங்கள்

## சட்டத்தரணிகளுக்கான சட்டத்தரணிகள் அமைப்பு கோரிக்கை

சட்டத்தரணி ஹிஜாஸ் ஹிஸ்புல்லாவுக்கு எதிரான அனைத்துக்குற்றச்சாட்டுக்களையும் நீக்குவதுடன் அவருக்கு எதிரான அனைத்து அடக்குமுறைகளையும் முடிவுக்குக் கொண்டுவருமாறு 'சட்டத்தரணிகளுக்கான சட்டத்தரணிகள்' அமைப்பு சட்டமா அதிபரிடம் வலியுறுத்தியுள்ளது.

இது தொடர்பாக சட்டத்தரணிகளுக்கான சட்டத்தரணிகள் என்ற சர்வதேச அமைப்பு சட்டமா அதிபர் சஞ்சய் ராஜரத்னத்துக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் மேலும் கூறப்பட்டிருவை வருமாறு –

சட்டத்தரணியும் மனித உரிமைகள் செயற்பாட்டாளருமானஹிஜாஸ்ஹிஸ்புல்லாதொடர்பில் தற்போது இடம்பெற்றுவரும் வழக்கு விசாரணைகள் தொடர்பில் நாம் மிகுந்த கரிசனை கொண்டிருக்கின்றோம்.

சிறுபான்மையினரின் உரிமைகளை முன்னிறுத்தி இயங்கிவரும் சட்டத்தரணியான ஹிஜாஸ் ஹிஸ்புல்லா, மனித உரிமைமீறல்களால்பாதிக்கப்பட்ட பெருமளவான முஸ்லிம்களுக்கு அவசியமான சட்ட உதவியை வழங்கியிருக்கின்றார்.

ஹிஜாஸ் ஹிஸ்புல்லா கடந்த 2020 ஆம் ஆண்டு ஏப்ரல் 14 ஆம் திகதி குற்ற விசாரணைப்பிரிவினரால் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின்கீழ் கைதுசெய்யப்பட்டார்.

அவர் கைதுசெய்யப்பட்டமைக்கான காரணம் தொடர்பில் அவ்வேளையில் ஹிஜாஸ் ஹிஸ்புல்லாவுக்கோ அல்லது அவரது குடும்பத்தாருக்கோ கூறப்படவில்லை. இருப்பினும் உயிர்த்த ஞாயிறுதினப் பயங்கரவாதத் தாக்குதல் குண்டுதாரிகளுக்கு உதவினார் என்ற குற்றச்சாட்டின் அடிப்படையில் அவர் விசாரணைக்கு உட்படுத்தப்படுகிறார் என அவரது தடுப்புக் காவல் உத்தரவில் குறிப்பிடப்பட்டிருந்தது.

அதனையடுத்து பல்வேறு இழுபறிகளுக்கு மத்தியில் கடந்த 2022 ஆம் ஆண்டு பெப்ரவரி 7 ஆம் திகதி ஹிஜாஸ் ஹிஸ்புல்லாவுக்கு பிணை வழங்கப்பட்டு, 9 ஆம் திகதி விடுவிக்கப்பட்டார். இருப்பினும் ஹிஜாஸ் ஹிஸ்புல்லாவுக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் இன்னமும் நீக்கப்படவில்லை.

இவ்வாறானதொரு பின்னணியில் இற்றைவரை ஹிஜாஸ் ஹிஸ்புல்லாவுக்கு எதிரான குற்றச்சாட்டுக்களை நிரூபிக்கும் வகையிலான எந்தவொரு ஆதாரமும் வாதிகள் தரப்பினால் சமர்ப்பிக்கப்படவில்லை என்று அறியமுடிகின்றது. அவருக்கு எதிரான அடுத்த வழக்கு விசாரணை 12 ஆம் திகதி நடைபெற்றநிலையில், அவருக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் சட்டத்தரணி என்ற ரீதியில் அவரது செயற்பாடுகளுக்கு இடையூறு ஏற்படுத்தும் நோக்கில் முன்வைக்கப்பட்டவையா என்ற கரிசனையைத் தோற்றுவித்துள்ளன.

பயங்கரவாதத்தடைச்சட்டத்தின்கீழ் மிக நீண்டகாலமாகத் தடுத்துவைக்கப்பட்ட முதலாவது சட்டத்தரணி ஹிஜாஸ் ஹிஸ்புல்லா ஆவார். பயங்கரவாதத் தடைச்சட்டத்தைத் திருத்தியமைப்பதாக இலங்கை அரசாங்கம் பலமுறை உத்தரவாதமளித்திருக்கின்ற போதிலும், தற்போதுவரை அதனை நடைமுறைப்படுத்துவதற்குத் தவறியிருக்கின்றது.

இந்நிலையில் ஹிஜாஸ் ஹிஸ்புல்லாவுக்கு எதிரான அனைத்துக்குற்றச்சாட்டுக்களையும் நீக்குவதுடன் அவருக்கு எதிரான அனைத்து அடக்குமுறைகளையும் முடிவுக்குக் கொண்டுவருமாறு வலியுறுத்துகின்றோம்.

அதேபோன்று இலங்கையிலுள்ள அனைத்து சட்டத்தரணிகளும் தமது தொழிலை எவ்வித அச்சமுமின்றி முன்னெடுப்பதற்கான இடைவெளியை உறுதிப்படுத்துமாறு கேட்டுக்கொள்கின்றோம் என்று அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# சுயலாப அரசியலுக்காக எமது வலியை ஆளும் வர்க்கத்திடம் அடகுவைக்காதீர்

## தமிழ் அரசியல்வாதிகளிடம் காணாமலாக்கப்பட்டோர் உறவுகள் வேண்டுகோள்

உள்ளகப்பொறிமுறைகளில்நம்பிக்கை இழந்து, சர்வதேச நீதி ஒன்றே எமக்குத் தீர்வைப் பெற்றுத்தரும் என்ற தெளிவான முடிவுடன் போராடும் எமது வலியை மீண்டும் உங்களின் சுயலாப அரசியலுக்காக இலங்கை அரசிடம் அடகுவைக்காதீர்கள்.

உங்கள் நலனுக்காக சிங்கள அரசிடம் எமது கண்ணீருக்கு விலை பேசாதீர்கள் என்று அரசியல் தீர்வு குறித்து ஜனாதிபதியுடன் பேச்சில் ஈடுபடும் தமிழ் அரசியல்வாதிகளிடம் வடக்கு, கிழக்கு வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் உறவினர்கள் வேண்டுகோள்விடுத்துள்ளனர்.

நல்லிணக்கம் மற்றும் அதிகாரப்பகிர்வு உள்ளடங்கலாக இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு தொடர்பாக ஜனாதிபதிக்கும் வடக்கு, கிழக்கு தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் இடையிலான தொடர்பேச்சுகள் நடைபெற்றுவரும் நிலையில், இது தொடர்பாக வடக்கு, கிழக்கு வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் உறவுகளின் சங்கத்தால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பவை வருமாறு –

2009 ஆம் ஆண்டில் யுத்தம் மௌனிக்கப்பட்டதைத் தொடர்ந்து சரணடைந்த, கையளிக்கப்பட்ட மற்றும் அழைத்துச்செல்லப்பட்ட உறவுகளும், வெள்ளை வான்கள் மற்றும் ஆயுத முனைகளில் கடத்தப்பட்ட உறவுகளும் சிங்கள அரசாலும் அதன் இராணுவ துணைக்குழுக்களாலும் வலிந்து காணாமலாக்கப்பட்டனர். நாம் அவர்களைத்தேடி 14 வருடங்களாகப் போராடிவருகின்றோம். அதில் 8 வருடங்கள் நாம் எமது அரசியல்வாதிகளை நம்பியிருந்தோம். அப்போது சில தமிழ்த்தரப்பினரின் ஆதரவுபெற்ற, அவர்களால் 'நல்லாட்சி' என்று புகழப்பட்ட அரசு இருந்தது. இருப்பினும் அப்போதுகூட எமது அரசியல்வாதிகளால் எம்முடைய உறவுகளை மீட்டுத்தரவும், எமக்கு நீதியைப் பெற்றுத்தரவும் முடியாமல்போய்விட்டது. அப்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடன் நடைபெற்ற மூன்று சந்திப்புக்களிலும் அவர் எமக்களித்த வாக்குறுதியை மீறியதால், இலங்கை அரசாங்கத்திடம் நீதியைப் பெறமுடியாது என்றும், எனவே சர்வதேசத்திடம் நீதியைக்கோருவதாக அறிவித்து, கடந்த 2017 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 20 ஆம் திகதி எமது தொடர் போராட்டத்தை ஆரம்பித்தோம்.

இலங்கை அரசு இணையனுசரணை வழங்கிய ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் 30/1 தீர்மானத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்கள் எவ்வித முன்னேற்றத்தையும் எட்டாதபோதிலும், இலங்கை அரசுக்கு மேலும் கால அவகாசத்தை வழங்குமாறு தமிழ் அரசியல்வாதிகள் சிலர் சர்வதேச நாடுகளில் பிரசாரம் செய்தனர். கால அவகாசம் வழங்குவதற்கு ஆதரவளிக்கவேண்டாம் என்ற எமது கோரிக்கையையும் மீறி, அதற்கு ஆதரவாகச் செயற்படுவதற்குத் தீர்மானித்த அரசியல்வாதிகள் எமது துயரத்தையும் வலியையும் இழப்பயும் பொருட்படுத்தவே இல்லை.

இப்போது மீண்டும் சர்வதேசத்துக்குக் காண்பிப்பதற்காக இலங்கை அரசால் அரங்கேற்றப்படும் பேச்சு எனும் நாடகத்தில் பங்கேற்கும் அரசியல்வாதிகள் வலிந்து காணாமலாக்கப்பட்டோர் விவகாரம் தொடர்பாகவும் பேசவிருப்பதாக ஊடகங்கள் வாயிலாக அறிந்துகொண்டோம். உள்ளகப்பொறிமுறைகளில் நம்பிக்கை இழந்து, சர்வதேச நீதி ஒன்றே எமக்குத் தீர்வைப் பெற்றுத்தரும் என்ற தெளிவான முடிவுடன் போராடும் எமது வலியை மீண்டும் உங்களின் சுயலாப அரசியலுக்காக இலங்கை அரசிடம் அடகுவைக்காதீர்கள். உங்கள் நலனுக்காக சிங்கள அரசிடம் எமது கண்ணீருக்கு விலை பேசாதீர்கள். நீங்கள் உண்மையிலேயே இதய சுத்தியுடனும் தமிழ்மக்களின் நலன்கருதியுமே அரசுடன் பேச்சுக்குச் செல்வதாக இருந்தால், எமது உறவுகள் காணாமலாக்கப்படுவதற்குக் காரணமான சிங்கள இராணுவத்தை எமது தாயகமான வட, கிழக்கு மாகாணங்களிலிருந்து வெறியேறுவதற்கு அரசை இணங்கச்செய்யுங்கள். அதேபோன்று வலிந்து காணாமலாக்கப்பட்ட எமது உறவுகள் தொடர்பான சர்வதேச விசாரணையில் இலங்கை அரசின் தலையீடோ அல்லது அச்சுறுத்தல்களோ இருக்காது என்ற எழுத்துமூல உறுதிப்பாட்டினைப் பெறுவதுடன், வட – கிழக்கில் நிகழும் திட்டமிட்ட சிங்கள பௌத்தமயமாக்கலை நிறுத்துவதற்கும் எழுத்துமூல உறுதிப்பாட்டைப் பெறுங்கள்.

மேலும், தமிழ்த்தேசிய இனப்பிரச்சினைக்கான எந்தவொரு நிரந்தர அரசியல் தீர்வுக்கும் சர்வதேசத்தால் நடத்தப்பட்டு, கண்காணிக்கப்படும் பொதுவாக்கெடுப்பின் மூலம் தமது அரசியல் தலைவிதியைத் தீர்மானிக்கும் உரிமை தமிழ்மக்களுக்கு வழங்கப்படவேண்டும். இதில் சர்வதேசத்தால் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் நடைமுறைப்படுத்தப்பட்ட தீர்வுகள் தெரிவுகளாக உள்ளடக்கப்படவேண்டும் என்று அவ்வறிக்கையில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

# திருகோணமலையில் தாய்லாந்து புத்தர்!

## தீவிர ஏற்பாடுகள் முன்னெடுப்பு





திருகோணமலை நகரில் நெல்சன் திரையரங்குக்கு முன்னால் தொல்பொருள் திணைக்களம் ஆக்கிரமித்துள்ள இடத்தில் 4 அடி உயரமான புத்தர் சிலையொன்று வைக்கப்படவுள்ளதாக தகவல்கள் பரவி வருகின்றன.

இந்நிகழ்வில் நாளை (ஞாயிற்றுக்கிழமை) தாய்லாந்தில் இருந்து புத்தர் சிலை கொண்டுவரப்படுவதோடு 50 பிக்குகளும் பங்கேற்கவுள்ளனர்.

2,700 ஆண்டுகளுக்கு முன் தாய்லாந்திலிருந்து திருகோணமலைக்கு வந்து இறங்கியதாகக் கூறப்படும் பிக்குகளை நினைவுகூரும் முகமாகவும், அவர்களைக் கௌரவப்படுத்தும் முகமாகவும் அவர்கள் வந்து இறங்கியதாக மகாவம்சத்தில் கூறப்படும் திருகோணமலை நெல்சன் திரையரங்கிற்கு முன்னால் உள்ள தொல்பொருள் திணைக்களத்தால் அடையாளப்படுத்தப்பட்டுள்ள இடத்தில் இந்த நிகழ்வு இடம்பெறவுள்ளது.

தாய்லாந்திலிருந்து இன்று (சனிக்கிழமை) திருகோணமலைக்கு வருகை தருகின்ற 50 பிக்குகளும் நிலாவெளியில் விடுதி ஒன்றில் தங்கவுள்ளனர்.

அவர்கள் நாளை (ஞாயிற்றுக்கிழமை) காலை 7.30 மணிக்கு கடற்படைதளத்துக்குச் சென்று காந்தி சுற்றுவட்டப் பகுதியில் கடல் வழியாக வந்து இறங்கி பின்னர் பாத யாத்திரை மூலமாக நெல்சன் திரையரங்கு முன்னால் உள்ள 4 அரச மரங்கள் இருக்கின்ற இடத்துக்குச் செல்லவுள்ளனர்.

அங்கு தாய்லாந்திலிருந்து அவர்களால் கொண்டுவரப்படுகின்ற 4 அடி உயரமான புத்தர் சிலையை அவ்விடத்தில் வைத்து ஒரு மணித்தியாலபிரித்நிகழ்வு இடம்பெறவுள்ளது. அது நிறைவு பெற்றதும் ஜெயசுமராம விகாரைக்குச் சென்று அங்கிருந்து முற்பகல் 11.30 மணியளவில் கண்டி நோக்கிய தாய்லாந்யை அவர்கள் தொடங்குவார்கள் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இதன்போது தமிழீழவிடுதலைப்புலிகளுக்கும், இலங்கை அரசாங்கத்துக்கும் இடையில் சமாதான ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டிருந்த காலகட்டத்தில், 2005 ஆம் ஆண்டு திருகோணமலை நகரில் புத்தர் சிலை வைக்கப்பட்டமையால் பெரும் கலவரம் இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# இந்தியாவில் இருந்து இலங்கைக்கு கஞ்சாகடத்த முயன்ற அறுவர் கைது








இந்தியா– தூத்துக்குடியில் இருந்து இலங்கைக்கு கடத்துவதற்காக தயார்படுத்தப்பட்டிருந்த 2090 கிலோ கஞ்சாவுடன் 6 பேர் தூத்துக்குடி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். சந்தேகநபர்கள் கடந்த வெள்ளிக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்தியாவில் ஆந்திரா மாநிலத்தில் இருந்து தொடர்ச்சியாக கும்பல் ஒன்று திட்டமிட்டு தமிழகம், கேரளா மற்றும் தூத்துக்குடிக்கு கஞ்சாவை விற்பனை செய்துவருகின்றதாக தூத்துக்குடி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த நிலையில் 4 கோடி ரூபா மதிப்பிலான 2090 கிலோ கஞ்சாவை கடத்தி வந்து, தூத்துக்குடி கடற்கரை பகுதிகளில் விற்பனை செய்து வருவதாகவும், மேலும் இந்த கஞ்சாவை இலங்கைக்குக் கடத்த இருந்ததாகவும் தெரியவந்ததுள்ளது. இதனையடுத்து பொலிஸார் மேற்கொண்ட நடவடிக்கையின்போது சந்தேகநபர்கள் 6 பேரை தூத்துக்குடியில் கைது செய்துள்ளதுடன் 2090 கிலோ கஞ்சா, 25 ஆயிரம் ரூபா பணம், கடத்தலுக்கு பயன்படுத்திய கார், மற்றும் 8 கையடக்கத் தொலைபேசிகளும் மீட்கப்பட்டுள்ளன.

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## அன்பின் வெளிப்பாடு வன்முறையாகலாமா?

**தமிழ் மொழியே பக்தி மொழி என்று வர்ணிக்கப்படுவது. அதற்குக் காரணம் இறைவன் மீது தமிழில் பாடப்பட்டுள்ள பல பாடல்கள். திருவாசகம் எனும் மணி வாசகத்துக்கு உருகாதார் ஒருவருண்டோ எனும் அளவிற்கு இறைவன் மீது உருகி உருகிப் பாடியவர்கள் தமிழர்கள். பால் வேறுபாடின்றி திருமால் மீது ஆண்டாள் உருகி உருகிப் பாடிய பாடல்கள் மெய்சிலிர்க்க வைக்கும். அவையெல்லாம் இறைவன் மீது பாடப்பட்டாலும் அன்பின் வெளிப்பாடுள்தானே!**

**அதேபோன்று கற்பொழுக்கம் களவொழுக்கம் என்று காதலுக்கு ஒழுக்கத்தை வகைப்படுத்தியவன் தமிழன். 2000 ஆண்டுகளுக்கு முன்பே காதலையும் வீரத்தையும் மட்டுமே பாடி வைத்திருக்கிறார்கள் என்றால் அவர்கள் வாழ்வு எவ்வளவு தூரம் காதலும் போரும் நிறைந்ததாக இருந்திருக்கும்? அப்படிப் பட்டவர்கள் வழி வந்த தமிழர்கள் இன்று என்ன செய்துகொண்டிருக்கின்றார்கள். அன்பிற்கும் உண்டோ அழைக்குந் தாழ் என்று கேட்டவனின் வழித்தோன்றல்கள் அன்பை வன்முறையால் கையாண்டு கொண்டிருக்கிறார்கள்.**

**காதலை ஏற்க மறுத்தவளைக் கொலை செய்துவிட்டுத் தானும் தற்கொலை செய்துகொள்வது, காதல் முறிவு ஏற்பட்டுவிட்டால் தற்கொலை செய்துகொள்வது, காதலித்தவள் பிரிந்துவிட்டால் அவளை பொது வெளியில் அவதூறு செய்வது, என்று அன்பின் முடிவிடமாக வன்முறையைக் கொண்டு வந்து நிறுத்தி வைத்திருக்கிறார்கள் இன்றைய தமிழர்கள்.**

**இன்று அதிகாலையில் வவுனியாவில் இப்படி ஒரு சம்பவம் இடம்பெற்றிருக்கிறது என்பது பெரும் வேதனை தருகின்றது. தனது காதலை ஏற்க மறுத்தவளை, அவள் திருமணம் செய்து ஒரு குழந்தைக்குத் தாயான பின்னரும் விடாமல் துரத்திக் கொன்றுவிட்டுத் தானும் தற்கொலை செய்துள்ளதான சம்பவம், எமது மனங்கள் எவ்வளவு தூரம் விகாரம் அடைந்திருக்கின்றன என்பதை வெளிப்படுத்திப் பயமுறுத்துகின்றன.**

**அன்பு என்பது தன்னலமற்றது. அது பதிலுக்கு எதையும் எதிர்பார்க்காதது. அதனால்தான் இறைவன் மீது அளவு கடந்த அன்பு வைக்க முடிந்தது. அப்படியிருக்கும்போது தாம் அன்பு வைத்த ஒரு உயிரை வாட்டி வதைக்கும் ஒரு மனோநிலை எங்கிருந்த வந்தது? ஏன் இப்படி மனங்கள் விகாரமடைந்து போயின? யார் இதற்குப் பொறுப்பு? யார் இதனைச் சரிசெய்வது?**

**போரால் ஏற்பட்ட மனச் சிதைவுளின் வெளிப்பாடா இது என்பது ஆராயப்பட்டு, தீர்வுக்கான வழி காணப்படவேண்டும். எதற்கெடுத்தாலும் கொல்வது என்கிற மன நிலையிலிருந்து தமிழர்களை வெளியே எடுத்துவருவதற்கான நடவடிக்கைகள் மீது அதிகவனம் செலுத்தப்படவேண்டியுள்ளது. எதற்கெடுத்தாலும் கொல்வது என்று சொல்வதற்குக் காரணம், இலங்கையின் தற்கொலைச் சராசரியைவிட வடக்கு கிழக்கில் அதன் சராசரி மிக அதிகம். அது உலகச் சராசரியுடன் ஒப்பிடும்போது இன்னும் அதிகம். தற்கொலை என்றாலும் உயிரைக் கொல்வதுதானே. கொலை எப்படி அன்புக்குத் தீர்வாகும்?**

**அதுவும் பொருளாதார நெருக்கீடுகள் அதிகரித்திருக்கும் இன்றைய நிலையில் இத்தயை கொலைகள், தற்கொலைகள் அதிகரித்துள்ளன. முறையான, தீர்க்கமான ஆய்வுகள் இதன் மீது இல்லையாயினும் ஊடங்களின் வரும் இத்தகைய செய்திகளில் இருந்தே இவற்றின் அதிகரிப்பை உணர்ந்துகொள்ள முடிகின்றது. அவற்றை நிவர்த்திக்க சமூக அக்கறையுள்ள கட்டமைப்புக்கள் தீவிர நடவடிக்கை எடுக்கவேண்டும்.**

**வாழக்கையைச் சொல்லிக் கொடுக்கும்போது காதல் முறிவுகளை, அன்பு முறிவுகளை எப்படிக் கையாள்வது என்பதைப் பெற்றோர் தமது பிள்ளைகளுக்குக் குறிப்பாகத் தமது ஆண் பிள்ளைகளுக்குச் சொல்லிக்கொடுக்கவேண்டும். அப்போதுதான் இதுபோன்ற வீண் சாவுகளைத் தவிர்க்க முடியும்.**

# சகலரும் ஒன்றிணைந்து அரசமைப்பதன் மூலமே நாட்டை முன்னோக்கிக் கொண்டுசெல்ல முடியும்

## மைத்திரி ஆலோசனை



சமுர்த்திக் கொடுப்பனவுகள் உள்ளிட்ட நலன்புரி உதவிகளை வழங்கும் போது தகுதியில்லாதவர்களுக்கும் அவை வழங்கப்படுகின்றன.

இந்த பிழையான வழியில் இருந்து மீண்டு நாட்டை முன்னுக்கு கொண்டு செல்ல அனைவரும் ஒன்றிணைந்து தேசிய அரசாங்கம் அமைக்கப்படவேண்டும் என முன்னாள் ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேன தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற நலன்புரி நன்மைகள் சட்டத்தின் கீழ் அஷ்வசும வேலைத்திட்டம் பிரேரணை மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் –

நாட்டில்கடந்த 40 வருடங்களில் தேர்தல் காலத்தில் அரசியல்வாதிகள் வழங்கும் நலன்புரிகள் மற்றும் நன்மைகள் தொடர்பானவாக்குறுதிகள் இந்த நாட்டின் பொருளாதாரத்துக்கு பெரிதும் தாக்கத்தை செலுத்தின. ஒவ்வொரு கட்சியும் ஏட்டிக்கு போட்டியாக இவ்வாறு வாக்குறுதிகளை வழங்கி நிவாரணங்கள், நலன்புரி விடயங்களை வழங்கியது. இவ்வாறான நிலைமையில் பொருள்களின் விலைகள் அதிகரிக்கப்படும்போது நெருக்கடிகள் ஏற்பட்டன. இன்று இளைஞர்கள் ஆயிரக்கணக்கில் நாட்டைவிட்டு வெளிநாடுகளுக்குச் செல்வதற்கும் வறுமையே காரணமாகும்.

சமுர்த்தி கொடுப்பனவு விடயத்தில் தகுதியில்லாதவர்களுக்கும் அது கிடைப்பதாக நாங்கள் தொடர்ந்து தெரிவித்து வருகிறோம். ஆனால் தகுதி அற்றவர்களை நீக்குவதற்கு யாரும் முற்படுவதில்லை. அதனை நீக்க முற்படும்போது ஏற்படுகின்ற அரசியல் தலையீடு காரணமாக தகுதியற்றவர்கள் தொடர்ந்தும் அதில் நன்மை பெற்று வருகின்றனர்.

இதேவேளை அனைத்து துறைகளும் பொருளாதார நெருக்கடிகளில் சிக்கியுள்ளன. விவசாயிகள் இவ்வாறாக அதிகளவில் பாதிக்கப்பட்டுள்ளனர். இவ்வாறாக விவசாயம் வீழ்ச்சியடைவது உணவு பற்றாக்குறைக்கு சென்று, வறுமை நிலைமை ஏற்பட்டு நோய் அதிகரிக்கும். அதனால் வைத்தியசாலைகள் நிறையும். இதற்காக அதிகளவில் செலவிட நேரிடும். இதனால் விவசாயத்தைப் பாதுகாக்கத் தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். இதனால் வருமான முரண்பாடுகளைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்தால் வறுமை நிலைமைக் குத் தீர்வு காண முடியுமாக இருக்கும்.

நலன்புரி மற்றும் நிவாரணங்களை வழங்கும் போது அரசாங்கங்கள் தமது அரசியல்வாதிகள் ஊடாகத் தமக்கு நெருக்கமானவர்களுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. கொவிட் தொற்று காலத்தில் முதலில் கொண்டு வரப்பட்ட தடுப்பூசிகளை அரசியல்வாதிகளின் உறவினர்களுக்கே முதலில் வழங்கப்பட்டன. எனவே எந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்தாலும் இந்தத் தவறுகள் இடம்பெறுகின்றன. அதனால் அந்தத் தவறுகளை சரிசெய்து நாட்டை சரியான பாதையில் கொண்டுசெல்ல அனைவரும் ஒன்றிணைந்து அரசாங்கம் அமைக்கவேண்டும் என தற்போது தெரிவிக்கின்றனர்.

ஆனால் தேசிய அரசாங்கம் அமைத்து ஊழல், மோசடிக்காரர்களை அகற்றி உண்மையான அரசியல் செய்பவர்களைத் தெரிவுசெய்துகொண்டு நாட்டை முன்னுக்கு கொண்டுசெல்ல வேண்டும் என நாங்கள் ஆரம்பத்தில் இருந்து தெரிவித்து வருகிறேம். அத்துடன் தற்போதுள்ள அரசியல் முரண்பாடுகள் காரணமாக எதிர்வரும் தேரதல்களில் எந்தக் கட்சிக்கும் தனித்து ஆட்சி செய்ய சந்தர்ப்பம் கிடைப்பதில்லை. அதனால் கட்சிகள் பல ஒன்றிணைந்து அரசாங்கம் அமைக்கவேண்டி ஏற்படும். – என்றார்.

# சர்வதேச குத்துச்சண்டை போட்டியில் வடக்கு மாகாண வீரர்கள் சாதனை

சர்வதேச குத்துச்சண்டை போட்டியில் இலங்கையைசேர்ந்தஏழுவீர,வீராங்கனைகள் பதக்கங்களை சுவீகரித்துள்ளனர்.

இலங்கைமிக்ஸ்பொக்சிங்அமைப்பின் தலைவர்எம்.எஸ்.நந்தகுமார்தலைமையில் சென்ற வீர, வீராங்கனைகள் ஐந்து தங்கப் பதக்கங்ளையும், இரண்டு வெள்ளி பதக்கங்களையும் வென்று நாட்டுக்குப் பெருமை சேர்த்துள்ளனர்.

உலக மிக்ஸ் பொக்சிங் அமைப்பின் ஏற்பாட்டில் இந்தியாவின் காஷ்மீர் மாநிலத்தில் 2023 மே 7,8 மற்றும் 9 ஆம் திகதிகளில் நடைபெற்ற சர்வதேச குத்துச்சண்டை போட்டியில் கலந்து கொண்டு வெற்றி பெற்ற பதக்கங்கள் ஊடாக இலங்கை சர்வதேச ரீதியில் இரண்டாம் இடத்தைப் பெற்றுள்ளது.

இந்தச் சாதனையை வடக்கு மாகாணத்தில் இருந்து சென்ற வீரர்கள் நிகழ்த்தியுள்ளனர்.

இவர்களின் இந்தச் சாதனையைக் கௌரவிக்கும் முகமாக வவுனியா கந்தசாமி கோவில் முன்றிலில் மலர் மாலைஅணிவித்துபொன்னாடைபோர்த்தி கௌரவிக்கப்பட்டனர். சண்முகநாதன் சஞ்சயன் (துங்கம்), தட்சணாமூர்த்தி மகிா (துங்கம்);,ஜெயவர்த்தன செவுமினி இமோ (துங்கம்), குமார் கிருசாந்தன் (வெள்ளி), முருகன் வினோத் (துங்கம்). சிவகுமார் தர்ணிகா (துங்கம்), ராமநாதன் திவ்யா (துங்கம்) ஆகிய வீர, வீராங்கனைகளே நாட்டுக்கும் தமது பிரதேசத்துக்கும் பெருமை தேடித்தந்துள்ளனர்.

# யாழ். பாடசாலை மாணவர்களுடன் ஜனாதிபதி ரணில் கலந்துரையாடல்!



யாழ்.மாவட்டமாணவர்களுடன் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க கலந்துரையாடலொன்றை மேற்கொண்டுள்ளார்.

கல்வி அமைச்சால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள நிகழ்வு கொழும்பு ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க ஞாபகார்த்த கண்காட்சி நிலையத்தில் கடந்த வெள்ளிக் கிழமை ஆரம்பமாகியது.

இக்கண்காட்சியில் பங்கெடுக்கநாடாளுமன்றஉறுப்பினர் அங்கஜன் இராமநாதனின் ஒருங்கமைப்பில் யாழ்ப்பாணத்திலிருந்து சுமார் 750 மாணவர்கள் வருகைதந்தனர். நிகழ்வில், ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க யாழ். மாவட்ட மாணவர்களை சந்தித்து உரையாடியுள்ளார்.

இதன்போது, எதிர்கால கல்வி முன்னேற்றத்தில் யாழ். மாவட்டத்தின் பங்களிப்பு நாட்டுக்கு அவசியம் என்றும், தொழிற்கல்வியில் அதிகம் ஈடுபாடு காட்டுமாறும் ஜனாதிபதி மாணவர்களை கேட்டுக்கொண்டுள்ளார்.

# கோட்டா – கப்ரால் சென்ற பாதையில் ரணில் அரசாங்கமும் பயணிக்கின்றது

## சாடுகின்றார் சம்பிக்க ரணவக்க



கோட்டாபய - கப்ரால் சென்றதவறானபாதையில்தற்போதைய அரசாங்கமும் செல்கிறது. 2023 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தின் பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய நாணயம் அச்சிட அரசாங்கம்தீர்மானித்துள்ளது.

கடன் பெறல், நாணயம் அச்சிடல் இதனைத் தவிர்த்து எந்த திட்டமும் அரசாங்கத்திடம் இல்லை என நாடாளுமன்றத்தில் சுயாதீனமாக செயற்படும் 43 ஆவது படையணியின் தலைவர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில்இடம்பெற்ற அஸ்வெசும நலன்புரி நன்மைகள் மற்றும் கொடுப்பனவுகள் தொடர்பான விவாதத்தில் உரையாற்றும் போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர்மேலும்உரையாற்றியவை வருமாறு -

மொத்த தேசிய உற்பத்தியை அதிகரித்தால் மாத்திரமே நடைமுறையில் தோற்றம் பெற்றுள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முடியும்.

திறைசேரி முறிகள் தொடர்பான சட்டமூலத்தை தற்போது அவசரமாகக் கொண்டு வந்துள்ளனர். இது முறையாகக்கலந்துரையாடப்படாது கொண்டு வரப்பட்டுள்ளது. இந்த அரசாங்கமும் முன்னாள் அரசாங்கம் போன்றே செயற்படுகின்றது.

கோட்டாபய ராஜபக்ஷ. அஜித் நிவாட் கப்ரால் உள்ளிட்டோர் சென்றபாதையிலேயே தற்போதைய ஆட்சியாளர்கள் செல்கின்றனர்.

இவர்களால்தான் அதிகளவில் பணத்தை அச்சிடவும், அதிக வட்டி வீதத்தையும் அறவிடவும் நேர்ந்தது. வரவு - செலவுத் திட்டத்தின் பற்றாக்குறையையும் கடந்து நாங்கள் செல்கின்றோம். வருமானத்தை விடவும் செலவு அதிகரித்து மீண்டும் விழப் போகின்றோம். மத்திய வங்கி சட்டமூலத்தை கொண்டுவரத் தீர்மானிக்கப்பட்டிருந்தது. ஆனால் அதனை விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளாமல் பிற் போடப்பட்டது. மத்திய வங்கி சுயாதீனப்படுத்தப்பட்டால் அரசாங்கத்தின் விருப்பத்துக்கு அமைய திறைசேரி உண்டியல் எண்ணிக்கையை அதிகரித்துக்கொள்ள முடியாது. ஆகவே அரசாங்கத்தின் முறையற்ற செயற்பாடுகள் பாரிய நெருக்கடிகளை ஏற்படுத்தும்.

சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளுக்கு அமைய அரச மற்றும் தேசிய கடன்களை மறுசீரமைக்கும் போது சமூகக் கட்டமைப்பில்பாரியபிரச்சினைகள் தோற்றம் பெறும். ஆகவே, சமூகக் கட்டமைப்பின் தோற்றம் பெறும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண அரசாங்கம் விசேட கவனம் செலுத்த வேண்டும். - என்றார்.